1810

1810

# TAMIL COUNTRY READERS

## FORM I

BY

**Pandit N. KANAGARAJA AYYAR,**

Vidwan, Proficient in South Indian History
and Dravidian Languages (Madras University),
Tamil Pandit, Maharajah's College, Pudukottah.

OFFICE OF THE ... BOOKS
30 SEP 1933
MADRAS

V. S. SWAMINATHAN

PUBLISHER :: MADURA

[Price As 7

TB
O3i(6)
N33
86143

# தமிழ் நாட்டு வாசகம்

## ஆறாம் வகுப்பு

(முதல் பாரத்திற்கு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 SEP 1933
MADRAS

புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

**வித்வான் நா. கனகராஜ ஐயர்**

எழுதியது

மதுரை

**வி. சூ. சுவாமிநாதன்**

வெளியிட்டது

பதிப்புரிமை] [விலை அணா, 7

1164
494.81186
TB
N33

# முகவுரை

தமிழ் நாட்டிலே சென்ற சில ஆண்டுகளாக ஆங்கில கலாசாலைகளிலே பயிலும் மாணவர்க்குரிய தமிழ்ப் புத்தகங்கள் புதுமை புதுமையான பொருள்களைக்கொண்டு பல நூற்றுக் கணக்காக வெளிவருகின்றன. தமிழ்ப் பயிற்சியில் ஊக்கமும் அபிமானமும் அதிகமாய்ப் பெருகிவரும் இந்நாளிலே இன்னும் அநேக புதுப் புத்தகங்கள் தோன்றவும் இடம் உண்டு. மீனாக்ஷி தமிழ் வாசகம் என்ற பெயரால் சில ஆண்டுகளின் முன்பு வெளிவந்த எனது ஆரம்ப வகுப்புப் புத்தகங்களை ஆதரித்து ஊக்கிய ஆசிரியர்களும் அதிகாரிகளும் பிற அன்பர்களும், தமிழ் நாட்டு வாசகம் என்ற புதுப்பெயரோடு வெளிவருகின்ற I, II, III பாரங்களுக்குரிய புத்தகங்களையும் மனமுவந்து ஆதரித்து நன்மை புரிவார்கள் என்று எதிர் பார்க்கிறேன். இப்புத்தகங்களிலே இக்காலத்துக்குரிய புதுமைகள் பலவும், பழமையான தமிழ் மொழியின் பெருமையை விளக்கும் பண்டைச் செய்திகள் சிலவும் ஏற்கும் இடம் அறிந்து அமைக்கப்பட்டுள்ளன. இதன்கண் வகுப்புக்களின் தகுதிக் கேற்ற பாட வகைகள் பலநாளைய ஆராய்ச்சியின் பிறகு சேர்க்கப்பட்டுள்ளன. புதுமையும் பழமையும் பொருந்திய செய்யுட்களும் அமைந்துள்ளன.

இதனைப் பதிப்பித்து உலகிற்குதவ முன் வந்த மதுரை நகரத்துப் புத்தக வியாபாரி ஸ்ரீமான் வி. சூ. சுவாமிநாதனுக்கு, என் மனமார்ந்த வந்தனங்கள் உரியனவாம்.

புதுக்கோட்டை, 25-8-'33. } 86143 நா. கனகராஜ ஐயர்

# கடவுள் வாழ்த்து

அறிவை யருளும் அரும்பொருளே
அறிவி னுருவாம் பெரும்பொருளே
சிறியர் எமது சிந்தையினிற்
சிறக்க வமர்ந்த செழும்பொருளே
குறியி னுருவம் இதுவெனநூல்
குறிக்க வியலாக் குறிப்பொருளே
நெறியில் நிறுத்தி நிலைத்தபயன்
நிறைய வருள்க பரம்பொருளே. (1)

எவர்எப் பெயரால் இசைத்திடினும்
ஏற்குங் கடவுட் பெருமானே
தவமிக்கவர்தம் உளத்திருக்கும்
தவத்தின் பயனே யறிவுருவே
உவகைக் கருத்தோ டருங்கலைகள்
உளத்தி லடைக்கப் புகுவோம்எம்
கவனத் தொருமை கலந்திடவே
கருணை பொழிக பரம்பொருளே. (2)

எங்கும் நிறைந்த நிறைவானாய்
எவையும் வல்லாய் எம்பெருமான்
பொங்கும் உலகப் பொருளாவாய்
பொருளு ளுயிராய்ப் பொலிகின்றாய்
தங்கும் உருவம் பலவுமுள
தலைவா வுருவ மில்லாதாய்
இங்கு வருக வருள்பொழிக
இனிய கருணைப் பரம்பொருளே. (3)

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் துணை | ... 1 |
| 2. | பல நாட்டுச் சிறுவர் (முதற் பாகம்) | ... 5 |
| 3. | கல்விச் சிறப்பு | ... 11 |
| 4. | இடியும் மின்னலும் | ... 18 |
| 5. | எங்கள் ஊர் (செய்யுள்) | ... 22 |
| 6. | பல நாட்டுச் சிறுவர் (இரண்டாம் பாகம்) | ... 23 |
| 7. | எகிப்திய கோபுரங்கள் | ... 31 |
| 8. | உண்மை நட்பு | ... 36 |
| 9. | பவளம் | ... 42 |
| 10. | மகமது நபி (முதற் பாகம்) | ... 46 |
| 11. | சோப்பின் சொந்தக் கதை | ... 52 |
| 12. | நல்லோர் இணக்கம் | ... 57 |
| 13. | புலவரின் மனோ தைரியம் | ... 62 |
| 14. | திருடன் திருந்தியது (செய்யுள்) | ... 66 |
| 15. | மகமது நபி (இரண்டாம் பாகம்) | ... 71 |
| 16. | பிறரிடம் பேசும் வழி | ... 76 |
| 17. | மூன்று விதிகள் | ... 80 |
| 18. | தமிழ்ச் சங்கம் | ... 85 |
| 19. | நன்றி மறந்தவன் | ... 89 |
| 20. | ஸ்தல சுய ஆட்சி | ... 95 |
| 21. | ராணு பிருதிவி | ... 98 |
| 22. | இராமலிங்க சுவாமிகள் | ... 102 |
| 23. | ஆகாய கமனம் | ... 107 |
| 24. | தக்கன தகாதன | ... 113 |
| 25. | கொசுக்களும் விஷஜ்வரமும் | ... 116 |
| 26. | பஞ்சதந்திரக் கதை | ... 121 |
| 27. | மூதுரை | ... 124 |
| 28. | நல்வழி | ... 125 |
| 29. | நீதி வெண்பா | ... 127 |
| 30. | சதகச் செய்யுள் | ... 128 |

ஸ்ரீ:

# தமிழ் நாட்டு வாசகம்

## ஆரும் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR OF ...
30 SEP 1933
MADRAS

### 1. கடவுள் துணை

**நாம்** நினைத்தவை நிறைவேறும் பொருட்டு ஒவ்வொரு காரியம் தொடங்கும்போதும் கடவுளைத் தியானித்துத் தொடங்குகிறோம். கடவுள் என்பவர் யார்? ஆணு, பெண்ணு, மரமா, கல்லா? அவர் எப்படி இருப்பார்? எங்கிருப்பார்? என்ன செய்ய வல்லவர்? இம்மாதிரியான வினுக்களுக்கு விடைகூற நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். இடம் காலம் உருவம் குணம் தோற்றம் வளர்ச்சி ஒடுக்கம் முதலிய ஒருவகைக் கட்டுக்கும் அடங்காத ஒரு பொருளைக் கடவுள் என்று எண்ணி வணங்குகிறோம். கடவுள் ஆணுமல்லர்; பெண்ணும் அல்லர்; அலியுமல்லர்: அஃறிணைப் பொருள்களில் உயிர் உள்ள பசு முதலியன போல்பவருமல்லர். உயிர் இல்லாத மண் கல் போன்றவரு மல்லர். எங்கும் நிறைந்தவராய் எல்லாம் வல்லவராய் எல்லாம் அறிந்தவராய் உலகவுயிர்களில் உள்ளுயிராய் விளங்கும் பரம்பொருளே கடவுள் எனப்படுகிறார்.

கடவுள் என்ற ஒன்று இருப்பது மெய்யாகில் நம் கண்ணுக்குப் புலப்பட வேண்டுமே என்று சிலர் கேட்கலாம்.

கண்ணுற்கண்ட பொருளெல்லாம் இருப்பதாகவும் காண அருமையாய் இருப்பவையெல்லாம் இல்லாதவையாகவும் துணிந்து கூற முடியுமா? வெயில் வேளையில் மிகுந்த தாகத்தோடு இருக்கும் ஒருவன் தன் கண்முன்னே கொஞ்ச தூரத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதாய்க் காண்கிறுன். ஆவலோடு அங்கே நெருங்கிப் போய்ப் பார்த்துத் தண்ணீர் இல்லாமல் வெறு நிலமாய் இருக்கக்கண்டு ஏமாறுகிறுன். பிறகு தான் கண்டது கானலாகிய பொய்த் தோற்றமே யென்று அறிகிறுன். காற்றைக் கண்ணுற் கண்டவன் யாருமில்லை. ஒவ்வொருவனும் காற்று என்றதோர் பொருள் உண்டு என்று உணர்கிறுன். கண்ணுற் காணலாகாததாயினும் காற்று வீசுகிறது என்று சிறு குழந்தையும் எளிதில் அறிகின்றது. இந்த இரண்டு உதாரணங்களால் நாம் கண்ணுற் கண்டும் பொய்யாகும் பொருள்களும் காணுமலே மெய்யாய் இருக்கத்தக்க பொருள்களும் உண்டு என்று அறியலாம். இவைபோல நாம் கண்ணுற் காண இயலாவிடினும் நம்மையும் இன்னும் உலகில் உள்ள கோடானுகோடி ஜீவராசிகளையும் படைத்துக் காத்து அருள்புரியும் பரம்பொருள் ஒன்று உண்டு என்று நாம் உணரவேண்டும்.

கடவுள் உண்டு என்பதை எளிதாக இரண்டு உதாரணங்களால் அறியலாம். அழகாய் அமைந்த ஒரு சித்திரத்தைப் பார்க்கிறேம். அதனை எழுதிய ஒரு ஓவிய நூல் வல்லான் இருக்கவேண்டும் என்று நாம் அவனைக் காணுமலே ஊகித்துணர்கிறேம். சிற்பம் ஒன்றைக் கண்டவுடன் அதனை அமைத்த சிற்பி ஒருவன் உண்டு என்று உணர்கிறேம். நன்கு வேலைப்பாடமைய நிருமிக்கப் பெற்ற ஒரு பெரிய கோயிலைக் கண்டதும் அதனை அமைத்த பல தொழிலாளரையும்பற்றி நினைத்துப் பாராட்டுகிறேம். இவ்வண்ணமே, என்றும் இளமையும் அழகும் புதுமையும் உடையதாய் எங்கும்

தோன்றுகின்ற இயற்கைக் காட்சியை உடைய உலகத்தைக் காணும்போது அதைப் படைத்த ஒரு தலைவன் இருத்தல் வேண்டும் என்று ஊகிப்பது இயல்பன்றோ?

இன்னொரு வகையாலும் கடவுள் உண்டு என உணரலாம். குழந்தைப் பருவத்தில் நாம் நம் தாயை நமக்குப் பாலூட்டுதல் முதலிய காரணங்களால் இயற்கையாக அறிந்தோம். நாம் நமது தந்தை இன்னார் என அறிந்தது நம் இயற்கை உணர்வாலன்று. தாய் தனது அன்பின் செல்வத்துக்குத் தந்தையைக் காட்டிக் கொடுக்கிறாள். அதன் பிறகே குழந்தை தந்தையை உணர்ந்து அப்பா என்று அழைக்கத் தொடங்குகிறான். தாயின் சொல் நாம் பக்தியோடு ஏற்றுக் கொள்ளும் உண்மைச் சொல் ஆவது போலவே பெரியோர் சொல்லும் நம்பத்தக்கதாம்.

நம் நாட்டை ஆளும் அரசர் இங்கிலாந்தில் இருக்கிறார். அவர்க்கு நாம் தினந்தோறும் மனப் பூர்வமாக வாழ்த்துக் கூறுகிறோம். அவர் நமக்குச் செய்துவரும் நன்மைகளை அனுபவிக்கிறோம். கோடிக்கணக்கான ஜனங்கள் நிரம்பிய நம் நாட்டில் அரசரைக் கண்ணுற் கண்டவர் எத்தனை பேர் இருப்பர்? பதினாயிரத்துக்கும் குறைவென்றே துணிந்து கூறலாம். ஆனால் நாம் எல்லோரும் பெரியோர் சொல்வதைக் கேட்டு நம் அரசர்பிரான் இங்கிலாந்தில் வாழ்கின்றார் என்று உறுதியாய் நம்புகிறோம். அரசரது உருவச் சித்திரங்களைக் கண்டு அவரை அறிந்து கொள்கிறோம். பல்லாயிரக் கணக்கான பலவகைச் சித்திரங்களை அடுக்கிய ஒரு சித்திர மாளிகையிற் புகுந்தாலும் அரசர் உருவச் சித்திரத்தை நாம் விரைவில் எளிதில் அறிந்து கொள்கிறோம். இவ்வுணர்ச்சி பெரியோர் சொல்லில் நமக்கு உண்டான நம்பிக்கையால் எழுந்தது என்பது மெய்யேயன்றோ? தகுந்த முயற்சி செய்தால் அரசரை யாரும் கண்

ணுற் காணலாம். அதுபோலவே உரிய முறையால் முயன்ருல் அருளினுருவமுடைய கடவுளையும் காணலாம். கேள்வியுணர்ச்சி நம்பிக்கையை உதவியாக உடையது.

ஒன்றிலும் அடங்காத பொருளை எப்பெயரால் அழைத்தாலும் என்ன? கடவுளுக்கு உருவம் உண்டு என்று சிலர் சொல்வர். உருவம் இல்லை என்று சிலர் சொல்வர். உருவம் உண்டு என்று நம்புவோர் இன்ன உருவம்தான் உண்டு, வேருெரு உருவம் இல்லையென்று கூறல் கூடாது. அரசவுருவச் சித்திரத்தைக் கண்டு அரச வுணர்ச்சி யுண்டாவது போலக் கடவுளுருவச் சிலைகளைக் கண்டு கடவுள் பக்தி உண்டாகும். உருவச் சிலைகள் அவரவர் மனப்பான்மைக்குத் தக்கபடி அமையும். உலகம் தோன்றிய காலம் முதல் கடவுளுக்கு உருவம் அமைத்து வணங்கும் வழக்கம் எல்லா நாடுகளிலும் இருந்து வருகிறது. ஞான மிகுதியால் உருவமில்லாத கடவுளைத் தியானம் செய்வோர் மனத்தில் ஒரு உருவம் அமையக் காண்பர்.

எல்லா மதத்தார்க்கும் கடவுள் ஒருவரே. எவரெவர் எந்தெந்த உருவம் சொன்னுலும் அவ்வெல்லா உருவங்களுக்கு மேலும் அவர்க்கு உருவம் உண்டு. உருவம் இல்லாத நிலையும் உண்டு. ஒன்று உண்டு மற்ருென்று இல்லை யென்ருல் எல்லாம் கடந்த கடவுள் ஒரு கட்டுக்கு அடங்கியவராய் விட நேரிடும். எங்கள் கடவுள் உங்கள் கடவுள் என்று பிரித்துப் பேசுவது அறியாமையே. ஒரே ஊருக்குச் செல்லும் பல வழிகள் போலவும் ஒரே குளத்தில் இறங்கும் பல படித்துறைகள் போலவும் உலகத்தில் உள்ள பல மதங்களும் கடவுளை அறியும் பல துறைகளேயன்றி வெவ்வேறு கடவுளரைக் கொண்ட வழிகள் அல்ல. இந்த உண்மையை அறிந்து எல்லாரையும் நம்மைப் போலவே தெய்வ பக்தி உள்ளவராக நம்பி நாமும் அந்தரங்க பக்தியோடு கடவுளைத் தியானம்

செய்து வருவோமாகில் உலகில் நாம் அடையக் கூடாதது ஒன்றும் இல்லை.

---

## 2. பல நாட்டுச் சிறுவர் (முதற் பாகம்)

பிள்ளைகளே, இளமைப் பருவம் மிகவும் ஆனந்தமான பருவம் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. உங்களைப்போல இளம்பருவத் தின்பங்களை அனுபவிக்கும் பிள்ளைகள் எந்தக் காலத்திலும் ஒரே மாதிரியாய் இருக்கிறார்கள். சிறுவர்கள் இன்றும் மூவாயிர வருஷங்களுக்கு முந்திய காலத்திலும் இந்நாட்டிலும் பல்லாயிரக் காதங்களுக்கப்பால் உள்ள பிறநாடுகளிலும் தங்கள் இயற்கைக்குணம் ஒரே மாதிரியாய் அமையப்பெற்றிருக்கிறார்கள். இவ்வுண்மையை விளக்கும் பொருட்டு மூவாயிர வருஷங்களுக்கு முன்பு எகிப்திய தேசத்தில் வாழ்ந்திருந்த சிறுவர்களைப் பற்றியும் சமீபகாலத்திற் பிற நாடுகளில் வாழ்ந்துவரும் சிறுவர்களைப் பற்றியும் வழங்கும் சரித்திரங்களைக் கவனிப்போம்.

எகிப்திய தேசம் என்பது ஆப்பிரிக்கா கண்டத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒரு பெரிய தேசம். அது இக்காலத்தில் மகமதிய மன்னர் ஒருவரால் ஆளப்பட்டு வருகிறது. உலகத்தில் மிகவும் பழமையான நாகரிகம் பெற்ற தேசங்களில் எகிப்திய தேசமே சிறந்தது என்பது பலர் கொள்கையாம். இத்தேசத்தின் பூர்வ சரித்திரம் இன்றும் இத்தேசத்தில் அபூர்வக்காட்சிகளாய் விளங்குகின்ற பிரமிட் என்ற கூரிய நுனியையுடைய கோபுரங்களின் உள்ளே புதைந்திருக்கும் பலவித ஆதாரங்களால் தெரியவருகிறது. எகிப்தியர் மூவாயிர வருஷங்களின் முன் எழுதவும் படிக்கவும் உபயோகித்த பாபிரஸ் என்ற ஓலைகள் இன்றும் இக்கோபுரங்களினடியிற் கிடைக்கின்றன. இப்படிக் கிடைக்கும் புத்தகங்களிற்

சில அக்காலத்து எகிப்தியச் சிறுவர் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டு எழுதிய கையெழுத்துப் பிரதிகளாம். அப்புத்தகங்களிற் காணப்படும் விஷயங்கள் மிகவும் அருமையானவை. நாமும் சிறு வயதிற் சட்டம் சரவை எழுதினேம். அப்படி எழுதிய ஏடுகளைக் காப்பாற்றி வைக்க வேண்டிய அவசியமில்லாமலே அவை அழிந்து போயின. எகிப்திய சிறுவர் அந்நாளில் எழுதிய ஏடுகளில் இக்காலச் சிறுவர்க்கும் பெரியர்க்கும் உதவக்கூடிய அநேக நீதி வாக்கியங்கள் இருக்கின்றன.

இந்தப் புத்தகங்களால் நாம் அக்காலத்து எகிப்தியச் சிறுவர் எவ்வெவ் விஷயங்களை விருப்பத்தோடு கற்றுக்கொண்டார்கள் என்று அறியலாம். உபாத்தியாயர்களும் மாணுக்கர்களும் எழுதிக்கொண்ட கடிதங்களும் இப்புத்தகங்களில் உண்டு. அக்கடிதங்களால் அக்காலத்து உபாத்தியாயர்கள் பாடம் போதிப்பதற்குத் தங்கள் போதன சக்தியைக் காட்டிலும் பிரம்படியே பெரிய சாதனம் என்று கருதியிருந்தார்கள் என்று தெரிகிறது. பள்ளிக்கூட நேரம் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரையில் இருந்தது. இக்காலத்துப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் கலையும்போது குதூகலத்தோடு கூக்குரலிட்டுக்கொண்டு ஓடுவது போலவே அவர்களும் ஓடினார்கள். எகிப்திய சிறுவன் நல்ல வித்வானுக விரும்பினால் இரண்டுவித எழுத்துக்கள் பயிலவேண்டும். அழகாய் எழுதப்பெறும் எழுத்தே அறிஞர்களால் நன்கு மதிக்கப்படும். அக்காலத்து ஆரம்பப் பள்ளிக்கூடங்களிற் கூட்டல் கழித்தல் பெருக்கல் என்ற மூன்று பிரிவிற் கணக்குக்கள் கற்பிக்கப்பட்டன. வகுத்தல், உபாத்தியாயர்களுக்கே சிரம சாத்தியமாயிருந்ததாற் கற்பிக்கப்படவில்லை. மாணுக்கர்களுக்கு முக்கியமாய்க் கற்பிக்கப்பட்டவை கல்வியிலும் சிறந்த நற்குண நற்செய்கைகளே யாகும். பெரியோரைப் பணிதல்,

அடக்கம், மரியாதை, நன்றி மறவாமை என்ற குணங்களும் கல்வியோடு கற்பிக்கப்பட்டன. எகிப்தியர் 'தாயிற் சிறந் தொரு கோயிலுமில்லை' என்று கருதும் இயல்புடையார். இவ்வருங்குணம் சிறுவர்க்கு இளமைப்பருவ முதலே கற் பிக்கப்படும். எகிப்தியச் சிறுவரும் நம் நாட்டுச் சிறுவரைப் போல இளமைப் பருவத்தில் மனக் கவலையற்று நன்கு விளை யாடுவதுண்டு.

நம் இந்திய தேசத்துக்கு வடக்கில் இருக்கும் சீனதேச மும் மிகவும் பழமையான நாகரிகம் உடையதே. அந்நாட் டில் வாழும் ஜனங்கள் தம் சிறுவர் அனைவரும் பள்ளிக் கூடம் போய் அவசியம் படிக்கவேண்டும் என்று கருதுவ தில்லை. பெற்றோர்கள் இஷ்டமும் சௌகரியமும் இருந் தால் அனுப்புவார்கள். இந்தக் காலத்திலும் நம் நாட்டில் இன்னும் அநேக ஆயிரம் சிறுவர்கள் கல்வி மணம் பெறாத வர்களா யிருக்கிறார்கள். பெற்றோர்கள் அறியாமையே இதற் குக் காரணமாம். சீனதேசத்தில் உள்ள குறையும் இதுவே. சீனதேசத்திலே பள்ளிக்கூடச் சம்பளம் அதிகம் இல்லை. ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர் பெரும்பாலும் அரைப் பட்டினியாகவே காலங்கழிக்க வேண்டியிருக்கும். ஆயினும் சீனதேசமானது பூர்வ காலத்திலிருந்தே பள்ளிக்கூட அமைப்பிற் பிரசித்தி பெற்றது.

முற்காலத்திற் சீனச் சிறுவர்கள் மும்மொழிக்காவியம் என்னும் ஒரு சிறு புத்தகத்தைப் பொருள் உணராமலே பாடம் பண்ணி வந்தார்கள். இக்காலத்தில் நல்ல சிறிய கதைகளையுடைய பாடப் புத்தகங்களைப் படிக்கிறார்கள். அக் காலத்தில் நீலச்சட்டை அணிந்து தலையைச் சடையாகப் பின்னிப் பின்புறம் வெகு நீளமாகத் தொங்கவிட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போவார்கள். இக்காலத்தில் தலையைக் கத் தரித்து விட்டு நாகரிக உடைகள் அணிந்து செல்கிறார்கள்.

அக்காலத்திற் போலவே இக்காலத்திலும் சிறுவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது பழைய பெயர்களை மாற்றி அழகான புதுப் பெயர்களை வைத்துக்கொண்டு செல்கிறார்கள். பள்ளிக்கூடத்திற் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தம் தம் பாடங்களை மிகவும் சப்தத்தோடே படிப்பார்களாகையால் மிகுந்த இரைச்சல் எழும்.

முற்காலத்தில் இருந்ததுபோல இக்காலத்துப் பள்ளிக்கூட நேரம் பகல் முழுவதும் இல்லை. இக்காலத்தில் வாரத்தில் குறைந்தது ஒரு நாள் ஓய்வு நாளாய் இருக்கும் இவை தவிர விசேஷ தினங்களில் விடுமுறையும் உண்டு. படிக்கும் பாடம் பெரும்பாலும் நீதி போதனையே. ராஜபக்தியும் தேசாபிமானமும் இளமையிலிருந்தே கற்பிக்கப்படும். தன்னைத் தாழ்மைப்படுத்திப் பிறரைப் பெருமைப்படுத்திப் பேசுங் குணம் நன்கு போதிக்கப்படும். சீனச் சிறுவர் பம்பரம் விளையாடுவதில் மிகவும் விருப்பமுள்ளவர். காற்றாடி பறக்க விடுதல் சீனருள் முதியோரும் விரும்பும் பொழுதுபோக்கு விளையாட்டாகும். மூன்று தலைமுறையார் ஒரே வரிசையில் நின்று காற்றாடி பறக்க விடுவர். சீன தேசத்தில் வருஷப் பிறப்புக் கொண்டாட்டம் மிகவும் சிறப்பாய் நடக்கும். சிறுவர் அக்கொண்டாட்டத்தில் மிகவும் குதூகலமாகக் கலந்து கொள்வர். கான்பூஷியஸ் என்ற மகான் சீனர்களுக்கு மெய்யறிவு பெருகச் செய்தார்.

ஜப்பான் என்னும் தேசம் சீன தேசத்துக்குக் கிழக்கேயிருக்கும் பல தீவுகளின் சேர்க்கையால் ஆகியது. இந்நாட்டில் வாழும் ஜனங்கள் உலகில் ஒப்புயர்வற்ற ஊக்கமும் முயற்சியும் தொழிற்றிறமையும் போர்ப் பயிற்சியும் தேசாபிமானமு முடையவர்கள். இவர்கள் தங்கள் தேசத்திற் பல நூற்றாண்டுகளாய் ஆட்சியிலிருந்த பழைய வழக்கங்களை

மறந்து புதிய நாகரிகங்கள் மேற்கொண்டு வியாபாரம் பெருக்கிச் செல்வ வளஞ் சிறந்து நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டிலே ஜப்பான் தேசம் அயலார் மதிக்கத் தக்க பெருமையில்லாத சிறு நாடாய் இருந்தது. இப்பொழுதோ எவரும் அஞ்சி நடுங்கத்தக்க ஒரு வல்லரசாய் இருக்கிறது. ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறுமைக்கும் அந்நாட்டில் வாழும் மக்களே காரணமாவர் என்பது உண்மை.


ஜப்பானியச் சிறுவர்

ஜப்பானியச் சிறுவர் பெரியோர்க்குக் கீழ்ப் படிவதைத் தங்கள் முக்கிய விரதமாகக் கொண்டவர்கள். ஜப்பானியர் நம் நாட்டவரைப்போல இறந்தவர்க்கு வருஷந் தோறும் சிராத்தம் செய்யும் வழக்கமுடையவர்களா யிருக்கிறார்கள். சிராத்த காலங்களிலே முன் இறந்தோரில் ஆண்மக்களுக்கு மாத்திரம் விசேஷ பூஜைகள் நடைபெறும். நம் நாட்டில் இருப்பது போலவே அந்நாட்டிலும் பூர்விக ஸ்திதியின் பாத்தியதை ஆண்மக்களுக்கே உண்டு, பெண் மக்களுக்கு இல்லை. இவற்றாலும் வேறு பல காரணங்களாலும் ஜப்பானியச் சிறுவர் தம் சகோதரிகளை அடக்கியாள விரும்புவர். அது நியாயமென்றே பெற்றோர்களும் இடங் கொடுப்பர்.

அந்நாட்டிற் பெண்கள் பிறப்பதைக் காட்டிலும் ஆண்கள் பிறப்பதே சிறப்பாக மதிக்கிறார்கள்.

ஜப்பானியச் சிறுவருள் ஏழைகள் கைத்தொழிலாற் பிழைக்க வேண்டியவர்களே. அழகாகவும் நயமாகவும் தொழில் செய்வதில் அவர்கள் சமர்த்தராயிருப்பர். நம் நாட்டிலே சிறுவர் விளையாட்டின் பொருட்டு வாங்கப்பெறும் விநோத வமைதியுள்ள பலவகைப் பொருள்களும் ஜப்பான் தேசத்து ஏழைச் சிறுவராற் செய்யப்பட்டன என்பதை நாம் அறிய வேண்டும். ஜப்பானியச் சிறுவர் ஒரு கணப் பொழுதும் வீண்பொழுது போக்குவதில்லை. ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே ஆண் குழந்தைகளோடு பெண் குழந்தைகளும் கல்வி பயல்வதுண்டு. தெய்வ பக்தி ராஜ பக்தி தேச பக்தி என்னும் குணங்கள் அப்பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப் படும். உயர்தரப் படிப்புப்பெற விரும்பும் சிறுவர்கள் சர்வ கலாசாலைகளைச் சார்ந்த பெரிய கலாசாலைகளுக்குப் போகிறார்கள். உலகத்தில் எந்த நாட்டில் எந்தப் புதுமை எவரால் அறியப்படினும் உடனே அதனை ஜப்பானியர் தம் சிறுவருக்குக் கற்பித்துத் தம் நாட்டுக்குப் பயன்படுத்த முயல்வர். தொழில் செய்வது கேவலம் என்ற எண்ணம் கல்வி கற்ற ஜப்பானியனிடம் இராது. பெண்மக்களும் தம்மால் இயன்ற வளவு தொழிலும் வியாபாரமும் செய்யப் பழகியிருப்பர். தேக பலம் படைப்பதிலும் அதை வளர்த்துக்கொள்வதிலும் ஜப்பானியச் சிறுவர்களும் சிறுமிகளும் மிக்க ஊக்கமும் உற்சாகமும் உடையவர்களா யிருக்கிறார்கள். ஜப்பானியச் சிறுவன் ஒவ்வொருவனும் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் தன் பெற்றோர் பொருட்டும் அரசர் பொருட்டும் அர்ப்பணம் செய்ய எப்பொழுதும் சித்தமா யிருப்பான்.

## 3. கல்விச் சிறப்பு

'கற்கை நன்றே கற்கை நன்றே,—பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற வாக்கியம் ஒவ்வொருவரும் கற்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறது. இளம் பருவத்தே கல்வி கற்க முயலாதவர் வயதான பிற்பாடு கற்பது சிரமமாதலால் நாகரிகமுள்ள நாடுகளிலெல்லாம் இளமைப்பருவத்தே கல்வி கற்பிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. உலக விவகாரங்களில் ஈடுபட்டு எப்பொழுதும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் பெரியவர்களைக் காட்டிலும் அவ்விதக் கவலையொன்றும் இல்லாத சிறுவர்களே நன்றாகவும் கவனமாகவும் கற்று அவ்வாறு கற்ற விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத் தக்கவர்களாவார்கள். கல்லில் எழுதிய எழுத்து அழியாதிருப்பதுபோல இளமையிற் கற்ற கல்வி மறதி முதலிய காரணங்களால் அழிந்து போகாது.

ஆனால் இளமைப் பருவத்தே கற்க அவகாசம் இல்லாதவர்களும் கற்கும் பாக்கியம் பெறாதவர்களும் வயதான பிற்பாடு கற்றல் ஆகாது என்று எண்ணக்கூடாது. சிறுவர்க்கு விரைவாகக் கல்வி வந்தாற் பெரியவர்க்குத் தாமதமாக வரலாம். ஐந்து வயது முதல் இருபத்தைந்து வயது வரையிற் கல்விக்குரிய பருவமே. சிலர் வறுமை காரணமாகவும் மேன்மேலும் கற்பதற்கு ஊக்கங் குறைதல் அறிவின்மை முதலிய காரணமாகவும் இடையிலே கல்விப் பயிற்சியை நிறுத்தி விடுகின்றனர். 'அரைகுறைப் படிப்பு ஆபத்துக் கிடம்' என்று வழங்கும் மேல்நாட்டுப் பழமொழிக் கிணங்க இப்படிக் குறைக்கல்வி பெற்றவர்கள் அகம்பாவம் முதலிய கெட்ட குணங்களால் அழிவடைகிறார்கள்.

கல்விக்குக் கரையில்லை; கற்பவர்க்கு ஆயுளோ இவ்வளவு தான் என்று நிச்சயமில்லை. இன்னது கற்கத் தகுவது இன்

னது கற்கத் தகாதது என்ற உணர்ச்சி யுண்டாகவே பல வருஷங்களாகும். ஆகையால் வீண்பொழுது சிறிதேனும் போக்காமல் நல்லோர் இயற்றிய சிறந்த நூல்களை நமக்கு என்ன வயதாயிருந்தாலும் கற்கவேண்டும். முற்காலத்தில நம் நாட்டில் வாழ்ந்திருந்த புலவர்கள் வறுமையால் வருந்தியவர்களாயினும் கல்வியையே தங்கள் பெருஞ்செல்வமாகக் கருதி வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் உலகத்தார்க்கு உபகாரமாகப் புதுப் புத்தகங்கள் இயற்றுவதையும் பழைய புத்தகங்களைப் படித்து விளக்குவதையுமே தங்கள் பொழுது போக்காய்க் கொண்டிருந்தார்கள். வயதான பிற்பாடு கற்கத் தொடங்குவதும் அக்கல்வியாற் பயன் பெறுவதும் அசாத்தியம் இல்லை என்பதை விளக்க இங்கு ஒரு கதை கூறுவோம்:

காளிதாஸ மஹா கவி இயற்றிய பல ஸம்ஸ்கிருத காவியங்களுக்கு உரையெழுதிய மல்லிநாத சூரி என்பவரைப் பற்றி ஒரு பழங்கதை வழங்குகிறது. மல்லிநாதர் பிறந்த ஊர் ஆந்திர தேசத்தில் உள்ள கோலாசலம் என்பதாம். இளம் பருவத்திலே பெற்றோரை இழந்த இவர் தம் மூத்த சகோதரரால் நன்கு ஆதரிக்கப்பட்டு வந்தார். தமையனார் ஒரு பெரிய ஸம்ஸ்கிருத வித்வானாயிருந்தார். அவர் மனைவியும் ஸம்ஸ்கிருத பாஷையிற் சிறந்த புலமை வாய்ந்திருந்தாள். மல்லிநாதரோ பெற்றோரை யிழந்த குமாரராதலால் எவ்விஷயத்திலும் கட்டாயப்படுத்தப் படாமல் இஷ்டம்போல் நடந்து வர அனுமதி பெற்றிருந்தார். மூத்தவர் பல வழிகளாலும் தம்பிக்குக் கல்விப் பயிற்சி செய்விக்க முயன்றும் பயன்பெற வில்லை. மல்லிநாதர்க்குக் காளைப்பருவம் கடக்கும் வரையில் அக்ஷராப்பியாசமும் ஆகாமல் இருந்தது.

மல்லிநாதர் இங்ஙிலையில் இருந்ததால், குடும்பத்தைப் பற்றிய கவலை சிறிதும் இல்லாமல் வீண்பொழுது போக்கி வந்தார். பெற்றோர் வைத்துப் போன ஆஸ்தி எவ்வளவு

என்பதும் அதில் தமக்கு வரும் பாகம் எவ்வளவு என்பதும் அவருக்குத் தெரியாமல் இருந்தது. குடும்ப பாரம் வகித்திருந்த மூத்தவர் தமக்கு இருந்த சிரமத்தைச் சிறிதேனும் இளையவர்க்குத் தெரிவியாமலே அவரை அன்போடு பராமரித்து வந்தார். அடுத்துள்ளவர் மனநிலையை அறியாமலே மல்லிநாதர் சுகவாசப் பிரமசாரியாய் இருந்தார்.

வழக்கம்போற் காலையாகாரத்துக்கு ஒரு தினம் மல்லிநாதர் மனையகம் புகுந்தார். அப்பொழுது அவர் தமையனார் மனைவியாகிய புண்ணியவதி, "அப்பா மல்லிநாதா! இன்று உணவுக்கு ஒரு வழியும் இல்லை. உன் தமையனார் காலையில் வெளியே போனவர் இன்னும் வரவில்லை. இவ்வருஷம் மழைக் குறைவால் விளைவில்லை. உன் தமையனார் புராணப் பிரசங்கம் செய்யும் இல்லத்தில் ஏதாவது பொருள் பெற்று வரலாம் என்று போயிருக்கிறார். அவர் வந்த பிற்பாடுதான் சமையல் ஆகவேண்டும். நேற்று இரவு இருநத உணவை உனக்குப் படைத்து விட்டு நாங்கள் உணவின்றித் தூங்கினோம். எங்கள் பாடு எப்படியோ ஆகிறது. எங்களுக்குப் பிறகு இக்குடும்பத்தின் பெயர்க்கு அழிவு வராமல் தலையெடுத்துப் புகழ் பெறத்தக்க ஒரு மைந்தன் பிறக்கவில்லையே என்பது எங்களுக்குப் பெருந்துயர் விளைக்கின்றது. உன்னையே எங்கள் குமாரனைப் போல வளர்த்து வருகிறோம். நீயும் இவ்வயது வரையில் எழுதப் படிக்க அறிவில்லாதவனாக வளர்ந்து வருகிறாய். மஹா வித்வான்கள் பிறந்து வாழ்ந்த இவ்வம்சம் இப்படிப் பெயரும் பெருமையும் இன்றி உன்னோடு அழிய வேண்டியிருக்கிறது. உன் நிலைமையைக் கண்டோ வேறு என்ன காரணத்தாலோ உனக்கு யாரும் பெண் கொடுக்க வரவில்லை. மணம் புரிதற்கு உரிய வயது வந்தும் நீ பிரமசாரியாகவே காலங்கழிக்க வேண்டிய நிலையில் இருக்கிறாய். கல்வி என்ற பெருஞ் செல்வத்திற்

சிறிதளவும் நீ பெருமல் இருப்பது நம் குடும்பத்துக்கு எவ்வளவு நஷ்டத்தை விளைக்கின்றது என்று நீயே யோசித்துப் பார்க்க வேண்டும். அதிகம் சொல்லிப் பயனில்லை. எல்லாம் இறைவன் செயல்" என்று வருத்தத்தோடு கூறினுள்.

அன்று வரையிற் கவலை யென்பதே இன்னது என்று அறியாது வளர்ந்த மல்லிநாதர் அந்த ஒரு நிமிஷத்தில் எல்லாக் கவலைகளையும் அறிந்தார். தமக்குக் கல்வி யில்லாதிருப்பது பெருங்குறை என்பதையும் அறிந்து கொண்டார். உடனே தமது தமையன் மனைவியாரை நமஸ்கரித்து, "அம்மா! நான் போய் வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டு விட்டார். எது கிடைத்தாலும் ஆகாரமாகத் திருப்தியோடு புசித்து வடக்கு நோக்கி நான்கு மாதம் நடந்தார். அக்காலத்தில் ஸம்ஸ்கிருத வித்தை சிறந்திருந்த காசி க்ஷேத்திரம் வந்தடைந்தார். அங்குப் பல நூறு மாணுக்கர்களுக்கு ஆசிரியராயிருந்த ஒரு பெரிய வித்வானைக் கண்டு வணங்கித் தமக்குக் கல்விச் செல்வம் உதவி யருளவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அவருக்கு அக்ஷராரம்பமும் ஆகவில்லை என்பதை அறிந்த அப்பெரியவர் அவர் முகக் குறிகளால் அவர்க்குக் கல்விப் பயிற்சியில் இருக்கும் அவாவின் அளவை ஒருவாறு ஊகித்துணர்ந்து ஒருவிதப் பரீக்ஷை செய்து தம் மாணுக்கர் கூட்டத்திற் சேர்க்க விரும்பினுர்.

அக்காலத்திற் குருகுலவாசம் என்பது, சிஷ்யர் பிக்ஷை எடுத்து வந்த உணவைக் குருவின் அனுமதி பெற்று அவர் ஆசிரமத்தில் உண்டு அவர்க்கு உரிய பணிவிடைகள் செய்து கல்விபயிலும் நிலைமையுடையதாய் இருந்தது. மல்லிநாதர் குருகுலவாசம் செய்யப்புகுந்த குருவரர் தம் மனைவியாரிடம் மல்லிநாதர்க்கு அன்று உணவு பரிமாறும்போது நெய்க்குப் பதிலாக வேப்பெண்ணெய் விடச் சொல்லியிருந்தார். அந்தப் பதிவிரதையும் அதற்கு மறுமொழி யொன்றும் சொல்லா

மல் அவ்வாறே செய்தார். மல்லிநாதரோ உண்ணும்போது ஒருவித உணர்ச்சியும் இல்லாமல் கல்வியிலே சென்ற மனத் துடன் குருபத்தினியார் பரிமாறியதை உண்டார். அதனை அக் கற்பரசியார் தம் நாயகரிடம் தெரிவித்தார். அதுகேட்ட குரு சிரேஷ்டர், "வித்தையில் ஆவல் உள்ளவன் என்பதற்கு இதுவே அறிகுறியாகும்" என்று கூறித் தினமும் அப்படியே செய்து வரும்படி உத்தரவிட்டார். மல்லிநாதர் வேப்பெண் ணெய் உருசியை அறியும் காலத்திலே தம்மிடம் தெரிவிக்கும் வண்ணம் கூறியிருந்தார்.

இவ்வாறு இருபது வருஷங்கள் சென்றன. மல்லிநாதர் சாஸ்திரங்களிற் பூரண பாண்டித்தியம் பெற்றார். உடன் பயின்ற பலரும் குருகுலவாசம் முடித்துப் பிரிந்து சென்றும் அவர்க்குத் தம் ஞானபிதாவைப் பிரிய மனம் வரவில்லை. வழக்கம்போல் ஒரு தினத்திலே குருபத்தினியார் வேப்பெண் ணெயை ஊற்றி அன்னமிட்டார். அப்போது மல்லிநாதர் 'அம்மா, இன்று நெய் கசக்கிறதே!' என்றார். உடனே அவ் வம்மையார், "அப்படியானால் அந்த அன்னத்தை ஒதுக்கி விடு, வேறு அன்னம் பரிமாறி நெய் விடுகிறேன்," என்றார். மல்லிநாதர் அன்று நெய்யுடன் கலந்த உணவு உண்டு எழுந் தார். அன்றுமாலைக் காலத்தில் இச்செய்தியை அறிந்த குரு சிரேஷ்டர் மல்லிநாதரைப் பார்த்து, "அப்பா, குழந்தாய், மல்லிநாதா, இன்றோடு உன் வித்யாப்பியாசம் முடிவடை கிறது. இனி நீ இல்லறத்திற் பிரவேசித்து லோகோபகாரமாக வித்தையைப் பரப்பலாம். போய்வருக" என்று கூறினார். உடனே மல்லிநாதர் குருவைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து வாய்புதைத்து நின்றுகொண்டு, "குருவரரே, நான் தங்கள் ஆசிரமத்தை விட்டு விலக விரும்பவில்லை. என்றும் தங்கள் அடித்தொண்டனாகவே யிருக்க விரும்புகிறேன். என்னை இன்று திடீரென்று பிரிந்துபோக உத்தரவு இடும்படி

நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. அறியாமையால் ஏதாவது குற்றம் செய்திருந்தாலும் பொறுத்தருள வேண்டுகிறேன்” என்று பிரார்த்தித்தார்.

குரு சிரேஷ்டர், “மல்லிநாதா, நீ இங்கே வித்தியாரம்பத்துக்கு வரும்போது பிறர் கல்விகற்று இல்லறம் மேற்கொள்ளச் செல்லும் வயதுள்ளவனாயிருந்தாய். என்றால் இயன்றவளவு உனக்கு சாஸ்திரங்களைப் போதித்துவிட்டேன். உன் பெற்றோர் முதலிய பெரியோர்களை ஆதரிக்கவும் உன் குடும்பத்தின் கீர்த்தியை வளர்க்கவும் இனிமேல் உன் ஜன்ம தேசத்துக்குப் போகவேண்டுவது நியாயமே. குரு தக்ஷிணையைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்படவேண்டா. இங்கே அடைந்த கல்வியைப் பலர்க்கும் போதித்துப் பெரும் புலவர்களின் காவியங்களுக்கு உரையெழுதி ஸம்ஸ்கிருத வித்தையை விருத்திசெய்வதே நீ செலுத்தத்தக்க குருதக்ஷிணையாகும். நான் இன்று வரையில் உன்னிடம் கூறுமலிருந்த ஒரு செய்தியை இப்பொழுது கூற விரும்புகிறேன். வித்யாப்பியாசத்துக்குரிய பருவம் கடந்த பிற்பாடு கல்வி கற்க வந்த மாணவனாகிய உனது ஊக்கத்தைப் பரீக்ஷித்து அறியும்பொருட்டு இன்றுவரை உன் உணவில் நெய்யின் நிலையில் வேப்பெண்ணெயைப் பிரயோகிக்க ஏற்பாடு செய்திருந்தேன். வித்தையில் உண்மையான கவலையுள்ளவனுக்கு உணவின் சுவை தெரியாது என்பதே என் எண்ணம். இன்று நீ உண்ணும்போது உணவின் சுவை அறிந்தாயாகையால் இனிமேற் கற்றுத் தெளிந்துகொள்ள வேண்டும் என்றுள்ள கவலை உன் மனத்திலே குறைவுற்றது என்பது விளங்கியது. நல்லறிஞர்களாகிய இந்நகர வித்வான்களின் மகா சபையொன்று நாளைக்குக் கூடுகிறது. அன்று உன் வித்யா சாமர்த்தியத்தைக் காட்டி அவர்கள் தரும் பெருமை

யான மதிப்பைப் பெற்றுக்கொண்டு பிறகு நீ ஊர்க்குச் செல்லலாம்,'' என்று கூறினார்.

மல்லி நாதர் உண்மையை உணர்ந்து மகிழ்ந்து குருவையும் குரு பத்னியையும் வணங்கி மறுநாள் அந்நகரிலே கூடிய வித்வத் மகாசபையில் தமது கல்வித் திறமையைப் பலர் அறியக் காட்டி அச்சபையார் சந்தோஷத்தோடு கொடுத்த மஹாமஹோபாத்தியாயர் என்ற பட்டத்தை ஏற்றுக் கொண்டு குருவினிடம் விடைபெற்றுத் தம் நாடு நோக்கிப் புறப்பட்டார். வரும் வழியில் அநேக பெரிய வித்வான்களைக் கண்டு அவர்களோடு சம்பாஷணை செய்து தம் கல்வித்திறமையினால் அவர்கள் அன்போடு நண்பு பூணச் செய்து கொண்டார். பல தேசங்களிலும் சென்று அங்கங்குள்ள அரசர்களாலும் பிரபுக்களாலும் அபிமானத்துடன் தரப்பெற்ற பல சன்மானங்களோடு தம்மூர் நோக்கி வந்தார்.

மல்லிநாதர் ஊரெல்லையை நெருங்குமுன் அவரது கீர்த்தி அங்கு எட்டிவிட்டது. பல நாட்டுப் புலவர்களையும் வென்று புகழ் பூண்ட ஒரு பெரும்புலவர் வருகின்றார் என்று அவ்வூரார் அறிந்தனரேயன்றி அவர் இன்னார் என அறிந்துகொள்ளவில்லை. வித்வான்கள் எல்லாரும் அவரை வரவேற்கக் கூடினர். மல்லிநாதர் இதை அறிந்துகொண்டு தமக்கு இவ்வுபசாரங்கள் ஒன்றும் வேண்டா என்று கூறிப் பல்லக்கிலிருந்து இறங்கிக் கால்நடையாகத் தம் பூர்விக கிருகத்துக்குச் சென்று அங்கு ஏதோ பெரிய சாஸ்திரம் ஒன்றை, வாசித்துக்கொண்டிருந்த தமையனாரையும் அவர் மனைவியாரையும் கண்டு 'என் அன்னையும் தந்தையும் ஆகிய பார்வதி பரமேசுவரர் போல வீற்றிருக்கும் உங்களை அடியேன் மல்லிநாதன் வணங்குகின்றேன்' என்று கூறிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். அன்று அவ்விருவரும் அடைந்த சந்தோஷத்துக்கு எல்லையில்லை. தமையனார் மல்லிநாதரைப்

பார்த்து "இன்று நீ இங்கு வந்தது விசேஷமாயிற்று. ஒரு மஹா வித்வான் இன்று இங்கு வருகிறார். நீயும் அவரைக் கண்டு கொள்ளலாம்" என்றார். அதுகேட்ட மல்லிநாதர், "அண்ணா வேறு யாரும் புதியவராய் இவ்வூர்க்கு வரவில்லை. ஜனங்கள் உண்மையறியாமல் தங்கள் அடிமையாகிய என்னைப் பற்றியே இப்படிப் பேசுகிறார்கள்" என்றார். தமையன் மனைவி அதுகேட்டு ஆச்சரியமுற்றார்.

பிறகு மல்லிநாதர் தம் முன்னோர் வாழ்ந்த வூரிலேயே அநேகமாணுக்கர்களுக்குக் கல்விச் செல்வம் கொடுத்துக் காளிதாசர்காவியங்களுக்கெல்லாம் உரையெழுதிச் சிறந்தபுகழோடு வாழ்ந்தார். நல்ல குலத்திலே மணம் புரிந்துகொண்டு நன்மைந்தர் பலரைப் பெற்று மகிழ்ந்தார். கல்வியில் அக்காலத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத புகழ் பெற்றவர் இவரே. பிள்ளைகளே, முயற்சியால் விளைந்த பயனைப் பாருங்கள்.

---

## 4. இடியும் மின்னலும்

### தகப்பனுக்கும் மகனுக்கும் சம்பாஷணை

தகப்பன்:—ஷண்முகா, இப்பொழுது திண்ணையில் நிற்கலாகாது. உள்ளே வந்துவிடு. இடியும் மின்னலும் அதிகமாகிறது. பெரிய மழை வரும்போலிருக்கிறது.

மகன்:—அப்பா, திண்ணையிலிருந்த வண்ணமே கொஞ்ச நாழிகையாய்ப் பார்க்கிறேன். இடியின் முழக்கம் மேலும் மேலும் அதிகமாயிருக்கிறது? அதோ கிழக்கிலே பாருங்கள். ஒரு விநாடி நேரம் ஆகாயத்துக்கும் பூமிக்கும் ஒரே வெளிச்சமாய்த் தெரிகிறது. அதோ, வளைந்து வளைந்து கொடிபோலத்தெரிகிறது. இதென்ன? இப்படி இடிக்கிறது! வீடே அதிர்ந்து விடும்போல்

இருக்கிறதே. இதோ மின்னற் கொடி. மின்னலும் இடியும் ஒன்றை விட்டொன்று பிரியாதோ?

தகப்பன்:—குழந்தாய், மின்னலும் இடியும் ஒரே இடத்தி லிருந்து உண்டாவதால் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது.

மகன்:—இதோ, மேகத்தின் நடுவில் மின்னல் உண்டாகிறது. அந்த திசையில் இடி முழக்கம் கேட்கிறது. அதுவும் மேகத்திலிருந்துதான் உண்டாகிறதோ ?

தகப்பன்:—ஆம், இடியும் மின்னலும், மேகத்திலிருந்துதான் உண்டாகின்றன. நன்ருய்க் கவனித்துப் பார். இரண் டும் ஒரே இடத்தில் ஒரே காலத்தில் உண்டாவது தெரி யும்.

மகன்:—அப்பா, மின்னல் என்பது என்ன ? இடி என்பது என்ன ?

தகப்பன்:—ஷண்முகா, நீ கேட்ட இந்தக் கேள்வி நல்ல கேள் வியே. இப்பொழுது நான் உனக்கு விளங்கும்படி கொஞ்சம் சொல்கிறேன். அதனுல் முழுவதும் அறிந்த தாக ஆகாது. நீயே மேல் வகுப்புக்குப் போகும்போது உன் கேள்விக்குப் பொருத்தமான விடையை அறியக் கூடும். மின்னலும் இடியும் மேகத்திலிருந்து உண்டா கின்றன என்று முன்பே கூறினேன். மின்னல் ஒளி மயம். இடி ஓசை மயம். இவ்விரண்டும் மேகம் என்ற ஒரு இடத்திலிருந்து உண்டாவதைப் பார்த்தோம். மேகத்திலே ஒரு சக்தி இருக்கிறது. அதற்கு மின்சார சக்தி என்று பெயர். மின்சார சக்தி அநேகமாய் எல் லாப் பொருள்களிலும் உண்டு. சில பொருள்களில் அதிகமாயும் சிலவற்றிற் குறைவாகவும் இருக்கும்.

மகன்:—அப்பா, மின்சார சக்தி என்று கூறுகிறீர்களே, இந்த சக்தி ஒரு பொருளில் இருக்கிறது என்பதை எதனுல் அறியலாம்?

தகப்பன்:—குழந்தாய், இப்பொழுது மேகத்திலே கண்டது போல ஒளியும் ஓசையும் உண்டாவதாய் அறியலாம். மின்சார சக்தி உள்ள பொருள்கள் இரண்டு ஒன்றோடொன்று மோதும்போது இப்படி மின் இடி என்ற இரண்டும் உண்டாகும்.

மகன்:—அப்பா, மின் இடி என்ற இரண்டும் மின்சார சக்தியுள்ள எல்லாப் பொருள்களிலும் இப்படியே உண்டாகுமோ?

தகப்பன்:—மேகத்திலே மின்சார சக்தி அதிகமா யிருப்பதால் மின் மிகவும் பிரகாசமாகவும் இடி மிகவும் ஓசையுள்ளதாகவும் இருக்கும் மற்றப் பொருள்களில் அவற்றில் உள்ள சக்திக்கு ஏற்றபடி ஓசை ஒளி குறைவாய் இருக்கும். இது நியாயம்தானே.

மகன்:—அப்பா, மேகத்தில் இருந்து உண்டாகும் மின்னல் இடிகளால் நமக்கு நன்மையாவது தீமையாவது உண்டா?

தகப்பன்:—தீமையே மிகுதியாய் உண்டு. நன்மை இருந்தாலும் அதனை அடைவது மிகவும் சிரமமே. மழை காலத்தில் இருட்டிலே நடந்து போகும்போது திடீரென்று மிகுந்த ஒளியோடு மின்னிய மின்னல்களால் அநேகர்க்குக் கண்ணொளி மழுங்குவதும் குருடாய்ப் போவதும் உண்டு. இதற்குக் காரணம் கண்களால் கிரகிக்கக்கூடிய அளவைக் காட்டிலும் அதிகமாயிருக்கிற மின்னல் ஒளியைக்கண்டு அவை கூசி மழுங்குவதாம். மரங்களில் மின்னல் பாய்ந்து மரங்கள் எரிந்து போவதுமுண்டு. அந்தச் சமயங்கள் மனிதர் அருகிற் சென்றாற் பிராணஹானி நேரிடும். சில சந்தர்ப்பங்களிற் பெரிய கட்டிடங்களில் இடி அதிர்ச்சி உண்டாகி அவை பிளந்து இடிந்து விழுவதும் உண்டு. கட்டிடங்

களுள் மழைக்கு ஒதுங்கிய மனிதர்கள் பலர் ஏககாலத்தில் இடியினுல் உயிரை இழப்பதும் உண்டு. கிணறுகளில் இந்த இடி அதிர்ச்சிஉண்டானுல் அவை இடிந்து பாழாய்ப் போகும்.

மகன் :—அப்பா, இடி மின்னல்களுக்கு இவ்வளவு சக்தி உண்டா? இந்த அபாயங்கள் உண்டாகாமலிருக்க என்ன செய்யலாம்?

தகப்பன் :—குழந்தாய், இடியும் மின்னலும் மிகுந்து மழை பெய்யுங் காலங்களில் மனிதர் வெளியே நடந்துபோகலாகாது. போகவேண்டியது அத்தியாவசியமானுல் மரங்களின் ஓரமாகப் போகாமல் விலகிப் போகவேண்டும். மரங்களே மிகுந்த சாலைகளிற் போக வேண்டியிருந்தால் ஆறடிக்கு மேல் உயரமாய் இருக்கக்கூடிய இருபுறமும் கூர்மையாகிய இரும்புத் தடியொன்றைக் கையிற் பிடித்துப் பூமியில் ஊன்றி நடந்து போகலாம். இருப்புக் கம்பியை உடைய குடையைப் பிடித்துக்கொண்டு நுனிக் கம்பியிலிருந்து பூமியைத் தொடும் வரையில் சிறு சிறு கம்பிகளை அமைத்து வைத்துக்கொண்டு போகலாம்.

மகன் :—இதெல்லாம் எதற்காக? வீடுகளுக்கு ஆபத்து உண்டாகாமலிருக்க என்ன வழி செய்யலாம்?

தகப்பன் :—இரும்புத் தடியும் இரும்புக் கம்பிகளை உடைய குடையும் மின்னலில் உள்ள மின்சாரம் நம்மேற் பாயாமற் காக்க உதவும். வீடுகள் இடிந்து விழாமற் காப்பாற்ற இப்படியே நீண்ட இரும்புக் கம்பிகளை உயர்ந்த மாடியில் நிறுத்தி அவற்றிலிருந்து பொருத்தப் பெற்ற இருப்புக் கம்பிகளை நிலமட்டம் வரையிற் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இக்காலத்திற் பெரிய கட்டிடங்களை இப்படிச் செய்துதான் இடியாமற் காப்பாற்றுகிறுர்கள். இவை யில்லாவிட்டால் இடியும்

மின்னலும் மிக்க மழைக்காலத்தில் நாம் பெரிய மாளிகைகளில் இருத்தல் தீங்காக முடியும்.

மகன் :—அப்பா, இன்று நான் இடி மின்னல்களைப்பற்றி அநேக விஷயங்களை அறிந்து கொண்டேன். இனி நான் இந்த ஜாக்கிரதை முறைகளை அனுஷ்டிக்க முயற்சி செய்வேன்.

---

## 5. எங்கள் ஊர்

உண்ண வுணவும் உடுக்க வுடையும்
உவப்போ டிருக்க உரிய பொருள்
எண்ண வரிய பலவும் அமைய
இருக்கும் பெருமைய தெங்களூரே. 1.

நிலத்தை யுழுது பயன்படுத்தும் புகழ்
நேர்மையி னோங்கிய வேளாளரும்
குலத்தின் பெருமைகொள் செல்வ வணிகரும்
கூடியி ருப்பதும் எங்களூரே. 2.

நல்லறம் மெய்ம்மை யுயர்ந்த வொழுக்கமும்
நன்கு கடைப்பிடித் தன்பினுடன்
வல்லவர் கீழோரை வாட்டா தருள்பெற
வாழும் தலைமைய தெங்களூரே. 3.

சிற்பத்தில் வல்லவன் சிற்ப மமைந்திடும்
சித்திரம் வல்லவன் சித்திரிக்கும்
கற்பனை வல்லவன் கற்பனைச் செல்வத்தைக்
காட்டி விளங்குறும் எங்களூரே. 4.

செல்வ முடையவன் செல்வப் பயனெனச்
சீரிய அறங்கள் செய்துவக்கும்
கல்வி நிறைந்தவன் கல்வி வளர்த்துக்
கணக்கில் புகழ்பெறும் எங்களூரே. 5.

மெய்ப்பொரு ளென்னவே வேதங்கள் சொல்லிய
வேத மருளும் விழுப்பொருளை
முப்பொழுதுங் கண்டு போற்றி வணங்குதல்
முத்தர் நிறைந்ததும் எங்களூரே. 6.

எண்ணில வாகும் உலக வுயிர்கள்
இறைவனுக் காலயம் என்றெண்ணியே
புண்ணிய நல்வினை பூண்டுயிர் வாழ்வுறப்
போற்றுவோர் வாழ்வதும் எங்களூரே. 7.

மெய்ம்மையைப் போற்ற வுயிரை யளித்திடும்
வீரர்கள் வீரமும் மிக்க கற்பின்
திண்மையைத் தாங்கிய பெண்டிரின் பெண்மையும்
சேர்ந்து விளங்குவ தெங்களூரே. 8.

---

## 6. பல நாட்டுச் சிறுவர் (இரண்டாம் பாகம்)

இத்தாலியா என்பது ஐரோப்பா கண்டத்தின் தென்பகுதியில் உள்ள ஓர் அழகான தேசம். அங்குப் பூந்தோட்டங்களும் காட்சிச் சாலைகளும் அதிகமாயுள்ளன. அந்நாட்டுச் சிறுவர் தம் பெற்றோர்க்குப் பொதுவாயுள்ள வறுமை காரணமாகக் கல்வியில் அதிக காலம் செலவிடுவதில்லை. செல்வவந்தர் வீட்டுச் சிறுவர்களே உயர்தரக் கல்வி கற்கும் வழக்கம் உடையவராயிருப்பர். ஏழைகள் தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கே மிகவும் கஷ்டப்பட வேண்டியிருத்தலால் நன்றாய்த் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைப்பதில்லை. இருந்தாலும் அந்நாட்டுச் சிறுவர்கள் தம் நாட்டில் எங்கும் பரவியிருக்கும் இயற்கைச் செல்வக்காட்சியில் ஈடுபட்டு மகிழ்ச்சி பெறும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். ஆல்ப்ஸ் மலையில் உள்ள பனிக்கட்டி நிரம்பி மிகவும் அபாயகரமான மேடு பள்ளமும் செங்குத்தும் ஆன வழிகளில் ஏறுவதும் இறங்கு

வதும் அந்நாட்டுச் சிறுவர் நன்கு அறிதற்குரிய பயிற்சி யென்று கருதுகிறார்கள். சிறுவர்கள் இப்பயிற்சியில் மிக்க விருப்பமுடையவர்களாயிருப்பதோடு கொடிய பனியின் குளிர் தாங்கும் சக்தியும் அபாயம் உண்டாகும் காலத்தில் ஊக்கத்தைக் கைவிடாமல் உழைத்து முன்னேறும் திறமை யும் வாய்ந்தவராயிருப்பர். மாஸினி என்ற உயர்ந்த தேசாபி மானியும் கரிபால்டி யென்ற சிறந்த வீரரும் டான்டி என்ற பிரசித்த கவியும் இத்தேசத்தவரே. கலாசாலைகளிற் பயிலும் காலங்களிலேயே போர்ப்பயிற்சிக்குரிய குணங்கள் இந்நாட் டில் வளர்க்கப்படும். இந்நாளில் நவீன சாஸ்திரப் பயிற்சியிற் சிறப்புடையோர் பலர் இந்நாட்டில் தோன்றியிருக்கின்றனர். தெய்வ பக்தியும் ஒற்றுமை யுணர்ச்சியும் இந்நாட்டு மாண வர்களுக்கு இளமைப் பருவத்திலேயே கற்பிக்கப்படுவதுண்டு. சித்திரப் பயிற்சியிலும் சிற்ப நூற் பயிற்சியிலும் சங்கீத கலையிலும் இந்நாட்டுச் சிறுவர்க்கு இயற்கையிலேயே சிறந்த தேர்ச்சி அமைகின்றது. நாட்டின் இயற்கை யமைப்பே அதற்குக் காரணமாகும் என்று அறியவேண்டும்.

ஆஸ்திரேலியா என்பது நம் நாட்டுக்குத் தென் கிழக்கு திசையில் உள்ள ஒரு பெரிய கண்டமாகும். முன்னாளில் இக்கண்டத்திற் பழமையான அநாகரிக ஜாதியார் சிலர் வாழ்ந்து வந்தனர். இக்காலத்திலே ஐரோப்பாக் கண்டத் தில் உள்ள நாகரிகம் மிக்க கூட்டத்தார் பலர் புகுந்து குடி யேறி வாழ்கின்றார்கள். இவர்கள் முதலில் பொன் தேடப் போய்ப் பிறகு நிலத்தின் நலத்தைப் பார்த்துக் குடியேறினார் கள். குடியேறிய கூட்டத்தார் முதலிலே விசாலமான நிலங்க ளைப் பண்படுத்திப் பயன்படுத்தும் பொறுப்பையே மேற் கொண்டார்கள். நாளேற வேற நாகரிக வளர்ச்சிக்குரிய எல்லாச் சாதனங்களையும் ஏற்படுத்தினார்கள். உயர்தரக் கல்வி இந்நாட்டில் மிகவும் சமீப காலத்திலேயே வேரூன்றத்

தொடங்கியது. இதனுல் இக்கண்டத்தின் பல பகுதிகளிலு முள்ள சிறுவர்கள் தம் பெற்ருேரைப் போலவே தேக பல மும் முயற்சியும் பொருந்தியிருக்க இடமுண்டாயிற்று.

ஆஸ்திரேலியச் சிறுவர்கள் மனவுறுதி தைரியம் ஊக்கம் உழைப்பு முதலிய ஆண்மைக்குரிய குணங்களிற் சிறந்த வர்களாய் விளையாட்டுக்களில் மிகவும் விருப்பம் உடைய வர்களாயிருக்கிருர்கள். ஆஸ்திரேலியச் சிறுவர் நீர் விளை யாட்டில் அதிக விருப்பமுடையவர். மகரம் போன்ற பெரிய மீன்கள் இருக்கும் கடல்களிலும் அஞ்சாமல் இறங்கி விளை யாடுவார்கள். அவர்கள் இளம்பருவத்திலேயே குடும்பம் வியாபாரம் வியவசாயம் முதலிய பொறுப்புக்களை வகிக்கக் கூடியவர்களா யிருக்கிருர்கள். ஆஸ்திரேலியாவில் எல்லாச் சிறுவர்களும் அரசாங்கத்தார் செலவிற் கட்டாயக் கல்வி கற்பிக்கப்படுகிருர்கள். நகரங்களிலும் கிராமங்களிலும் காடு களினிடையிலும் வசிக்கும் இளஞ் சிறுவர்கள் அரசாங்கத் தார் செலவிற் புகைவண்டியிலும் மோட்டார் வண்டிகளிலும் பிறவாகனங்களிலும் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்துச் செல் லப்படுகிருர்கள். சில வருஷங்களுக்கு முன் வரையில் ஆரம் பப் படிப்பு முதல் ஸர்வ கலாசாலைப் படிப்பு வரையில் ஜனங்களுக்குச் செலவின்றியே கற்பிக்கப்பட்டு வந்தது. இக் காலத்தில் ஸர்வ கலாசாலைப் படிப்பு அவரவர் செலவில் நடக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இயற்கைப் பொருட் பாடம் அனுபவ முறையால் நன்கு கற்பிக்கப்படுகிறது. சிறு வர்கள் சுறுசுறுப்பாகவும் விளையாட்டாகவும் பாடங்களைப் படிப்பார்கள். பள்ளிக்கூடத்தில் தேகப் பயிற்சி தினந்தோ றும் காலை வேளையிற் கற்பிக்கப்படும். தேக உபத்திரவத் தைத் தாங்கும் சக்தியுள்ளவர்களா யிருக்கும்படி சிறுவர்கள் பழக்கப்படுகிருர்கள். முரட்டுத்தன மிக்க விளையாட்டுக்கள் விளையாடுவதில் அவர்களுக்குப் பிரியம் அதிகம் உண்டு. ஆஸ்

திரேலியாவில் ஏழைச் சிறுவர்கள் பதினான்கு வயதுக்குள் படிப்பை முடித்துக்கொண்டு பெற்றோர்க்கு உதவியாய் வேலை செய்யத் தொடங்குகிறார்கள். விருந்தினரை உபசரித்து ஊட்டி மகிழ்வதில் ஆஸ்திரேலியர் மிகவும் சிறப்புற்றவர். பாம்பு கடித்தாலும் கீழே விழுந்து பெருத்த காயம் பட்டாலும் சிறுவர் தாமாகவே முதலில் அவசியமான சொற்ப சிகிச்சை செய்துகொண்டு வலியைப் பொறுத்துக்கொண்டு வைத்தியர்களிடம் நடந்து செல்வர். நடக்க வியலாத நிலைமைகளிற் பிரஞ்ஞையுள்ள வரையில் தமக்கு நேர்ந்த வருத்தத்தைப் பிறர் அறியம்படி காட்டிக்கொள்ளாமல் அடக்கவே முயல்வர்.

பெல்ஜியம் என்பது ஐரோப்பா கண்டத்தில் மேற்கோரமாயுள்ள ஒரு சிறிய தேசம். இந்நாடு முழுவதும் சமீப காலத்தில் நடந்த உலக மகா யுத்தத்தில் ஜெர்மனியராற் பாழாக்கப்பட்டதென்பதும் சென்ற சில வருஷங்களுக்குள் யுத்தத்தால் நேர்ந்த சேதத்தின் அடையாளம் கொஞ்சமும் இல்லாமல் நீதிஸ்தலங்களும் புஸ்தகசாலைகளும் பள்ளிக்கூடங்களும் வைத்தியசாலைகளும் தேவாலயங்களும் வியாபாரஸ்தலங்களும் பிற பொது ஸ்தாபனங்களும் மிக்க பணச் செலவில் வெகு விரைவிலே அமைக்கப்பெற்று இப்பொழுது பார்ப்பதற்கு மிகவும் அழகாய் விளங்குகிற தென்பதும் நாம் அவசியம் அறியவேண்டிய விஷயம். இதனால் அந்நாட்டு மக்கள் நஷ்டத்தைக் கண்டு நடுங்கும் இயல்பில்லாத தீரபுருஷர்கள் என்பதை நாம் அறிகின்றோம். சிறுவர்களிடம் இந்தக் குணம் நன்கு பரவியிருக்கும் என்பது நாம் கூறாமலே விளங்கும். ஜனங்களின் ஒற்றுமையும் ஊக்கமும் என்ன நன்மை விளைக்கும் என்பதை இச்செயலால் நாம் நன்கு உணரலாம்.

இந்நாட்டவர் நிலைமை காரணமாய் ஐந்து வகுப்பாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவருள் நான்காம் வகுப்பாரே பெரும்பான்மையானவரா யிருக்கின்றனர். பெல்ஜியத்தில் கட்டாயப் படிப்பு நிபந்தனை இல்லை. ஆகையால் சிறுவர்களுக்குப் பொதுவாகப் பள்ளிக்கூடப் படிப்பில் அதிக சிரத்தை யில்லை. பள்ளிக்கூடங்களில் மதபோதனை நடைபெறுவதில்லை. பெல்ஜிய ஜனங்கள் பொதுவாய் உத்ஸவப் பிரியர்களா யிருக்கிறார்கள். சிறுவர்களும் அடிக்கடி விடுமுறை பெற்று உற்சவங்களிற் கலந்து குதூகலித்துக் கொண்டாடுவர். வருஷப்பிறப்புத் தினத்தில் சிறுவர்கள் உற்சாகமாய்த் திரிந்து விளையாடுவர். பொதுவகையான கல்விச் சாலைகள் பல பெல்ஜிய நாட்டில் உண்டு. சங்கீத வித்தையைத் தனியே கற்பிக்கும் வித்தியாசாலைகளும் உண்டு. பெல்ஜியத்தில் மூன்றுவித பாஷைகள் பேசப்படுகின்றன. பிரெஞ்சு பாஷை நாடு முழுவதும் வழங்கும். ப்லெமிஷ் பாஷை நாட்டிற் சில பகுதிகளிலும் வாலூன் பாஷை வேறு சில பகுதிகளிலும் வழங்குகின்றன. பெல்ஜியரிற் பெரும்பாலோர் பேசுவது ப்லெமிஷ் பாஷையா யிருந்தாலும் உயர்ந்த புத்தகங்களும் சிறந்த பத்திரிகைகளும் அம்மொழியில் வழங்காமையால் பெல்ஜியச் சிறுவர் தங்கள் தாய்மொழியில் நல்ல பயிற்சி பெறக்கூடாதவர்களா யிருக்கிறார்கள். பிரெஞ்சு பாஷையே அரசாங்கத்தார் ஆதரவு பெற்று விளங்குவதாற் பெரிய உத்யோகங்கள் பெற விரும்புவோர் இரண்டு மூன்று பாஷைகள் பயில வேண்டியிருக்கிறது. இது அந்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஒருவகையில் இடையூறேயாம். இடையூறுகளைப் பொருட்படுத்தாது மேற்செல்லும் இயற்கைத் தன்மை படைத்த பெல்ஜியச் சிறுவர்கள் கல்வியில் இந்நாளில் மிகவும் முயன்று மேம்பட்டுச் சிறந்த பயன் அடைந்து வருகிறார்கள்.

ந்யூஸீலண்டு என்பது ஆஸ்திரேலியாவின் தென் கீழ்த் திசையில் உள்ள ஒரு சிறிய தேசம். இந்நாட்டிற் சிறுவர்கள் குழந்தைப் பருவ முதலே நல்ல தேகக் கட்டுள்ளவர்களாகவும், மற்ற நாட்டுச் சிறுவர்களைக் காட்டிலும் மனவுரனும் உடலுரமும் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இச் சிறுவர்களுக்கு விளையாட்டில் அதிகப் பிரியம் உண்டு. தன்னம்பிக்கையும் ஸமயோசிதம்போல் நடக்கும் தன்மையும் இவர்களுக்கு இளமை முதலே இயல்பாய் அமையும். இவற்றோடு முரட்டுத் தன்மையும் பெரியோரை மதியாத் தன்மையும் சிறிது இருப்பதாகத் தோற்றும். ஒரு பந்தய விளையாட்டுக்காக இந்நாட்டுச் சிறுவர் பல்லாயிரம் காதங்கள் செல்வதுண்டு. கற்பிக்கப்படும் விஷயங்களை விரைவிலே கற்றுக் கொள்ளும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. பெரும்பான்மையான சிறுவர்கள் பொதுப் பள்ளிக்கூடங்களிலும் சிலர் பெரிய கலாசாலைகளிலும் படிக்கிறார்கள். இச்சிறுவர் பந்து விளையாட்டிலும் ஒற்றை மரங்களால் ஆகிய சிறிய படகுகளில் ஏறி ஏரிகளிலும் பிற நீர் நிலைகளிலும் விளையாடும் நீர் விளையாட்டிலும் மிக்க விருப்பமுள்ளவரா யிருக்கின்றனர். இவ்வோடங்களிற் பந்தய வோட்டம் விடுவதும் உண்டு. பொழுது போக்காகச் சிறிது தூரம் கடற்பிரயாணம் செய்வதும் உண்டு.

கானடா என்பது ஆங்கில அரசாட்சிக்குள் தன்னரசு ஆளும் ஒரு பெரிய தேசமாகும். இது வட அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய மாகாணங்களுக்கு வடக்கே இருக்கிறது. இந்நாட்டவர் தங்கள் நாடே பிற நாடுகளைக் காட்டிலும் அழகிலும் வசிப்பதற்குரிய சௌகரியங்களிலும் சிறந்தது என்று விளம்பரம் செய்வர். பெற்றோர் நன்றாய் உழைத்து நிலத்திற் பயன்பெற முயல்கையிற் பிள்ளைகளிற் கல்வியில் விருப்பமுள்ளவர்கள் சமீபங்களிலுள்ள நகரங்

களிற் சென்று படிப்பார்கள். கானடா தேசத்துப் பள்ளிக் கூடங்களிற் கற்க வருவோரெல்லோரும் சம்பளம் கொடாமலே படிக்கலாம். சிறுவர் மிகவும் உற்சாகத்தோடு கற்கின்றார்கள். கானடியச் சிறுவர்களும் பிற நாடுகளில் உள்ள தங்கள் தோழன்மார்களைப் போலவே விளையாட்டில் மிக்க விருப்பமுடையவர்களாவர். பனிபெய்து பனிக் கட்டி உறைந்து உறுதியாய் இருக்குங் காலங்களில் சிறிய மரக்கட்டைகளில் உட்கார்ந்தும் படுத்தும் பனிக்கட்டிமேல் வழுக்கி விளையாடி மகிழ்வர். பனிக்கட்டிப் பாதரக்ஷைகள் அணிந்துகொண்டு பனிக்கட்டிமேல் ஏறித் தாவி விளையாடிக் குதிக்கும் ஒருவகை விளையாட்டும் இவர்கள் விளையாடுவது உண்டு. நீர் விளையாட்டில் இந்நாட்டுச் சிறுவர்கள் மிகவும் பெயர்பெற்றவர்களே. விளையாட்டிற் போலவே கல்வியிலும் மிக்க ஊக்கமுடையவர்களா யிருப்பதால்தான் நம் நாட்டைக் காட்டிலும் இவர்கள் நாட்டில் கல்வி மிகவும் விருத்தி யடைந்திருக்கிறது.



கனடா தேசத்துச் சிறுவர்

பிள்ளைகளே, இந்தியச் சிறுவர்களாகிய நீங்கள் அயல் நாடுகளில் உள்ள உங்கள் தோழர் நிலைமையைப் பற்றியறிந்து கொண்டீர்கள். உங்கள் நிலைமையையும் உணரவேண்டும் அன்றோ? நம் நாட்டில் ஏழைகளே அதிகமாயிருக்கிறார்கள்.


முப்பத்தேழு கோடி ஜனங்கள் வாழ்ந்துவரும் நம் நாட்டில் கல்வி கற்றவர்கள் தொகை மிகக் குறைவே. இந்த முப்பத்தேழு கோடி ஜனங்களிற் பள்ளிக்கூடத்திற் சென்று படிக்கத் தக்க சிறுவர் தொகை சுமார் பதினைந்து கோடி யிருக்கலாம். இவர்களிற் பெரும்பான்மையானவர்கள் படிப்பில்லாதவர்களே. ஏழைக் குடியானவர்கள் வியவசாயம் வியாபாரம் முதலிய காரியங்களில் தங்களுக்கு உதவியாகச் சிறுவர்களை வைத்துக் கொள்கிறார்கள். பஞ்சாலை நூற்சாலை முதலிய தொழிற்சாலைகளிற் கோடிக்கணக்கான சிறுவர்கள் எழுதப் படிக்கத் தெரியாமலே வேலை செய்து பிழைக்கிறார்கள். இலவசமாகக் கல்வி கற்பிக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இந்நாளில் ஏற்பட்டிருக்கின்றன. நாடெங்கும் கட்டாயப்படிப்பு ஏற்படாமையால் கல்வியில்லாத சிறுவர்களே மிகுதியானவர்கள். நம் நாட்டிலே பஞ்சாப் வங்காளம் முதலிய நாடுகளில் வாழும் மக்களைக் காட்டிலும் தமிழ் மக்களாகிய நாம் தேக வளர்ச்சியிலும் பலத்திலும் குறைந்தவர்களா யிருக்கிறோம். நமக்கு வரும் வியாதிகளுக்கோ கணக்கில்லை. மூட நம்பிக்கை காரணமாக அற்ப முயற்சியால் விலக்கக்கூடிய இடையூறுகளையும் பெரியவையாக்கி அழிகிறோம். குழந்தைப் பருவத்திலே சாவு நேருவது நம் நாட்டிற்போல வேறு எந்நாட்டிலும் இல்லை. எல்லாவிதத் தீமைகளுக்கும் அஞ்ஞானமே காரணமாம். அறிவு என்ற சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கத் தொடங்கும்பொழுது பலவித வியாதிகளும் தீமைகளும் ஆகிய இருள் ஒழியும். அப்பொழுது நம் நாட்டுச் சிறுவர் பொதுவிற் பிறநாட்டுச் சிறுவரோடு ஒரு நிகராகத் தேக பலமும் மன நலமும் உடையவராய் விளங்கலாம்.

# 7. எகிப்திய கோபுரங்கள்

எகிப்து தேசம் என்பது ஆப்பிரிக்கா கண்டத்தின் வட கிழக்கில் உள்ள ஒரு பெரிய தேசம். நீல நதியின் பெருக்கால் இந்நாடு முழுவதும் வளம் பெறுகின்றது. இந் நாட்டின் அரசுரிமை இக்காலத்தில் சுல்தான் என்ற பட்டம் பெற்ற மகமதிய அரசர் கைவசம் இருக்கிறது. சமீபகாலம் வரையில் ஆங்கில அரசாட்சிக்குள் அடங்கியிருந்தது. இப் பொழுது ஆங்கில மேற்பார்வையுள்ள சுதந்தர நாடாயிருக் கிறது. இந்நாடு பூர்வீக சரித்திரத்தில் மிகவும் சிறப்புற்றது. பிறநாடுகளில் ஜனங்கள் குடியேறத் தொடங்கு முன்பே இந்நாடு நாகரிகம் பெற்றிருந்தது. இந்நாட்டின் பூர்வகால சரித்திரம் இக்காலம் வரை காற்று மழை வெயில் முதலிய வற்றால் அழிவுறாமல் வானோங்கி நிலைத்திருக்கும் பிரமிட் என்ற பெயர்கொண்ட கூர்நுனிக் கோபுரங்களின் அடியில் மறைந்திருக்கும் பலவகைப்பட்ட ஆதரவுகளால் அறியப்படு கின்றது.

இக் கோபுரங்கள் பல்லாயிர ஆண்டுகளின் முன் எகிப்த நாட்டு அரசுரிமை பூண்டிருந்த பாரோ (Pharoa) என்ற பட்டம் பெற்ற அரசர்களால் அந்நாளைய மதக்கொள்கைக் கிணங்க இறந்தோர்களின் உடம்பைப் போற்றி வைக்கும் பொருட்டு அமைக்கப்பட்டன. அவ்வரசர்கள் இறந்தபின் பும் வாழ்வதாக எண்ணமுடையவர்களா யிருந்ததால் தாங் கள் உயிரோடிருந்த காலத்தில் உபயோகித்த ஆபரண ஆயு தாதி அலங்காரங்களோடு தங்கள் உடம்புகளை அடக்கம் செய்து அச்சவங்களுக்கு அழிவு நேரிடாதிருக்கும்படி சில மருந்துப் பொடிகளைத் தூவிப் பெரிய பெட்டிகளில் வைத்த படியே இக் கோபுரங்களின் அடியில் உள்ள பாதாள அறை களில் வைத்துச் சென்றார்கள். இந்தப் பிணங்கள் 'மம்மி'

என்று சொல்லப்படும். மம்மி யுருவமாகிய அரசரோடு சில அடிமைகளும் அடக்கம் செய்யப்படுவது உண்டு என்று கூறுகின்றனர். அவ்வரசர்களுக்குப் பிரியமாயிருந்த பல வகைப் பொருள்களும் அச்சவப் பெட்டிகளில் வைக்கப் பட்டன. அவைகளில் அந்நாளைய சரித்திரங்களை விளக்கக் கூடிய பல பழமையான ஏடுகளும் உண்டு.



எகிப்திய கோபுரங்களில் முக்கியமான மூன்று

இத்தகைய கோபுரங்கள் எகிப்து தேசத்தின் மத்திய பாகத்தில் ஏறக்குறைய அறுபது இருக்கின்றன. இவை அடியில் நாற்சதுரம் (சரிசதுரம்) அல்லது நீண்ட சதுரமா யிருக்கும். இவை மேலே போகப் போகச் சுருங்கி உச்சியிற் கூர்மையாய் முடியும் மேல் கீழாகக் கவனித்துப் பார்த்தால் நான்கு புறமும் நான்கு பெரிய முக்கோணங்கள் தோன்றும். இந்தக் கோபுரங்களில் மிகவும் பெரியவை மூன்று. பூர்விக மனிதர்களின் சிற்பத் திறமையைக் காட்டும் சாக்ஷியங்களாக

இருப்பதால் இவை பூர்விக அதிசயக் காட்சிப் பொருள் களில்மிகவும் சிறந்தவையாக மதிக்கப்படுகின்றன. இத்தகைய காட்சிப் பொருள்கள் ஏழு என்பதும் அவை உலகத்தின் பல பாகங்களிலும் இருக்கின்றன என்பதும் இவற்றுள் இந்தியா தேசத்தில் ஆக்ரா நகரத்தில் ஷாஜஹான் சக்ர வர்த்தியால் அமைக்கப்பெற்ற தாஜ்மஹாலும் ஒன்று என்ப தும் முன்பே நாம் அறிந்த விஷயங்களாம்.

எகிப்திய கோபுரங்களில் மிகப் பெரியவை மூன்று என் ரேும். இவற்றுள் முதலது கியாப்ஸ் என்ற அரசனுல் அமைக்கப்பட்டது. இதற்கு கியாப்ஸ் பிரமிட் என்ற பெயர் வழங்குகிறது. இந்தக் கோபுர நிலேயின் அடித்தள அளவு இக்காலத்துத் தேசாந்திரிகள் சொல்கிறபடி நீளமும் அகல மும் தனித்தனி எழுநூற்றறுபத்தேழு அடிகள் ஆகும். அடி வாரத்திலிருந்து உச்சிவரையில் உள்ள வெளிப்புற நீளம் அறுநூற்றுப் பதிஞன்கு அடியாகும். அடிவாரம் முதல் உச்சிவரையில் உள்ள உள்ளிட நடுமட்ட உயரம் நானூற்று எழுபத்தொன்பது அடியாகும். ஆனுல் பூர்வகாலத்துச் சரித் திராசிரியராகிய ஹேரடாட்டஸ் என்ற புலவர் தம்முடைய புத்தகத்தில் இக்கோபுரத்தின் உயரம் அடித்தள அகலம் நீளம் ஆகிய மூன்றும் தனித்தனி எண்ணூறடி என்று எழுதி யிருக்கிருர். இக்காலத்தார் காண்கின்ற அளவின் கணக் கோடு இது ஒத்துவராததற்குக் காரணம் அடித்தளத்தில் மணல் மேடிட்டு மூடிக்கொண்டதேயாகும்.

பின்னும் அப்புலவர், "கியாப்ஸ் அரசனுடைய தேகம் அக்கால வழக்கத்தின்படி தைலமாட்டி அக்கோபுரத்தினுள் அழிவடையாவண்ணம் கற்பெட்டியில் வைக்கப்பட்டுளது. கோபுரம் கட்டி முடிய இருபது வருஷம் சென்றது. அதன் பொருட்டுச் செலவழிந்தது முப்பத்தொரு லக்ஷம் ரூபாய் என்று இவ்வுண்மை வரலாறும் மேலே சொல்லிய அளவுக்

குறிப்போடு ஒரு பெரிய கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது." என்று எழுதியிருக்கிறார். இக்காலத்தில் இக்கோபுரத்தைச் சுற்றிக் கல்மதில் எழுப்பி வடபுறத்தில் வாயில் வைத்திருக்கிறார்கள். முற்காலத்தில் கோபுரத்தினுட் செல்லும் வாயில் சுவரோடு ஒட்டி வெளிப்படையாய்த் தெரியாமல் ஒரே படலைக் கல்லால் மூடப்பட்டிருந்தது. கோபுரத்தின் அடித்தளத்தில் அகலமான நிலவறையொன்றும் அதற்குநேர் மேலே அரசியின் மாளிகையும் அதற்குமேல் அரச மாளிகையும் இருக்கின்றன. இந்தக் கோபுரத்தினுள்ளே ஜோதிஷ சாஸ்திரிகளுக்கு உதவும்படி ஆகாய வீதியைத் தெளிவாய்க் காட்டக்கூடிய முந்நூற்று நாற்பத்திரண்டடிநீளமுள்ள சாய்வான துவாரம் ஒன்று இருக்கிறது. இக்கோபுரத்தினுட் பலர்க்கும் பயன்படத்தக்கதாய் அழகிய கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த கோபுரத்தை அமைத்த கியாப்ஸ் என்ற மன்னன் குடிகளை மிகவும் வருத்தும் கொடுங்கோலனாய் இருந்தான் என்றும், லக்ஷக்கணக்கான ஆட்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கி அரேபிய நாட்டு மலைகளிலிருந்து கற்பாரைகளைக் கொண்டு வரச்செய்து இக்கோபுரம் அமைத்தான் என்றும் எகிப்தியர் கூறுகின்றனர். மரங்களினாலாகிய சில யந்திரங்களின் உதவியால் மேல் நிலைகளிற் கற்கள் ஏற்றப்பட்டன என்று ஹெரடாட்டஸ் கூறுகிறார். கற்கள் நன்கு வேலைப்பாடு அமைய வழுவழுப் பாக்கியே கட்டிடத்திற் சேர்க்கப்பட்டன என்று அவர் சொல்கிறார். இந்த அரசன் ஐம்பது வருஷங்கள் அரசாண்டான் என்றும் அவர் நூலால் அறிகிறோம்.

கியாப்ஸ் மன்னன் இறந்தபிற்பாடு அவன் இளைய சகோதரனாகிய சிப்பிரனேஸ் என்பான் அரசுரிமை தாங்கினான். அவனும் தன் முன்னோனைப் போலவே கொடுமையாக அரசு புரிந்து தன் பெயர் விளங்க ஒரு கோபுரம் அமைத்தான்.

அக்கோபுரம் முன்னைய கோபுரத்துக்குத் தென் மேற்கில் ஐந்நூறடி தூரத்தில் இருக்கிறது. அதன் அடித்தள அகல நீளம் தனித்தனி எழுநூற்றைந்து அடியாகும். உச்சி முதல் அடிவார மட்டும் வெளிப்புற நீளம் ஐந்நூற்றெழுபத்தேழு அடியாகும். உள்ளுயரம் நானூற்றைம்பத் தேழடி ஆகும். இக்கோபுரத்தின் அளவும் முன் காலத்திற்கண்ட அளவுக்கு வித்யாசப்படுகிறது. இக்கோபுரத்தின் அமைப்பில் முதற் கோபுரத்தின் அமைப்பிலிருந்து அதிக வேறுபாடு ஒன்றும் இல்லை. முதற் கோபுரத்தின் அடித்தளத்தில் நீல நதியின் வாய்க்கால் ஒன்று ஓடியதாம். இந்நீராற் சூழ்ந்த நிலத்தின் நடுவில் ஒரு தீவு போல் இருந்த இடத்தில் கியாப்ஸ் மன்னன் உடம்பு அடக்கம் செய்யப்பட்டது என்பர். இரண்டாவது கோபுரத்தில் இத்தகைய அமைப்புக்கள் இல்லை.

இவ்விரண்டுக்கும் இடை நிலத்தில் மூன்றாவது கோபுரம் இருக்கிறது. இது மிகவும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் உடையது. இதற்குள் மூன்று நிலவறைகள் உண்டு. இது முந்நூற்றைம்பத்திரண்டடி சதுரம் உள்ளது. வெளிப்புற உயரம் அடி முதல் நுனி வரை இருநூற்றெண்பத்து மூன்று அடிகளாம். உள் நடு உயரம் இருநூற்றுப் பத்துப்தொன் பது அடிகளாம். இந்த மூன்று கோபுரங்களிலும் காட்சி பார்ப்போர் மனத்தை வசீகரிக்கத்தக்க அநேக விஷயங்கள் உண்டு. "எகிப்தியர் இவ்வரசர்களால் மிகவும் கொடுமையாய் நடத்தப்பட்ட காரணத்தால் இக்கோபுரங்களை அவர்கள் பெயராற் கூற விரும்பாது அப்பக்கங்களிலே ஆடு மாடு மேய்த்துவந்த பிலிஷியன் என்ற இடையன் பெயரை இட்டு வழங்குகிறார்கள்" என்று முன் சொன்ன சரித்திராசிரியர் ஹெரடாட்டஸ் எழுதியிருக்கிறார்.

சமீப காலத்தில் இங்கிலாந்து தேசத்துப் பிரபல பிரபுக்களுள் ஒருவராகிய கார்னர்வன் பிரபுவும் பூர்விக சரித்திர

ஆராய்ச்சியில் மிக்க தேர்ச்சி பெற்ற கார்டர் என்ற வித்வா னும் எகிப்து தேசத்திலே இக்கோபுரங்களைப் போன்ற பல வற்றையும் சோதனை செய்தனர். அப்பொழுது ஒரு கோபுரத் தின் கீழ்ப் பழைய காலத்தில் அரசாண்ட துதன் காமன் என்ற ஒரு எகிப்திய மன்னர் கல்லறை வெளியாயிற்று. அக் கல்லறையிற் கிரீடங்களும் பிற ஆபரணங்களும் ஆயுதங்களும் பழைய கால முறைப்படி செய்யப்பட்ட அநேக ஆதனங் களும் கட்டில்களும் வேறு பல அரும் பொருள்களும் கிடைத்தன. தங்கத்தினுற் செய்து நவரத்தினம் அழுத்திய ஒரு சிங்காதனமும் கிடைத்தது. அவ்வரசன் சவப் பெட்டி யில் வேறே பல அரும் பொருள்களும் இருந்தன. அவன் உருவம் பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு இருந்தவாறே பெட்டிக்குள் அடங்கி மம்மி யுருவோடிருந்தது. இவற்றைப் பற்றிப் பல பெரியோர்கள் இன்னும் ஆராய்ச்சி செய்து வரு கிறுர்கள். எத்தனை தேசங்கள் ராஜ்யங்கள் ராஜ பரம்பரை கள் அழிந்தாலும் இந்த எகிப்திய கோபுரங்கள் பூர்வ காலப் பொற் களஞ்சியமாய் உலகமுள்ள வளவும் தலை நிமிர்ந்து நிற்கும் என்று நாம் நம்பலாம். இவற்றை அமைத்த அரசர் கொடுங்கோலரசராயினும் பின்னுளில் வருவோர்க்குப் பூர்விக விஷயங்கள் விளங்க வைத்ததால் நம் நன்றி யறிவுக்குரியவர் களே யாவார்கள்.

---

## 8. உண்மை நட்பு

நாம் பல மனிதர்களோடு பழகும் சந்தர்ப்பம் வாய்க்கலாம். பழகியவர்களை யெல்லாம் நண்பர் என்று கருதுவது முறையாகாது. நண்பர் என்பவர் நம் வாழ்விலும் தாழ்வி லும் நம்மோடு ஒத்தே இன்ப துன்பங்களை அனுபவிப்பவரா யிருக்கவேண்டும். நாம் செல்வராய் வாழும்போது நம்மோடு

நகைத்துப் பழகியிருந்து வறுமை யடைந்தபோது முகங் கொடுத்துப் பேசாமற் போவார் பலர் உளர். அவர் நமக்குப் பழக்கமுள்ளவரா யிருப்பதே நம் துர்ப்பாக்கியம் என்று எண்ணவேண்டும். வெளிப் பேச்சும் ஆடம்பரமும் மனதினுள் இருக்கும் அன்பை வெளிப்படுத்துவனவாகா. உண்மை நண்பன் நமக்கு இணையான பதவியும் குலமும் உடையவனாய் இருக்க வேண்டும் என்ற அவசியமுமில்லை. நம் மன நிலையை உள்ளபடி அறிந்து நாம் தவறி நடக்கும்போது அச்சமின்றி நமக்கு அறிவு புகட்டி நம்மை நல் வழியில் நடத்தி நம் குற்றங்களைப் பிறர் அறியாமல் மறைத்துக் குணங்களைப் பலர் அறியக் கூறி நம் வாழ்வைத் தம் வாழ்வாக மதித்திருப்பவரே நமக்கு உண்மை நண்பராவர். இத் தன்மையுள்ள உண்மை நண்பரைப் பெறும் பாக்கியம் எவர்க்கும் எளிதில் அமைவதில்லை. அவ்வாறு பெற்றவர்களுள் மிகுந்த பாக்கியசாலியாய் மதிக்கத்தக்க துரியோதனன் சரித்திரத்தில் ஒரு பகுதியை இங்கே கூறுவோம்:

மஹா பாரதம் என்பது நம் நாட்டின் முற்கால நாகரிகத்தை விளக்கிக் காட்டும் ஒரு பெருங் காவியமாகும். அவ் விதிகாசத்தில் தருமபுத்திரன் முதலிய ஐவரும் துரியோதனன் முதலிய நூற்றுவரும் தாயபாகம் காரணமாகப் போர் புரிந்த செய்தி கூறப்படுகிறது. துரியோதனன் இளம் பருவத்திலே பாண்டவர் வாழ்வைக் கெடுக்கப் பல முயற்சிகள் செய்தான். அவை யொன்றும் அவன் எண்ணியபடி நிறைவேறவில்லை. அதனாலும் பாண்டவர் பலம் மேன்மேலும் வளர்ந்ததாலும் அவன் மிகுந்த பொறாமை கொண்டான். பாண்டவர் கட்சியில் உள்ள பீமனுக்குச் சமானமான பலசாலியாகத் தான் இருப்பதாக எண்ணிக்கொண்டு அர்ஜுனனுக்குச் சமானமாய் ஒரு வில்லாளி தன் கட்சிக்கு வேண்டுமே என்று தேட ஆரம்பித்தான். பல நாள் முயன்று பார்த்து வில்லாளிகளிற்

சிறந்தவனும் கொடையினுற் புகழ் பெற்றவனுமாகிய கர்ண னைத் தெரிந்தெடுத்துத் தன் கட்சியிற் சேர்த்துக் கொண்டான். அர்ஜுனனேடு எதிர்த்து நின்று போர் புரியத்தக்க வில் வன்மை படைத்தவன் அவன் ஒருவனே என்று அறிந்து அவனைத் தனக்குரிய நண்பனுக்கிக் கொண்டான்.

பாண்டவரும் கௌரவரும் தம் தம் வில் வன்மையும் மல் வன்மையும் பலரறியக் காட்டுதற்காகக் குறித்த அரங் கேற்றத் திருவிழா நிகழ்ந்த தினத்தன்று கர்ணனும் அங்கு வந்திருந்தான். மல் யுத்தத்தில் வீமனும் வில் வன்மையில் அர்ஜுனனுமே சிறந்தவர்கள் என்று தீர்மானமாகும் நிலைமை யிற் கர்ணன் அர்ஜுனனை எதிர்ப்பதாக முன் வந்தான். துரோணுசாரியர் என்ற குரு அங்கிருந்த அரச குமாரரோடு சமமாய் நின்று போர்புரியும் தகுதி கர்ணனுக்கில்லை யென் றும் அவன் பெற்றேர் இன்னர் என்று அறியாது தேர்ப் பாகனல் வளர்க்கப் பெற்ற பிள்ளை யென்றும் கூறினர். அதைக் கேட்ட துரியோதனன், "கொடை கல்வி அறிவு வீரம் முதலிய குணங்களாற் சிறந்தவர் எக்குலத்திற் பிறந்தவ ராயினும் சிறந்தவரே! கர்ணனும் அரசு பூணத் தகுதியுடைய வனே" என்று தீர்மானித்து உடனே அவனை அங்க நாட் டரசன் ஆக்கினன். இச்செய்கையாற் கர்ணனும் பாண்டவ ரைப் பகைக்க நேர்ந்தது.

துரியோதனன் சகுனியின் உதவியைக் கொண்டு சூதாட் டத்தாற் பாண்டவர் நாட்டைக் கவர்ந்துகொண்டு அவர் களைக் காட்டுக்கு ஓட்டியபோது கர்ணன் துரியோதனன் பக் கமே வாதித்தான். நெருங்கிப் பழகப் பழகக் கர்ணன் குணம் துரியோதனன் மனத்துக்கிசைந்ததாய் இருந்ததால் அவர்கள் சிநேகம் முதிர்ந்தது. ஒருவர்க்கொருவர் மன வேறுபாடு சிறிதுமின்றி நெருங்கிப் பழகி உயிர் ஒன்றும் உடம்பு இரண்டுமாகவுள்ள நண்பராயினர்.

கர்ண துரியோதனர் பொழுது போக்காகத் துரியோதனன் அரண்மனையிற் சதுரங்கம் முதலிய விளையாட்டுக்கள் விளையாடுவது உண்டு. சில சமயங்களில் இருவரும் துரியோதனன் அரசியின் அந்தப்புரத்துக்குச் சென்று அங்கும் சதுரங்கம் விளையாடுவர். அரசியும் இந்த ஆடல்களில் அவகாசமுள்ள காலங்களிற் கலந்து கொள்வதுண்டு. இவ்வளவு அந்யோந்யமாக இவர்கள் பழகி வருகையில் ஒரு நாள் கர்ணன் அந்தப்புரத்துக்கு வந்தான். களங்கமற்ற மனமுடைய சகோதரன்போலப் பழகிய கர்ணன் வரக்கண்ட அரசி துரியோதனன் அன்று அங்கே இல்லாமலிருக்கவும் சதுரங்கம் ஆடுதற்கு இசைந்து வந்தாள். இருவரும் வெகு நேரம் வரை விளையாடினர். வெற்றி தோல்வி இன்னார்க்கு என விளங்கவில்லை. கர்ணன் அரசியின் விளையாட்டின் அதிசயக்காட்சியைக்கண்டு தான் வெற்றிபெற வழியுண்டோ என்று பலவழிகளாலும் ஆராய்ந்து கொண்டிருந்தான். ஒருவழிப் புலப்பட்டது. அதற்குத் தக்கபடி அவன் காய்களை நகர்த்த முயற்சிக்கையில் திடீரென்று அரசி எழுந்தாள்.

அரசி எழுந்ததற்குக் காரணத்தைக் கர்ணன் அறியவில்லை. விளையாட்டின் போக்கிலே கருத்தினைச் செலுத்தியிருந்த அவன் தனக்குப் பின்புறமாகத் துரியோதனன் மெல்ல வந்ததை அறிந்திலன். தன் நாயகன் வரக்கண்ட அரசி உடனே பரபரப்போடு எழுந்து நின்றாள். விளையாட்டின் இடையில் இவ்வாறு எழுந்து நின்றதன் காரணத்தை அறிந்துகொள்ளாத கர்ணன் மேலும் அரசியை விளையாடச் செய்விக்க வேண்டும் என்ற எண்ணத்தால் அவள் ஆடையைப் பற்றி யிழுத்து உட்கார வைக்க முயன்றான். அவன் கை அரசியின் ஆடையோடு சேர்ந்திருந்த மேகலாபரணத்திற் பட்டு அது அறுந்து மணிகள் கீழே சிதறின. அரசி தனக்கு நேர்ந்த அவமானத்தைக் கண்டு மனம் வருந்திக் கண்ணீர்

உதிர்த்தாள். கர்ணன் அக்காட்சியைக்கண்டு எழுந்து நின்றான். அருகில் நின்ற துரியோதனனைப் பார்த்தான். பரபரப்பால் நேர்ந்த செய்கையை நினைத்துச் செய்வதறியாது திகைத்தான். துரியோதனன் உடனே புன்னகை புரிந்து கர்ணனைப் பார்த்து, "அண்ணா, கீழே சிதறிக்கிடக்கும் மணிகளை எடுக்கவோ, மேகலையிற் சேர்க்கவோ?" என்று கேட்டான். உடனே கர்ணனும் துரியோதனன் தேவியும் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையில்லை. கர்ணன் தன் நண்பனது குணமாண்பைக் கண்டு அதிசயித்து, 'இன்று நீ காட்டிய நட்பின் குறியை நான் என்றும் மறவேன்' என்று கூறினான்.

இதன்பிறகு கர்ணன் துரியோதனன் பொருட்டுத் தன் உயிரை அர்ப்பணம் செய்யத் துணிந்தான். பாண்டவர் பொருட்டுத் துரியோதனனிடம் கிருஷ்ணன் தூது வந்த காலத்தில் குந்தி தேவிக்கு ஒரு உண்மை விளங்கியது. குந்தி தேவி கன்னிப் பருவத்தில் துர்வாச முனிவரிடம் பெற்றுக் கொண்ட மந்திரத்தின் சக்தியைப் பரீக்ஷிக்கும் பொருட்டுச் சூரியனை நினைத்து அழைத்து அவன் வந்து அருள்புரிந்து சென்ற குமாரனாகிய கர்ணனைத் தனக்கு வரும் பழிப்புக் கஞ்சி நதியில் விட்டாள். அவ்வாறு ஒரு பேழையிலே நதியின் மிதந்து வந்த குழந்தையைத் திருதராஷ்டிரனது தேர்ப் பாகன் எடுத்து வளர்த்தான். அவன் இப்பொழுது துரியோதனனிடம் நண்பு பூண்டிருக்கும் கர்ணனே யென்பது குந்திக்கு விளக்கமாயிற்று. கிருஷ்ணன் இச்செய்தியை அவனிடம் கூறி எப்படியாவது கர்ணனைப் பாண்டவர் பக்கத்திற் சேர்க்க முயற்சி செய்யும்படியும் அது இயலாதாயின் பாண்டவர்களுக்கு நன்மை பயப்பதாகிய ஒரு வரம் வாங்கி வரும்படியும் கூறி அனுப்பினான்.

குந்தி தேவி மிக்க மனவருத்தத்தோடு கர்ணனிடம்

சென்று தானே அவன் தாய் என்பதைத் தெரிவித்துக் கொண்டான். கர்ணன் தன்னிடம் இருந்த ஒரு தெய்விக சக்தி வாய்ந்த பட்டாடையைக் குந்தி தேவியிடம் கொடுத்து அணிந்துகொள்ளச் செய்து அவளே தன்னைப் பெற்ற தாய் என்பதை உணர்ந்து கொண்டான். கர்ணன், 'இத்தனை வருஷங்களின் பிறகேனும் தாய் இன்னார் என்று அறிந்துகொண்டோமே' என்று சந்தோஷித்தான். பிறகு அவனை நோக்கிக் குந்தி தேவி அன்பொழுகப் பேசிப் பாண்டவர் பக்கத்திற் சேரும்படி வேண்டிக் கொண்டாள். அதற்கு மறுமொழியாகக் கர்ணன், 'தாயே, என்னைப் பெற்ற நீங்கள் என்மேல் அன்பில்லாமையாலோ பெரும்பழி வரும் என்று அஞ்சியதாலோ குழந்தைப் பருவத்தில் என்னைத் தேடாமல் ஆற்றில் விட்டீர்கள். அவ்வாறு பெற்றோர் இன்னார் என்று அறியாது தேர்ப்பாகன் வீட்டில் வளர்ந்த என்னைத் தனக்கு நிகராக மதித்து நண்பு பூண்டு அங்க ராஜ்யத்தை எனக்குக் கொடுத்து என் உயிர்க்குயிராய் இருக்கின்ற துரியோதனனை விட்டு இந்த சந்தர்ப்பத்தில் நான் பிரிந்து போவேனாயின் என்னைக் காட்டிலும் நன்றி கெட்டவன் எவனேனும் இருப்பானா? அவனது தேவியின் மேகலைமணிமாலை அந்தப்புரத்தில் நான் அறுத்துதிர்ந்த காலத்தில் அவற்றை, 'எடுக்கவோ கோக்கவோ' என்று கேட்ட குணசாலியாகிய நண்பன் பொருட்டுப் போர்க்களத்தில் உயிர்விட்டுச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதே எனக்குத் தருமமும் கருமமும் புகழுமாகும். நீங்கள் விரும்புமாறே நான் அங்கு வர வியலாதாயினும் அர்ஜுனன் ஒருவனே எனக்கிணையாகையால் அவனோடு மாத்திரம் போர்புரிகிறேன். மற்றவர்களைக் கவனிப்பதில்லை. அன்னையே இப்பொழுது எனக்கு ஒரு வரம் தரவேண்டும். பாண்டவர்க்கு நான் யார் என்பதை நீங்கள் இப்பொழுது கூறலாகாது. கூறினால் அவர்கள் இராஜ்யத்

தை எனக்குத் தர வருவார்கள். நானே துரியோதனனுக்கே கொடுப்பேன். நான் போர்க்களத்திலே இறந்து விழும் போது நீங்கள் அங்கு வந்து எனக்காகப் புலம்புவது உங் கள் கடமையே. அப்பொழுது நான் இன்னார் என்பதை உலகமறியக் கூறலாம். "இனி நீங்கள் விடைபெறலாம்" என்று கூறி வணங்கினன். குந்தி தேவி வருந்திச் சென் ருள். கர்ணன் தன் நட்புக் கடமையை நன்கு நிறைவேற் றினன்.


---

## 9. பவளம்

நகை செய்ய உதவுகிற மணிகளிற் பவளம் ஒன்று. இது நவரத்தினங்களில் ஒன்று என்று சொல்லப்படுமாயினும் முத்துப்போற் சிப்பியிலிருந்து எடுக்கப்படுவதுமில்லை, மற்ற இரத்தினங்களைப் போல மண்ணிலிருந்து வெட்டியெடுக்கப் படுவதுமில்லை. இது ஒரு உயிர்ப் பிராணியின் உதவியால் நமக்குக் கிடைக்கும் பொருளாகும். இப்பிராணி பவளப் பூச்சி எனப்படும். இது கடலின் அடியில் உள்ள பாறை களில் ஒட்டிக்கொண்டு வாழும் ஸ்பஞ்சு என்ற கடற்பாசி யைப்போல இதுவும் ஓரிடத்தில் நிலையாய் வளரக்கூடிய ஒரு பிராணியே. இது ஒரு அதிசயப் பிராணி என்பது இதன் சரித்திரத்தால் தெரிகிறது.

இப்பவளப் பூச்சி, பார்ப்பவர் கண்ணுக்கு ஒரு செடி போலத் தோன்றும். அச்செடியில் வேர், தண்டு, கிளைகள், அரும்புகள், மலர்கள் முதலியன இருப்பதுபோலவும் தோன் றும். இப்படித் தோன்றும் தோற்றத்தைக் கொண்டு இதைச் செடியென்று எண்ணிவிடக்கூடாது. இது தாவர வருக்கத் திற் சேர்ந்ததன்று. இப்பூச்சியின் இயற்கை நிறம் நாம் வாங் கியுபயோகிக்கின்ற நற்பவளத்தில் சாதாரணமாய்ப் பார்க்

கின்ற சிவப்பு நிறமேயாகும். செடி போலத் தோன்றும் பவளப் பூச்சியில் தண்டும் கிளைகளும் தாய்ப்பூச்சியென்றும் அரும்புகளும் மலர்களும் அதில் ஒட்டியிருக்கும் சிறிய பூச்சிக்குஞ்சிகள் என்றும் உயிர் நூற் புலவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.



பவளப்பூச்சி

ஒவ்வொரு பூச்சிக்கும் எட்டுக் கரங்கள் உண்டு. செடியுருவமாய்த் தோன்றும் பெரிய பூச்சிக்கு நடுவில் ஒரு வாய் உண்டு. அதன் வழியாக அது ஆகாரத்தை உட்கொள்ளும். ஒரே தண்டில் ஒட்டிக்கொண்டிருக்கும் பல பூச்சிகளும் ஒன்றுக்கொன்றுதவியாய் உழைக்கும். இப்பூச்சியின் சரீரம் இரண்டு தோற் படைகளை யுடையதாய் அமைந்திருக்கிறது. இப்பூச்சிக்குள்ள இரண்டு வகைத் தோல்களில் புறத்தோல் மிகவும் கூச்சமுள்ளது. அகத்தோலில் ஆசாரக்குழாய் அன்னசயம் முதலிய அவயங்கள் இருக்கின்றன. வாய் நடுவிடத்திலிருப்பதால் அதை நோக்கி எப்பொழுதும் அடைந்து உதவி

செய்யும் தன்மை இதன் கைகளுக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது.

இப்பூச்சிகள் பல கோடிக்கணக்காக ஒன்று சேர்ந்து கடலில் உள்ள பாறைகளிற் சடைபோலப் பிடித்து ஒட்டி வாழ்கின்றன. இவை எல்லாம் ஒன்றேடொன்று ஒரு வகைச் சதைப்பற்றுல் ஒட்டிக்கொண்டு ஒன்றுக்கு வரும் உணவு மற்ற வற்றுக்கும் உதவும்படி அமைந்த வாழ்வு நடத்தி வருகின்றன. இப்பூச்சிக்குத் தற்காப்பின் பொருட்டுக் கடவுளாற் கொடுக்கப்பட்டிருக்கும் சக்தியே நாம் பவள மாலை தரிக்கக் காரணம் ஆகிறது. கடலிலே உள்ள பல சத்துருக்கள் தன்னைக் கொன்றுவிடாதிருக்கும் வண்ணம் இப்பூச்சி தன் உடம்புக்கு எலும்பாக உதவும்படி பவளத்தை உற்பத்தி செய்கிறது. தேனீயிடம் தேனைக் கவர்ந்துகொள்ளும் மனிதன் பவளப் பூச்சியிடம் பவளத்தையும் முத்துச் சிப்பியில் முத்தையும் விட்டு வைப்பானு? பட்டுப் பூச்சியைக் கொன்று பட்டு நூலை எடுப்பது மனிதன் இயல்பன்றே? மனிதன் தனக்கு ஒரு பொருள் பயன்படு மென்றறிந்தால் அதனுல் பிற வுயிர்களுக்கு என்ன தீங்கு வரினும் பொருட்படுத்தமாட்டான். பவளம் மனித வாழ்விற்கு ஒரு அவசியப் பொருள் இல்லை. அலங்கார ஆடம்பரத்துக்கு உதவும் பொருளே.

பவளப்பூச்சி தன் சிறிய விரோதிகளை எதிர்த்து அழிக்க ஒரு சக்தி பெற்றிருக்கிறது. பவளப்பூச்சியின் புறத்தோலில் உள்ள பல அறைகளிலும் ஒருவகை விஷசத்துள்ள நூற் சுருள் இருக்கும். புறத்தோல் உணர்ச்சியால் தன்னருகில் வந்த சத்துருக்களைப்பற்றி அறிந்துகொண்ட இப்பூச்சி இந் நச்சு நூற் சுருளை வீசி அவற்றைப் பற்றிக்கொல்லும். கொல்ல வியலாத பெரிய சத்துருக்களை மயங்கவைத்து உபத்திரவிக்

கும். பெரிய உயிர்களால் நேரும் ஆபத்தைக் காக்கவே எலும்புபோல் உதவும் பவளம் அமைந்தது.

பவளம் உறுதியும் அழகும் நிறமும் கண்ணைக் கவரும் தன்மையும் வாய்ந்திருப்பதால் மனிதன் பூச்சியைக் கொன்று பவளத்தை அடைகிறான். பவளத்தை எடுப்பதற்காகப் பவளப் பூச்சியைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துப் போட்டுக் கொல்ல வேண்டும். பவளப்பூச்சி அழுகுவதும் இறப்பதும் பவளத்தைப்பெற வழிகளாம். முழுகி யெடுப்பவர் முயற்சியால் வெளியே வந்த பூச்சியின் சதைப்பற்று அழுகிக் கெட்டுப்போக மிஞ்சிய எலும்பே பவளமாகிறது. அதைப் பிறகு தொழிலாளிகள் செதுக்கித் துளைசெய்து வியாபாரத் துக்குத் தகுதியாய் ஆக்குவார்கள். இக்காலத்தில் இத்தொழில் செய்வோர் இத்தாலியா தேசத்தில் மிகுந்து இருக்கிறார்கள். செந்நிறமுள்ள பவளங்களே நற்பவளங்களாம். வெண்ணிறம் உள்ளவை சுண்ணும்புக் குதவும். சிவப்புப் பவளம் விசேஷமாய் மத்தியதரைக் கடலுக்குள் கிடைக்கிறது.

பவளத்தாலாகும் உபயோகம் சாதாரணமாய் மாலையாகக் கோத்து அணிந்து கொள்வதேயாம். பூர்வகாலத்தில் இதனை எகிப்தியரும் பிறரும் யுத்த ஆயுதங்கள் சிரகவசங்கள் முதலியவற்றை அழகுபடுத்த உபயோகித்து வந்தனர். நம் நாட்டில் பல ஆயிர ஆண்டுகளாக ஆயுள்வேதியரால் இது ஒரு மருந்துச் சரக்காக உபயோகிக்கப்பட்டு வருகிறது. வைத்தியர் இதற்குத் தக்கவழிகளாற் சூடேற்றிப் பஸ்மம் ஆக்கி அதனைத் தொண்டையைப் பற்றிய நோய்களுக்குக் கைகண்ட மருந்தாய் உபயோகிக்கின்றனர். தற்காலத்திலும் இத்தாலியர் பவளத் துண்டுகளை ரக்ஷையாகக் கட்டிக்கொள்கின்றனர். நாமும் தனிப்பவளமாலையும் முத்தும் பவளமும் கலந்த மாலையும் அணிந்து மகிழ்கின்றோம்.

இவ்விதம் பலவிதத்திலும் உபயோகப்படுகின்ற பவளம் ஒரு சிறு கடற்பிராணியின் உடம்பிலிருந்து நமக்குக் கிடைப்பது என்பதை நாம் மறக்கலாகாது. இதனுல் உலகில்வாழும் உயிர்ப் பொருள்களும் உயிர் இல்லாதபொருள்களும் நமக்கு விளைக்கக்கூடிய நன்மை பல உளவாம் என்பதை நாம் அறியலாம். இன்னும் நாம் அறியாது மறைந்திருக்கும் நன்மையுள்ள பொருள்கள் எத்தனையோ? ஒரு உயிரையும் வருத்தலாகாது என்பதும் கடவுள் படைப்பாக உள்ள ஒவ்வொன்றும் உலகத்தில் நம்மைப்போலவே உயிர்வாழ உரிமை பெற்றவை என்பதும் நாம் கவனிக்கத்தக்க விஷயங்களாம். ஆயினும் நாம் நம்முடைய சௌகரியங்களுக்காகவும் ஆடம்பர அலங்காரங்களுக்காகவும் பிற உயிர்களுக்குச் சத்துருக்களாகிறேம் என்பது நாம் நினைத்துப் பார்த்து வருந்தத்தக்கதேயாம். இந்த ஆடம்பரங்களை யெல்லாம் ஒழித்துவிடத் தீர்மானம் செய்தால் அநேக உயிர்களைக் காப்பாற்றிய புண்ணியசாலிகள் ஆவோம். கடவுள் கருத்து அதுவே என்பதை நம் அறிவே தெரிவிக்கும்.

---

## 10. மகமது நபி (முதற் பாகம்)

அகன்ற மணல் வெளிகளும் இடையிடையே பெரிய மலைகளும் சிறு குன்றுகளும் பாரைகளும் குளிர்ந்த நீர்நிலைகளின் சார்பில் எழுந்த சிறியவூர்களும் பெரிய நகரங்களும் உடைய அரபியா என்ற தேசம் ஐரோப்பா கண்டத்தில் உள்ள பெரிய நாடுகளைக் காட்டிலும் விஸ்தீரணம் மிக்கதாய் ஒரு லக்ஷம் சதுர மைல் அளவுடையதாய் இருக்கிறது. இப்பெரிய நாட்டிற் பல பகுதிகளிலும் சிறிது சிறிதாய்ப் பரவியிருக்கும் விளை நிலங்களின் அளவு பார்ப்பவர்க்குக் குறைவாகத் தோன்றிலும் அந்நாட்டின் மக்களுக்குப் போதுமானதாகவே இருக்கிறது.

இத்தகைய பெருமை படைத்த அரபிய நாட்டில் முன்னளிலே மலை நாட்டவராகிய பல கூட்டத்தார் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பெரும்பாலும் காவல் மிக்க நகரங்களிலும் கிராமங்களிலும் சிறுபான்மை வியாபாரத்தின் பொருட்டாகக் கூடாரங்களிலும் வாழ்ந்தனர். நாடுகளைக் கைப்பற்றும் பொருட்டும் வியாபாரப் பொருள்களைக் கொள்ளையிடும் பொருட்டும் அடிக்கடி இக்கூட்டத்தார் ஒருவர்க்கொருவர் போர் புரிந்து கொள்வதுண்டு. ஆயினும் இக்கூட்டத்தார் எல்லோரும் ஒரே பாஷை பேசினர். ஒரே குலத்தினர் என்றும் கருதினர். அவர்கள் அனைவரும் ஒரே விதமான தெய்வ நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்களுக்கு மெக்கா என்னும் நகரம் பெரிய க்ஷேத்திரமாக இருந்தது. அந்நகரக் காவலராகிய குரேஷி குடியினர் எல்லாக் கூட்டத்தார்க்கும் தலைமையாக இருந்தனர்.

மகமது நபி என்ற மகான் இந்நிலையில் இருந்த அரபிய நாட்டில் மெக்கா நகரத்தில் கி. பி. 570-ஆம் வருஷத்திற் பிறந்தார். அவர் தாய் வயிற்றில் இருக்கும் போதே தந்தையாகிய அப்துல்லா என்பவர் இறந்தார். இந்த அப்துல்லா என்பவர் குரேஷி குடியினரின் தலைவராகிய அப்தல் முத்தலீப் என்பவர் குமாரராவர். இதனால் மகமது நபி பிறப்புக் காலத்திலே அரபியர் பலரும் மதிக்கத்தக்க பெருமையும் உரிமையும் படைத்திருந்தார் என்று நாம் அறிகிறோம். மகமது என்ற குழந்தை தந்தையை இழந்த காரணத்தால் அந்நாட்டு வழக்கப்படி மணல் வெளிகளில் எதேச்சையாய் வளர்ந்து வரும்படி ஹலீமா என்ற செவிலித்தாயிடம் கொடுக்கப்பட்டார். ஐந்து வருஷம் நிரம்பியதும் தம் தாயாகிய அமீனவிடம் வந்து சேர்ந்தார். பிறகு சில நாட்களில் தம் தாயோடு மெடினு நகரத்துக்குப் போய் விட்டுத் திரும்பி வந்தார். வந்ததும் ஆறு வயது நிறைவதற்குள்ளாகத் தம்

தாயை இழந்தார். பிறகு பாட்டனாராகிய அப்தல் முத்தலீப் என்பவரால் வளர்க்கப் பெற்றார். அவரும் சில வருஷங்களில் இறந்ததால் குரேஷி குடியினர்க்குரிய பாத்தியம் மகமது கையிலிருந்து நழுவியது. செல்வம் சிறந்த அபுதலீப் என்ற உறவினர் பிறகு வளர்த்தார். அவருடன் இருந்த காலத்தில் ஸிரியா நாட்டில் ஒரு சிறு போர்க்கு உதவியாகப் போயிருந்தார். ஒவ்வொரு வருஷமும் மெக்காவில் நடைபெறும் மதவாதிகள் பெருங் கூட்டத்துக்குத் தவறாமற் போவார். அங்கு யூதரும் கிறிஸ்தவரும் தம் குடியினரும் வாக்கு நயத்தோடு பேசும் பேச்சுக்களைக் கேட்பார்.

மெக்கா நகரத்திலே தக்க தலைவர் இல்லாமலே சிலகாலம் சென்றது. இளம்பருவத்திலே மகமது மாடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்டிருந்தார். அந்நாளில் ஒருவிதமான தீயகுணமும் இன்றி வாழ்ந்ததாக அவரே கூறியிருக்கிறார்.

இருபத்தைந்து வயதாகும்போது இங்ஙல்லோர் வாழ்வில் ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அக்காலத்தில் அவர் தம்மை வளர்த்த உறவினர் தூண்டுதலால் கதிஜா என்ற சீமாட்டியின் வணிகக் கூட்டத்தோடு போஸ்த்ரா நகரத்துக்குப் பிரயாணம் செய்தார். கண்ணைக்கவரும் அழகுடையவராயிருந்த மகமது அந்தப் பிரயாணத்திலிருந்து திரும்பி வந்ததும் கதிஜா என்ற சீமாட்டியால் மணம் புரிந்துகொள்ளப் பெற்றார். இந்த விவாகத்தின் பிறகு மகமது மிக்க செல்வமுடைய ஒரு குடும்பத்தின் தலைவர் ஆனார். முப்பது வருஷகாலம் மனம் ஒருமித்து இம்மனைவியோடு வாழ்ந்தார். குடும்பத்தலைவரான பிறகு வியாபாரமுதலிய காரியங்களைப் பிறர் கையில் விட்டுத் தம் மனம்போனபடி தனிமையிலே சஞ்சரித்து வந்தார்.

இவ்வாறு தெய்வத்தின் உண்மை நிலையைப்பற்றி ஆராயக்கருதி அவர் தனிமையை விரும்பி வாழ்ந்த காலத்திலே

பல விக்கிரகங்களை வைத்து ஆராதனை செய்வது உண்மையான ஒரு கடவுளுக்குச் செய்த பெருந்துரோகம் ஆகும் என்பதை உணர்ந்தனர். நாற்பது வயது நடக்கும்போது, ஹீரா என்ற ஒரு மலையில் உள்ள குகையொன்றில் தனித்திருந்து தியானம் செய்து தேவதூதர் உதவியால் உண்மையான தெய்வத்தின் தன்மையை உணர்ந்தார். அன்று முதலே எல்லாம் வல்ல கடவுள் உலகமக்கள் அனைவர்க்கும் உண்மை யுணர்த்தும் வண்ணம் தம்மை நபிநாயகமாய் அமைத்ததாக விளம்பரம் செய்யத் தொடங்கினர். பின்னுளிலே அவர் எவ்வளவோ கஷ்டம் அனுபவித்த காலத்தும் 'லா இலா இல்லல்லா மகமது ரஸூல் அல்லா' என்று வழங்கும் 'அல்லா ஒருவனே தெய்வம் அவனருள் பெற்ற நபி மகமது' என்ற பெரும் பொருள் பொருந்திய வாக்கியத்தை மறுக்கவுமில்லை, மறக்கவுமில்லை. முதன் முதலாக அவர் கொள்கையை அங்கீகரித்தவர் அவர் மனைவியாராகிய கதிஜாப் பெருமாட்டியாரும் மருமகனுராகிய அலியாரும் அடிமை நீங்கிய ஸீது என்பவரும் ஆவர்.

மகமது நபி தமது நாற்பத்தோராம் பிராயத்திலே தம் சொல்லைக் கேட்க விருப்பமற்றிருந்த மெக்கா நாட்டவர் முன்னிலையில் தம் கொள்கையை விளக்கினர். மெக்கா நகரத்தார் தம் பரம்பரைத் தெய்வமாக இருந்த ஒஸா, லட், என்ற இரண்டு விக்கிரகங்களையும் பெருங்கோயிலில் வைத்துப் போற்றுவது தம் உரிமையென்று எண்ணியிருந்தனர். மகமது நபியின் உபதேசத்தை எல்லோரும் அங்கீகரிக்க நேரிடுமாயின் இந்த தேவாலயத்தை நம்பிப் பலராலும் பெரிய வருவாய் பெற்றுவந்த கூட்டத்தார்க்குப் பெருத்த நஷ்டமாக முடியும். ஆகையால் அக்காலத்திலே பெரும்பான்மை

யான அரபியர் அவர் சொல்லை ஏற்றுக்கொள்ளவில்லை. அபூ பக்கர் என்ற பிரபுவும் அவரைச் சார்ந்த சிலரும் புதுவழி யிற் சேர்ந்தனர்.

இஸ்லாம் மதத்தை அங்கீகரித்தவர் எல்லாரும் ஒரு நிகரே. அடிமையும் சுதந்தரம் பெறுவான். இஸ்லாமியர் எல்லாரும் சகோதரரே என்ற உண்மைகளை எங்கும் பரப்பி னர். நான்கு வருஷகாலம் உபதேசித்தும் நாலு பேருக்கு மேல் முஸ்லீம்களாகவில்லை. குரேஷியர் குடியினர் மகமது நபியையும் அவரைச் சேர்ந்தவர்களையும் மிகவும் சிரமப்படுத் தினர். மூன்று வருஷ காலம் தம் மனையகத்திலேயே சிறைச் சாலையிலிருப்பது போல இருக்க நேரிட்டும் அவர் மனம் தளரவில்லை. தமக்கு மிகவும் உதவியாய் இருந்த மனைவி யாரை இக்காலத்தில் இழந்தனர். உதவி பெறவேண்டும் என்ற எண்ணங்கொண்டு அருகில் இருந்த ஒரு கிராமத்துக் குச் சென்றனர். அங்கிருந்த ஜனங்கள் கல்லா லெறிந்தனர். 'கடவுளே, உம் சினம் ஒன்றுக்கே நான் அஞ்சுகிறேன்' என்று கூறிக்கொண்டு திரும்பி வந்தார்.

கி. பி. 620-ஆம் வருஷத்திலே மெக்கா நகரத்து வருஷ மகோற்சவம் நடைபெறும் போது மகமது நபி தமது புதிய கொள்கையைப் பலரும் அறியப் பிரசங்கித்தார். மெடினவிலிருந்து வந்திருந்த சில ஜனங்கள் அதைக் கேட்டு நம்பிக்கைகொண்டு மகமதியராயினர். அடுத்த வருஷத்தில் இன்னும் சிலரை அழைத்து வருவதாகக் கூறிச் சென்றனர். மூன்று வருஷத்திற்குள் மெடின நகரத்தவரிற் பலர் மகமதிய ராயினர். அந்த சமயத்தில் மகமது நபி, "கடவுளையும் அவர் நபியாகிய மகமது என்பவரையும் நம்பாதவர்கள் நரகத்துக் குப் போவர்" என்று பலரும் அறியக் கூறினர். இந்த நிலை மையில் மெடின வாசிகளில் சுமார் ஒரு நூறு ஜனங்கள் மகமதியரா யிருந்தனர்.

எட்டு வருஷமாக மெக்கா நகரத்தில் தமது புதிய கொள்கையை உபதேசம் செய்தும் பெரும்பான்மையோர் பின்பற்ருமையால் மகமது நபி தம் முன்னோர் பிறந்து வாழ்ந்து அரசு பூண்டிருந்த நகரமாகிய மெக்கா நகரிலிருந்து வெளியேற நேரிட்டது. பூர்வீக சொத்தை இழந்து, நம்பிக்கை கொண்டிருந்த சிலரையும் விட்டுப் பிரிந்து, மெடிஞ நகரத்துக்குப் போகலாயினர். புதிய மதத்தைத் தழுவியவர் எல்லாரும் தங்கள் தீர்க்கதரிசியிடம் அந்தரங்க பக்தியுடையவரா யிருந்தனர். மகமதியர் ஆன ஒவ்வொருவரும் விபசாரம், களவு, சிசுவதை, பொய் கூறுதல் என்ற பாவங்களிலிருந்து விலகி நியாயமான எல்லா விஷயங்களிலும் நபி நாயகத்தின் ஆணைக்கடங்கி நடந்து தங்கள் மதத்தின் பொருட்டு உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருப்பதாக ஸத்தியம் செய்தனர். மகமது கொஞ்சநாட் சென்றபின் ஆயேஷா என்ற மற்ருெரு ஸ்திரீயை இரண்டாவது மனைவியாக மணம் புரிந்தார். இந்நிலையில் குரேஷியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து முஸல்மான்கள் ஆகிய எல்லோரையும் அவர்கள் தலைவரோடு கொன்று குவிக்க வேண்டும் என்று ஒரு சூழ்ச்சி செய்தனர். இச்சூழ்ச்சியை அறிந்ததும், மகமது, மெடிஞ நோக்கிச் சென்றனர். அபூபக்கரும் கூடவே போனர். குரேஷியர் கையில் அகப்படாமல் தார் என்ற மலையில் மூன்று நாள் மறைந்திருந்தனர். பிறகு மெடிஞ நோக்கி விரைவிற் போய் ஒரு வெள்ளிக்கிழமை யன்று அந்நகர்க்குள் நுழைந்தனர். அன்று அவர் முதல் முதலாக இறங்கி ஒரு ஆலயம் அமைக்கப் பார்த்த இடத்தில் உள்ள க்ஷேத்திரத்துக்கு உலகத்தில் உள்ள மகமதியர் எல்லோரும் இன்றும் மிக்க பக்தியோடு போகிருர்கள்.

---

## 11. சோப்பின் சொந்தக் கதை

பள்ளிக்கூடங்களிலே மகிழ்ச்சியோடு புகுந்து எல்லா விஷயங்களையும் கற்றறிய முயல்கின்ற என் நண்பர்களே, என் கதையைக் கேளுங்கள். என் கதையில் ஒரு விசித்திரம் உண்டு. என் பெயர் தனித்தமிழிற் கிடையாது. இங்கிலீஷ் பாஷையில் எனக்கு ஸோப் என்ற பெயர் உண்டு. தமிழில் என்னைச் சிலர் சௌக்காரம் என்று சொல்வர். அந்தப் பெயரை வைத்துக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. உலக முழுவதும் வழங்கும் என் பெயர் ஸோப் என்பதே. நான் பல உருவங்களிற் பலவித மதிப்போடு உலகமெங்கும் உலாவி வருகிறேன். நிறம் மணம் உருவம் வெவ்வேறாயிருந்தாலும், எங்கும் என் தன்மை ஒன்றே. அத்தன்மை என்ன என்று அறிய விரும்புவீர்களாயிற் கூறுகிறேன். என்னோடு உறவு கொண்டவர் யாவரேயாயினும் அவரிடம் உள்ள அழுக்கைப் போக்கும் குணம் எனக்கு இயல்பாயமைந்திருக்கிறது. மனத்தின் அகத்தழுக்கைப் போக்க அமைந்த பரமாசாரியன் போல ஒவ்வொரு பொருளிலும் உள்ள வெளித் தோற்றமாகும் புறவழுக்கைப் போக்க நான் அமைந்திருக்கிறேன். என்னை நீங்கள் அற்பம் என்று கருதக்கூடாது என்பதற்காகவே இவ்வளவுஞ் சொன்னேன்.

என் பிறப்பு வளர்ப்பு தொழில் பயன் முதலியவை எல்லோர்க்கும் தெரியாது. சில காலத்திற்கு முன்பு இந்த தேசத்திலேயே நான் யாரையும் அறியாமலிருந்தேன். இப்பொழுது என்னை அறியாதவர் எவரும் இந்நாட்டில் இல்லை. நான் பல வருஷங்களாய் அயல் நாடுகளில் உலவி வருகிறேன். மற்ற நாட்டார் நான் அவர்களுக்கு இந்நாள் வரையில் விளைத்த நன்மையை அறிந்து உங்களுக்கும் என்னால் இயன்ற பயன் விளையும்படி என்னை இங்கே அழைத்து வந்தனர்

நான் முதல் முதல் வந்தபோது பெரிய நகரங்களிலும் பிரபுக்கள் வீடுகளிலுமே பழகி வந்தேன். இப்பொழுதோ உப்பு நுழையும் வீட்டிலெல்லாம் நானும் நுழைகிறேன். ஏழைகளின் தோழன் ஆகவேண்டுமென்று கருதியே நான் என் மதிப்பையும் தன்மையையும் குறைத்துக்கொண்டு இப்பொழுது ஸர்வதேச ஸர்வ ஜன உபகாரியாய் இருந்து வருகிறேன். அன்று பிறந்த குழந்தை முதல் நாளைச் சாகப் போகும் கிழவர் வரையில் என்னைத் தேடாதவர் இல்லை. சுகவாழ்வு உடையவர்களுக்கு நான் மணமும் குணமும் தந்து நோயாளிகளுக்கு நோய் நீங்கி நல்வாழ்வு வர உதவி புரிகின்றேன். என்னோடு பழகுவோர் எவர்க்கும் விரைவிலே நோய் ஒன்றும் வராது. வந்தாலும் எளிதாய் ஒழியும்.

என் பிறப்பு வளர்ப்பினை அறிய ஆவல் கொள்வீர்கள்; சிறிது கூறுகிறேன். ஆரம்ப காலத்திலே நான் இருந்த நிலைமை வேறு, இப்பொழுது இருக்கும் நிலைமை வேறு. ஆரம்பத்தில் நான் மாமிச சம்பந்தமான கொழுப்புக்களோடு கலந்து பழகியதுண்டு. இப்பொழுதும் சில நாடுகளில் அவ்விதமே நடமாடி வருகிறேன். இக்காலத்திற் பலரும் என்னை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் நல்ல மணமுள்ள உறவினர் நண்பர் சேர்க்கையால் நானும் சுத்தம் அடைந்து வருகிறேன். நல்ல மணமும் நிறமும் கலந்து கொழுப்பு என்ற நண்பர் உறவு பெற்றுச் சிலர்க்கு மாத்திரம் உபகாரியாய் இருப்பதைக் காட்டிலும் அந்நண்பர் உறவை யொழித்து எல்லார்க்கும் பயன்படும் நிலைமையில் இருப்பதே மிகவும் உயர்வு என்று எனக்குத் தோன்றுகிறது. என்னிடம் இந்த மாறுபாடு உண்டாகத் தொடங்கிய நாள் முதல் நான் பலவித உருவமும் உடையும் பூண்டு சிறு கிராமங்களிலும் நகரங்களிலும் சுற்றி வருகிறேன். பெரிய தொழிற்சாலைகளில் நான் பிறந்து வளர்ந்த கதை ஒருபுறம் இருக்க இக்காலத்

திற் சிறு குடிசைகளிலும் கூட அதிக மருத்துவச் செல வின்றியே நான் பிறந்து என்னைப் படைத்த பெற்றோர்க்கு மிக்க நன்மை விளைத்து வருகின்றேன் என்பதைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

இவ்வளவு தூரம் நான் பரவியும் இன்னும் என்னு டைய பிறப்பு வளர்ப்பு வரலாறுகளை அறியாத ஜனங்கள் பலர் இந்நாட்டில் இருப்பது எனக்கே வருத்தமா யிருக்கி றது. தொழில் செய்வது கேவலம் என்று எண்ணுவோர் பலர் இன்னும் இத்தேசத்தில் இருப்பதே இதற்குக் காரண மாம். நானே என் கதையைச் சொன்ன பிறகாவது பலர் தெரிந்து கொள்வார்கள் என்று நம்பியே இங்கே சொல்லத் தொடங்குகிறேன். என் தந்தையும் தாயும் யாவர் என்று நீங்கள் அறிய விரும்பலாம். தந்தை ஒரு மேல் நாட்டார். தாய் உங்களுக்கெல்லாம் பழக்கமானவளே. என் தந்தை யின் பெயர் காஸ்டிக் ஸோடா என்பதாம். சீமை மருந்துகள் விற்கும் இடங்களில் அவர் காணப்படுவார். வெண்மை நிறமாகச் சிறு சிறு துரும்புகளைப்போல அவர் தோன்று வார். அவரைத் தொட்டால் தொட்ட இடத்தில் புண் உண்டாம். என் தந்தையின் குணம் இவ்வளவு கடுமையா னது. அவர் உடம்பில் ஸோடியம், ஹைட்ரஜன், நைட்ரஜன் என்ற மூன்று பகுதிகள் உண்டு. அவரைக் கண்ணாடிச் சிறு வீடுகளில் அடக்கிக் காப்பாற்றுவார். பீங்கான் பாத்திரம் ஒன்றில் கொஞ்சம் தண்ணீர் விட்டு என் தந்தையாகிய காஸ் டிக் ஸோடாவை அங்கே புகச்செய்ய வேண்டும். தண்ணீ ரில் அவர் தம்மை மறந்து தூங்குவார். அச்சமயத்தில் என் தாயாகிய ஆமணக் கெண்ணெயிற் சிறிதளவு ஊற்றவேண்டும். இந்த ஆமணக் கெண்ணெய் கலந்த திராவகத்தை அடுப்பிற் கொதிக்க வைத்தால் எல்லாம் ஒன்றாய்க் கலந்து நுரைகட்டி இறுகும். இவ்வாறு இறுகிய பொருளே பல உருவங்களை

அச்சின்மூலம் அடைந்து வெளிவரும். காஸ்டிக் ஸோடா என்ற தந்தையும் ஆமணக் கெண்ணெய் என்ற தாயும் பெற்ற குழந்தை யார் என்று எண்ணுகிறீர்கள்? அக்குழந்தைதான் இதுவரையில் உங்களுக்குக் கதை கூறிய ஸோப் என்பதாம்.

தோழர்களே, எண்ணெயும் தண்ணீரும் என் உடம்பிற் கலந்திருப்பதால் நான் தண்ணீரிற் கரையவும் பிசுபிசுப்பாயிருக்கவும்நியாயமுண்டல்லவா? என் சரித்திரத்தில் விசித்திரம் என்னவென்றால் நான் எண்ணெய்ப் பசையோடிருந்தாலும் பிறபொருள்களிலுள்ள எண்ணெய்ப் பசையையும் அழுக்கையும் போக்கும் சக்தி எனக்கிருப்பதே. என் உடம்பில் எந்த நிறமும் எந்த மணமும் வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவற்றையெல்லாம் நீங்கள் கொடுத்தவண்ணம் நான் பூண்டு வருவேன். என் பிறப்பின் விசேஷம் நெய்ப் பசையுள்ள பொருள் புளிப்புப் பொருள் உவர்ப்புப் பொருள் என்ற மூன்றும் திராவக ரூபமாய்க் கலப்பதிலேயே இருக்கிறது. உங்கள் உடம்பின் தோலைப் புண்படுத்தக்கூடிய பொருள்களை என்னோடு நீங்கள் கலக்கலாகாது.

உடம்பின் நன்மைக்கு உதவ வேண்டுமென்றே சில மருந்துச் சரக்குக்களோடு சேர்ந்து நான் வெளி வருவேன். மணமும் நிறமும் மனத்தைக் கவர்வதாய் இருக்கவேண்டும் என்று கருதும் மனிதரிடம் அவர் விருப்பத்துக்கேற்ற உருவத்தோடு வெளி வருவேன். சமீப காலத்திலே எனக்குப் புதுப் புதுத் தோழர் பலர் கிடைத்திருக்கின்றனர். தேங்காய் எண்ணெய் சந்தனத் தைலம் முதலியவை முன்னளில் விளக்கெண்ணெயாகிய ஆமணக்கு நெய் செய்த வேலையைச் செய்து வருகின்றன.

எனக்கு வழங்கும் பெயர்கள் பல. அவற்றுட் சிலவற்றை உங்கள் ஞாபகத்தின் பொருட்டு இங்கே கூறி என் கதையை முடிக்கிறேன். பியர்ஸ், விநோலியா, குட்டிகுரா,

முதலியன சாமானியமாக வழக்கத்தில் உள்ளன. சந்தன சம்பந்தமுடைய மைசூர் சந்தன சோப் என்பது சமீபகாலத்தில் எனக்கு ஏற்பட்ட பெயராகும். அழுக்குப் போக்குவது என் முக்கிய வேலையாகையால் அதற்குத்தக்க பல புது உருவங்கள் எனக்கு உண்டு. துணிகளின் அழுக்கைப்போக்கும் பொருட்டு ஸன் லைட் என்ற பெயரோடு நெடு நாளாக நான் நடமாடுகிறேன். இந்நாளில் இந்நாட்டில் எனக்கு ஏற்பட்டிருக்கும் உருவங்களும் பெயர்களும் எண்ணித் தொலையா; ஏட்டிலடங்கா. ஒவ்வொரு கிராமத்தாரும் காலணாவுக்குக் கீழ்ப்பட்ட விலைக்கும் என்னைப் பெற்றுப் பயன் பெறுகின்றனர். அதிக மதிப்புள்ள நிலைமையில் நான் ஏழைகளுக்குப் பயன்படவியலாது என்பதை முன்பே கூறினேன். உடம்பின் பிணிகளைப் போக்க நான் மருத்துவத் தோழரோடு சேர்ந்து வரும்போது எனக்கு கோல்டார், கார்பாலிக், போரக்ஸ் முதலிய பல பெயர்கள் உண்டாகின்றன.

தோழர்களே, இவ்வண்ணமாகப் பல பெயர்களோடு நான் நாடெங்கும் உலவி வருதல் என் அன்புக்குரிய உங்கள் உடலும் உடையும் அழுக்கின்றி யிருக்கவும் அதனால் நீங்கள் சுகவாழ்வு பெற்று இன்புறவும் வேண்டியேயாகும். இந்த நாளிலும் கூடச் சிலர் என்னை நன்கு பயன்படுத்தாமல் நாறும் உடையும் நோய்பற்றிய உடம்பும் கொண்டு திரிகின்றார்களே. இந்தக் கோலத்துக்கு நான் என்ன சொல்வேன். இந்நாட்டிலே பல வியாதிகளுக்குக் காரணம் அறியாமையும் அசுத்தமுமேயாகும் என்று நான் உறுதியாய்க் கூறுகிறேன். அறியாமையை ஒழிக்க என்னால் இயலுமோ? அசுத்தம் என்ற என் விரோதியை இந்நாட்டினின்று அடியோடு அகற்றி விடவே நான் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன். என் முயற்சிக்கு உங்கள் உதவி அவசியமாகும்.

## 12. நல்லோர் இணக்கம்

'இணக்கமறிந் திணங்கு,' 'நல்லிணக்க மல்ல தல்லற் படுத் தும்' என்ற இரண்டு நீதி வாக்கியங்களையும் நாம் இள மைப் பருவத்திலேயே கற்றுணர்கிறோம். கற்றும் நம்மில் அநேகர் அவற்றால் அறிந்த வழியில் நடப்பதில்லை. நல்லோ ரோடு சேர்ந்து பழகுவதால் ஒருவன் அடையும் பெருமை யையும் தீயாரோடு இணங்குவதால் அடையும் இழிவையும் விளக்க நம் தேசத்தில் அநேக கதைகள் உண்டு. பிறக்கும் போதே ஒருவன் இயற்கையிலே துஷ்டனாய் இருப்பதில்லை. அதுபோல இயற்கையிலே ஒருவன் மகாத்மா ஆய்விடுவான் என்று சொல்ல முடியாது. உலக விஷயங்களை அறியத்தக்க பருவம் வந்தபின் ஒருவன் தான் கற்கும் புத்தகங்களாலும் நெருங்கிப் பழகும் நண்பர் உறவினர் அயலார் முதலியோர் கூட்டுறவாலும் நன்மையோ தீமையோ ஆகிய குணத்தையும் நடத்தையையும் அடைகிறான். இவ்விஷயங்களை விளக்க ஒரு மனிதன் வாழ்விலேயே இருவகை இணக்கத்தாலும் நேர்ந்த பயன்களை எடுத்துக் காட்டுவோம்.

ஆரியா வர்த்தம் என்ற மறுபெயர் பூண்ட ஹிந்து ஸ்தானத்தில் பல்லாயிர வருஷங்களின் முன்பு ஒரு பிரா மணச் சிறுவன் இருந்தான். அவன் இளமைப் பருவத் திற் பெற்றோர் சொன்ன சொற்களைக் கேட்காமல் தன் மனம் போனவாறு திரிந்துகொண்டிருந்தான். படித்தற் குரிய பருவத்தில் துஷ்டச் சிறுவரோடு சேர்ந்து விளையாடி ஊரெங்கும் கலகம் விளைத்துப் பொழுது போக்கி வந்தான். சிறிது வயதானதும் ஊரார்கள் கட்டுப்பாட்டுக்கும் பெற்றோர் ஆணைக்கும் அடங்கி நடக்க இஷ்டம் இல்லாதவனாய் "நாட் டில் வாழ்ந்து பிறரால் இகழ்ச்சி பெறுவதைக் காட்டிலும் காட்டில் வேடர்களோடு சேர்ந்து சுயேச்சையாய் வாழ்வதே

சிறப்பானது" என்று எண்ணினான். சிறு வயதில் அடங்கி ஒழுங்காய் நடவாமையால் அவன் பிறந்த ஊரில் அவனுக்கு வாழ்விடம் இல்லாது போயிற்று.

அவன் காட்டுக்குச் சென்றதும் வேடர்களுள் ஒருவனைக் கண்டு சிநேகம் செய்து கொண்டு அவனுடன் கூடவே வேட்டையாடுதல், வழிப்பறி செய்தல், மதுபானம், உயிர்க் கொலை முதலிய பாவத் தொழில்களைச் செய்து பழகினான்.



நாரதர் வேடனுக்கு உபதேசம் செய்தல்

பிறகு தானே தனக்குத் தலைவன் ஆயினான். வேடன் ஒருவன் தன் மகளை மணம் புரிவிப்பதாய்ச் சொல்ல விவாகப் பருவம் வந்துவிட்டதால் தன் குலவொழுக்கங்களை முற்றிலும் மறந்து வேடப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான். சில வருஷங்களிற் பெரிய குடும்பியானான். குடும்பக்கவலை அதிகமாக ஆக அவன் செய்த பாவத் தொழில்களும் வளர்ந்தன. காட்டோரமாக ஒரு நகரத்திலிருந்து

மற்ெருரு நகரத்துக்கு மனிதர் நடந்து செல்லக்கூடிய பெரிய பாட்டைகள் இருக்கும். அப்பாட்டைகளின் இரு புறங்களிலும் மரங்கள் அடர்ந்திருக்கும். அவ்வாறு அமைந்த மரங்களின் நிழலில் மறைந்து அவ்வழியில் வருவோர் போவோரை வெருட்டி வழிப்பறி செய்து சில சமயங்களிற் கொலைகளும் செய்து வாழ்ந்து வந்தான். சிறுவர்களே, இந்தப் பிராமணச் சிறுவன் இவ்வளவு துஷ்டனுகை மாறி எல்லா விதப் பழி பாவங்களையும் துணிந்து செய்யக் காரணம் என்ன? 'நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்' என்ற முதுமொழி பொய்படுமா?

அவன் இவ்வாறு சூறையாடி வருகையில் ஒரு நாள் நாரத முனிவரும் வேறு சில பிராமணர்களும் அவ்வழியாய் வந்தார்கள். அவர்களிடம் இருந்த பொருள்களையும் மனத் துணுக்கமின்றிக் கொள்ளை கொண்டான். கொள்ளைப் பொருள்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு தன் வீட்டுக்குப் போகப் புறப்படுகையில் நாரதர் அவனைப் பார்த்து இனிய மொழிகளால், "அப்பா, நீ செய்துவரும் இத்தொழிலில் மிகுந்த பாவம் உண்டே. இவ்வளவும் யாருக்காகச் செய்கிறுய்?" என்று கேட்டார். அதற்கு அவ்வேடன், "ஐயா, என் குடும்பத்தாரைக் காப்பாற்றும் பொருட்டாகவே இந்தத் தொழிலைச் செய்து வருகிறேன்" என்றுன். முனிவர், "அப்படியாயின் நீ செய்யும் பாவத்தில் அவர்களுக்கும் பங்கு இருக்க வேண்டுமே" என்றுர். வேடன் "இல்லாமல் என்ன? நான் சம்பாதிக்கும் பொருள்களை என்னேடு அவர்கள் ஒற்றுமையாய்க் கலந்திருந்தனுபவிக்கவில்லையா? அது போலவே நான் தேடும் பாவங்களையும் அடைவார்கள்" என்றுன். திரும்பவும் முனிவர், "அப்பா எனக்கு அந்த விஷயத்திற் கொஞ்சம் சந்தேகம் உண்டு. ஆகையால் உன் மனைவி மக்களைக் கேட்டு அவர்கள் சொல்வதைத் தெரி

விக்கிருயா? நீ வரும் வரையில் நாங்கள் இங்கேயே இருக்கிரேம். உன் மூட்டையை நீயே எடுத்துப் போகலாம்'' என்று கனிவோடு சொன்னர்.

வேடன் இம்மொழிகளைக் கேட்டு மனத்தில் எண்ணமிட்டுக்கொண்டு கொள்ளைப் பொருள் மூட்டையோடு வீட்டுக்குப் போனன். வீட்டை அடைந்ததும் தன் மனைவி மக்களையழைத்து நாரத முனிவர் கேட்ட வண்ணம், "நான் தேடும் பொருள்களை நீங்கள் அனுபவிக்கிறீர்களே. பொருள்தேட நான் செய்யும் பாவங்களில் உங்களுக்குப் பங்கு உண்டோ?'' என்று வினவினன். அவர்கள் ஒருவரும் தக்க மறுமொழி சொல்லாமற் சிறிது நேரம் மௌனமா யிருந்தனர். பிறகு அவன் மனைவி, "இந்தக் கேள்வி கேட்க வேண்டிய அவசியமில்லையே. நீ எங்களை ஆதரிக்கக் கடமைப் பட்டவன். உன் கடமையை நிறைவேற்ற நீ பாவத்தைச் செய்தாலும் புண்ணியத்தைச் செய்தாலும் அதைப்பற்றி எங்களுக்கு என்ன கவலை? இப்படி வீண் பேச்சுப் பேச நேரமில்லை. குழந்தைகள் எல்லாம் பட்டினியாய்க் கிடக்கிருர்கள். இன்றைய உணவின் பொருட்டு என்ன தேடி வந்தாய்? அதை இங்கே கொடு'' என்று கூறினள். வேடன் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் மூட்டையோடு முனிவர் இருக்கும் இடத்துக்கு வந்தான்.

நாரத முனிவர் அவன் வருவதையும் அவன் மனநிலைமையையும் அறிந்து முன்பு பேசியதைக் காட்டிலும் மிகவும் அன்போடு பேசினர். முனிவர், "ஏனப்பா மூட்டையைத் திருப்பிக் கொண்டு வந்தாய்?'' என்று கேட்டார். வேடன், "என் பாவத்திற் பங்கு பெருதவர்களுக்கு என் பாவத்தால் வந்த பொருளைக் கொடுத்தலாகாது என்று எண்ணிக்கொண்டு வந்தேன்'' என்ருன். பிறகு அவன் முனிவரைப் பார்த்து, "எனக்கு இனி நற்கதியடைய வழியுண்டா?'' என்று கேட்

டான். முனிவர் அவன் முகத்தை அன்போடு நோக்கி ராம மந்திரத்தை உபதேசித்தார். அது அவன் வாயில் நுழைய வில்லை. எதிரிலிருந்த மராமரத்தைக் காட்டி அப்பெயரை இடைவிடாது நாவால் உச்சரித்து ஒரு இடத்தில் அமர்ந் திருக்கச் சொன்னார். அவன் அவ்வாறே அநேக வருஷங் கள் இருந்து உடம்பெல்லாம் புற்று மூடவும் உணர்ச்சியற் றுத் தவஞ் செய்தான்; பிறகு ஞானோதயம் ஆயிற்று. ஞானம் என்ற நெருப்பின்முன் பாவங்கள் நிற்குமா? புற்றாய் நிலைத் திருந்தபோது வான்மீகமுனி என்ற பெயர் அப்பெரியார்க்கு வந்தது. திரும்பவும் ஒரு முறை நாரத முனிவர் அவ்வழி யில் வந்து இந்த அதிசயத்தைக் கண்டார்.

வான்மீக முனிவர் தம் தவம் கலைந்து எழுந்ததும் நதிக்குச் சென்றார். வேடன் ஒருவன் அங்கே தனது அம் பால் இரட்டையாய் அன்போடு குலவியிருந்த கிரௌஞ்சப் பறவைகளில் ஒன்றைக் கொன்றான். அக்காட்சியைக் கண்ட தும் முனிவர் மனம் புண்பட்டது. அவர் வாக்கிலிருந்து ஒரு வடமொழிச் செய்யுள் எழுந்தது. "வேட, நீ அன் போடு குலவியிருந்த இரண்டு பறவைகளில் ஒன்றைக் கொன்று யாகையால் அழிவற்ற இன்ப வாழ்வை அடையமாட்டாய்" என்பது அதன் பொருளாம். பின்பு முனிவர் நதியிலே தம்கடன் களை நிறைவேற்றித் தவச்சாலைக்குத் திரும்பினர். தம் வாயில் தம்மையறியாமலே எழுந்த வடமொழிச் செய்யுளின் பொரு ளைச்சிந்தித்துக் கொண்டே வந்தார். அதில் அவர்க்கு வேறொரு பொருளும் தோன்றலாயிற்று. "குரூர குணமிக்க அரக்க தம்பதியருள் ஆண்மகனைக் கொன்றாயாகையால் திருமகள் தலைவணங்கிய இராமபிரானே நீ அழிவற்ற புகழைப் பெறு வாய்" என்பது அப்பொருளாம்.

நாரதர் ஆசிரமத்தில் இருந்தார். அவர் வான்மீகமுனி வர் தவச் செல்வத்தைப் புகழ்ந்து அவர் விரும்பியவாறு

இராம சரித்திரத்தை ஆதியோடந்தமாகக் கூறினர். வான்மீக முனிவர் இதுவும் தெய்வச் செயல் என்று எண்ணி நான்கு அடிகளால் அமைந்த விருத்தம் என்ற வடமொழிச் செய்யு ளால் இராமாயணத்தைப் பாடி முடித்தார். இராமபிரான் குமாரராகிய குசலவர்க்குப் பாடம் போதித்து இராமபிரான் அசுவமேதயாகம் செய்த மண்டபத்திலே அரங்கேற்றினர். இதனுல் ஆதிகவி என்ற கீர்த்தியும் உலகம் புகழும் பெரு மையும் அடைந்தார்.

பிள்ளைகளே, ஒரு மனிதன் ஒரு பிறப்பிலேயே வேடர் சேர்க்கையாற் கெட்டழிந்து பெரும் பாவியானதும் பின்பு முனிவர் இணக்கத்தாற் சீர்திருந்தி உயர்வு நிறைந்த தவ வொழுக்கமுடைய முனிவரும் மஹா கவியும் மஹாத்மாவும் ஆனதும் உண்மையான சரித்திரமே என்பதை நீங்கள் அறிய வேண்டும். இதனுல் விளங்குவது என்ன? முன்னே ஆரம் பத்திலே கூறிய நீதியின் விளக்கமே யன்றோ? தீயோர் இணக்கம் தீமையே பயக்கும் என்பதும் நல்லோர் இணக்கம் நன்மையே விளைக்கும் என்பதும் இச்சரித்திரத்தால் நாம் அறியத்தக்க உண்மைகளாம். உலகத்தில் நல்லோர் மிகவும் குறைவாக இருப்பர். தீயோரே பலராய் இருப்பர். நாம் இவ்வுலகில் நல்வாழ்வு வாழ விரும்புவோமாயின் மிக்க சிரமப்பட்டாயினும் நல்லோரைத் தேடி அடைந்து நட்புப் பூண்டு வாழவேண்டும். தீயோர் நம்மிடம் அன்புடையார் போல் நெருங்கிவரினும் நாம் நம் அறிவை உபயோகித்து விலகி விடவேண்டும்.

## 13. புலவரின் மனேதைரியம்

புலவர்கள் தங்கள் கல்வியறிவால் உலகத்திற் குபகாரமான பல காரியங்களைச் செய்திருக்கிறுர்கள். எந்த நாட்டிற் பிறந்தாலும் எந்த பாஷைப் புலவராயிருந்தாலும் அவர்க

ளுக்குப் பொதுவான சில குணங்கள் உண்டு. ஆழ்ந்த கல்வியும் பிறர்க்குப் புலப்படாத அரும் பொருள்களைத் தாம் ஆராய்ந்தறிந்து வெளியிடும் தரும சிந்தையும் புலவர் பொது இயல்பு. சில செய்யுட்களைக் கற்று முறையறிந்தோ அறியாமலோ சில நூல்களை எழுதிய வளவில் தாமும் புலவர் என்று கூறிக்கொள்ள விரும்புவோர் பலர் எங்கும் உண்டு. இத்தகைய பொய்ப் புலவர்களுக்கு உண்மைப் புலவர்க்கிருக்கும் உயர்குணங்கள் அமைவதில்லை. 'கல்விக்குக் கரையில்லை; கற்பவர்க்கு ஆயுள் குறைவு,' என்று கூறிய புலவர் தம் வாழ்நாளெல்லாம் மேன்மேலும் புதுப்புது விஷயங்களைக் கற்றறிந்து இன்புற்று வாழ்தல் அதிசயமல்லவே?

இத்தகைய உண்மைப் புலவர்கள், இன்ப துன்பங்கள் மாறி மாறி வரும் உலக வாழ்விலே இன்பங் கண்டவுடன் அதிக மகிழ்ச்சியும் துன்பம் வந்தவளவில் அதிகத் துயரமும் அடையார். எல்லாம் இறைவன் செயலால் வருவனவே என்று அமைந்து வாழ்வர். தாழ்ந்த நிலையில் வாழும் மக்களைக் கேவலமாக மதித்தலும் உயர்ந்த நிலையை அடைந்த மனிதர்களை அவர்கள் நிலைமை கருதிப் பாராட்டலும் புலவர் இயல்பன்று. வாழ்விலும் தாழ்விலும் உள்ள தெய்வத் திருவருளைப் பிறர்க்கு நன்கு விளக்குவதே புலவர் தொழிலாம். எல்லாவகை நற்குணங்களும் ஒருவரிடம் அமைதல் அருமை. ஒருவர் தீமையே நிறைந்தவரா யிருப்பதும் இல்லை. புலவருட் பெரும்பான்மையோர் பண்டைக் காலத்தில் நம் நாட்டில் வாழ்ந்த அரசரால் ஆதரிக்கப் பெற்றனர். அவ்வாறு ஆதரிக்கும் குணமுடைய பிரபுக்களைப் புகழ்ந்து பாராட்டுவது புலவர்க்கு இயல்பே. அப்படிப் புகழுங் காலத்திலும் முன்னைநாட் புலவர்கள் உண்மைக்கு மாறாக ஒன்றும் கூறியதில்லை. தம்மை மதியாத பிரபுக்களை இப்புலவர்கள் தாமும் மதிப்பதில்லை. வறுமைக்கு வாழ்

விடமாகிய புலவர்கள் செல்வர்களை மதியாது வாழ முடியுமோ என்று சிலர் கேட்கலாம். உண்மைப் புலவரின் மனோ தைரியம் என்ற குணம் வெளியாகும் சந்தர்ப்பங்கள் இக் கேள்விக்கு விடையளிக்க உதவும். நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் புலவரின் மனோதைரியத்தை விளக்கும் செய்திகள் பல உண்டு. அவற்றுள் ஒன்றிரண்டை இங்கே எடுத்துக் கூறுவோம்.

ஆங்கில பாஷையில் முதன் முதலாக அகராதி எழுதிய ஸாமுவல் ஜான்ஸன் என்ற பெரும் புலவர் நம் நாட்டுப் புலவர்களைப் போலவே வறுமையைத் தம் வாழ்வின் துணையாய்க் கொண்டவர். அவர் காலத்தில் செஸ்டர் பீல்ட் பிரபு என்ற திரவிய வந்தர், சிறந்த வித்வானாகவும் தம் செல்வாக்கால் புலவர்களை நல்ல நிலைமை அடைவிக்கக் கூடியவராகவும் இருந்தார். இந்தப் பிரபுவின் ஆதரவைப் பெற்றுத் தம் அகராதியை நாடெங்கும் பரப்ப விரும்பிய ஜான்ஸன் புலவர் இவர் மாளிகைக்குப் பல முறை போய் இவரைக் காணவேண்டும் என்று காத்திருந்தார். காணச் சமயம் வாய்க்கவில்லை. கடிதத்தின் மூலம் தம் கருத்தைத் தெரிவித்தார். பிரபுவிடமிருந்து தக்க மறுமொழியொன்றும் வரவில்லை. ஜான்ஸன் இந்த முயற்சியில் மனஞ் சலித்து இனிக் காத்திருந்து பயன் இல்லை என்று எண்ணித் தம் அகராதிப் புத்தகத்தை மிக்க சிரமத்தின்மேல் அச்சிட்டு



ஜான்ஸன்

வெளியிட்டார். புத்தகம் வெளிவந்து புத்திமான்களால் நன்கு மதிக்கப்படுவதாக அறிந்த செஸ்டர் பீல்ட் பிரபு அதைப்பற்றி ஒருபத்திரிகையிற் பாராட்டி எழுதினர். அதை அறிந்த ஜான்ஸன் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதம் இக்காலத்திலும் ஆங்கில பாஷையில் மிகச் சிறந்த ஒரு கட்டுரையாக மதிக்கப்படுகிறது. பிள்ளைகளே, நீங்கள் பெரிய வகுப்புக்களிற் படிக்கும்போது அக்கடிதத்தை நேரிற் பார்க்கக்கூடும். அதன் கருத்துச் சுருக்கமாகச் சொல்லப் புகுந்தால் 'புலவர் தாமாக விரும்பித் தேடியபோது பெருத ஒரு பிரபுவின் ஆதரவைப் பிறகு தாம் நல்ல நிலைமைபெற்றுத் தம் முயற்சியாலேயே எண்ணிய எண்ணம் நிறைவேற்றிக் கொண்டதன்மேல் வலிய வருமாயினும் ஏற்றுக் கொள்ளார்' என்பதாம். இக்கடிதத்தின்மூலம் ஜான்ஸன் புலவரது இயற்கைப் பெருமை இன்றும் உலகம் புகழத்தக்கதா யிருக்கிறது.

இதுபோலவே நம் தமிழ் நாட்டுப் புலவர் சரித்திரங்களிற் புலவர்களின் மனோ தைரியத்தைக் குறிக்கும் செய்திகள் சில உண்டு. கம்பர் என்ற புலவர் சோழ ராஜாவின் ஸமஸ்தான வித்வானய் இருந்தார். அவன் அவரை மிகவும் அன்போடு ஆதரித்து வந்தான். ஒரு நாள் கம்பருக்கும் சோழனுக்கும் இடையில் நேர்ந்த விளையாட்டுப் பேச்சு வினையாய் முடிய இருவருக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. அது காரணமாக அரசன் அவரை மறுநாள் சபைக்கு வருவித்துப் பலர் முன்னிலையில் அவமானமாகப் பேசித் தன்னை விட்டு அகன்று போகச் சொன்னன். அதைக் கேட்ட புலவர் சிறிதும் அஞ்சாமலும் மனம் தளராமலும் தாம் முன்னே அவனிடம் பெற்றிருந்த சிறப்புக்களை அங்கேயே கழற்றி வைத்து விட்டு,

"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை யோதினேன்—என்னை

விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு"

என்று பாடிவிட்டு விலகிச் சென்றார்.

மற்றொரு பழைய புலவர் தம்மை நன்கு ஆதரிக்காத ஒரு பிரபுவைப் பார்த்து, "புலவரை ஆதரிக்கும் வழியை நீ அறியாய். புலவரை ஆதரிக்க இவ்வுலகில் வேறு ஒருவரும் இல்லாமற் போகவில்லை. என்னைப் போன்ற புலவர் உலகில் இருப்பதையும் என்னை ஆதரித்த அரசனைப் போன்ற அரசர் இருப்பதையும் நீ அறியும் பொருட்டாக அவன் எனக்குக் கொடுத்த பெரிய யானையை உன் நாட்டை யடுத்துள்ள காட்டில் இருக்கும் பெரிய மரத்திற் கட்டியிருக்கிறேன்" என்று கூறினார்.

பிறர் கைபார்த்தே பிழைக்க வேண்டிய வறுமை நிலையில் வாழ்ந்த புலவர்களே இப்படி இருந்தார்களென்றால் உலகில் நன்கு வாழும் பேறுபெற்ற இக்காலப் புலவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும்? ஒரு நாட்டுப் புலவரின் ஊக்கம், முயற்சி, மனோதைரியம் என்ற குணங்களால் அந்நாட்டின் சிறப்பு உலகெங்கும் பரவுகிறது.

---

## 14. திருடன் திருந்தியது

### செய்யுள்

பிறர்பொருள் கவர்வ தேதன் பொருந்தொழி லாகக் கொண்டோர்
மறவனோர் நாட்டில் வாழ்ந்து வந்தனன். அவன் ஓர் நாளில்
அறவினை புரிந்து வந்த அந்தணர் பொருளைத் தானே
பெறவிருப்புடைய னாகிப் பின்னரே தொடர்ந்து சென்றான்.

இருட்டினில் ஒருமுடுக்கில் எதிர்ப்பட்ட அவரைக் கண்டு
வெருட்டினன் கையில் உள்ள மிகுபொருள் கொள்ளை கொள்ளும்
பொருட்டவர் அருகில் வந்து புடைத்திட நெருங்கி நின்றான்.
திருட்டினிற் சிந்தை வைத்த திருடனை யவர்கள் நோக்கி

"அப்பனே பொருளே வேண்டியடித்துநீ புடைத்தல் வேண்டா
செப்பவே யொன்று கேளாய் திருட்டிலே திரிந்தா யேனும்
ஒப்பவே யுண்மை பேசி யுலகினில் வாழ்ந்து வந்தால்
தப்பவே மாட்டாய் ஓங்குந் தருமமே செய்தாய் ஆவாய்

எம்பொருள் இவற்றை நீயே எடுத்துக்கொள்" என்று சொல்லித்
தம்பொருள் தந்தந் நல்லோர் தம்வழி போன பின்னர்
வம்பொரு சிறிது மில்லா வழியிலே வாழ வெண்ணி
வெய்பொருள் களவிற் கொண்டு மெய்சொல்லி வாழ்ந்து வந்தான்.

அந்தநாட் டரச ஞேர்நாள் அன்பினுல் நாடு காக்கத்
தந்தநல் வேடத்தாலே தன்னுரு மறைத்துக் கொண்டு
வந்தனன் இருட்டில் மன்னன் வருவதைக் கண்ட கள்வன்
சிந்தனை யரசன் வீட்டில் திருடுதற் கென்று சொன்னுன்.

"அன்ப நீ யரசன் வீட்டில் அரும்பொருள் கவர வெண்ணிற்
பொன்பொருள் மறைத்து வைக்கும் பொருளறை காட்டுகின்றேன்
வன்பினுற் கன்னம் வைத்து வழிசெய்து புகுவோம்" என்று
தன்பொருள் திருட மன்னன் தருந்துணை யாகச் சேர்ந்தான்.

தம்மையாள் மன்ன னென்று தன்றுணை வனையெண் ணுமல்
மெய்ம்மையே பேசுங் கள்வன் விருப்பொடு மழைத்துச் சென்று
செம்மையா லரசு செய்வோன் செப்பிய வழியாற் புக்கு
வெம்மையாம் பெரிய பாவம் விளைத்திடும் களவு செய்தான்.

ஒளியினுல் விலையால் மிக்க வுயர்ந்தமா ணிக்கக் கற்கள்
தெளிவினுல் இருட்டில் மிக்க சிறப்பொடு தெரியக் கண்டே
அளியினுல் மிக்க மன்னன் அன்பினுற் கள்வன் றன்னை
"வெளியில் நாம் எளிதாய்ப் போக விரும்பினுல் இதுவேபோதும்"

என்றனன் மூன்று கற்கள் இருப்பன வெடுத்துக் காட்டி
நின்றனன் கள்வன் அந்த நெறியினை நெஞ்சால் எண்ணி
"என்றுணை நண்பனேயாம் இவ்வருஞ் செல்வம்கொண்டால்
பொன்றிரு டுதலொ ழிந்து பூணலாம் நல்வாழ் வென்றும்.

கற்கள்மூன் றிருத்த லாலே கருத்துள துணைவனே நாம்
பற்பலர் காணு முன்னம் பகிர்ந்திடல் வேண்டு மாயின்
அற்பமுங் கருதி டாமல் அரசனுக் கொன்றை வைத்து
விற்பதற் கேற்ற வண்ணம் மிகுமிரண் டெடுத்துச் செல்வோம்.

பெருவிலை பெறுவ தாமிப் பெரியகல் மூன்றும் மன்னன்
உரிமையாய் நெடுநாள் இங்கே யுலகினர் அறியா வண்ணம்
பொருளறை யினில்மறைத்த புதுமையை யின்று கண்டோம்
புரவலன் பொருட்டிங் கொன்றைப் போகடல் பொருத்த மன்றே."

என்றனன். இதனைக் கேட்ட ஏந்தலும் "அதுவும் நன்றே
நன்றது செய்வோ" மென்று நன்மணி யொன்றை வைத்து
நின்றமற் றிரண்டைக் கொண்டு நிசியினில் வெளியே வந்தான்.
என்றுமே மெய்ம்மைபேசும் இயல்புடைக் கள்வன் போனன்

மன்னவன் தன் பங்காக வந்ததோர் மணியைக் கொண்டு
தன்னுடை யரண்மனைக்கண் தான்தனி யாக வந்தான்
பின்னரு மிரவிற் செய்த பெருந்திருட் டறிய வெண்ணி
நன்னல வமைச்சர் காவல்நலஞ்செய்வோர் தமைய ழைத்தான்

அமைச்சருட் டலைவ னுனேன் அரண்மனைப் பொருட்சாலைக்குள்
இமைப்பினிற் புகுந்து கள்வர் இருக்கவே வைத்துச் சென்ற
சுமைப்பெருவிலைகொள் கல்லைத் துணிவொடு கவர்ந்து கொண்டு
'நமைப்பிறர் காணுர்' என்று நல்லவன் போல வந்தான்.

அரசனை நெருங்கி "ஐயய வறநெறி யறியாக் கள்வர்
அரமனை நிதிச் சாலைக்கண் அருவிலை மணிகள் மூன்றைக்
கரவினிற் கவர்ந்து சென்றார் கள்வரைப் பிடிக்க வேண்டி
விரைவினிற் காவ லாளர் வெளிச்செல விடுத்து வந்தேன்."

என்றது கேட்ட மன்னன் "இவன்நமக் கமைச்ச னேனும்
இன்றிவண் ஒருமா ணிக்கம் எடுத்தனன் மறைத்துக் கொண்டான்
நன்றிது காண்போ" மென்று நடுநிசித் திருட்டுச் செய்த
தன்றுணைக் கள்வன் றன்னைத் தன்முனர் வருவித் தானே.

கள்வனை நோக்கி "நேற்றுக் களவுசெய் தவன்நீ யாகில்
உள்ளது சொல்லாய் எங்கள் உரிமையாம் பொருள்கள் நீதான்
கொள்ளைகொண் டதன்கணக்கைக் குறிப்பிடு துணையாய் வந்த
கள்வர்தாம் இன்னார் என்று காட்டுவாய் இயலு மானால்."

"என்னொடு திருட வந்தார் யாரென வறியேன் யானே
பொன்னொடு பொருள்கள் காணேன் பொருளறை புகுந்து கற்கள்
நன்னிறச் சிவப்பு மூன்றில் நண்பனொன் றியானொ ன்றாக
மன்னனே கவர்ந்து சென்றோம் மாணிக்கம் இதுவே காணீர்"

என்றவ னொன்றை வைத்தான் எந்தலொன் றெடுத்து வைத்தான்
நின்றமந் திரியை நோக்கி "நீரொன்று வையும்" என்றான்
அன்றவன் மனத்திற் கொண்ட வச்சத்தை வருத்தந் தன்னை
நன்றெடுத் துரைக்க வென்றால் நம்திறம் போதா தன்றே.

மந்திரி தன்னை நோக்கி மன்னவன் பின்னும் சொல்வான்
"இந்திர திருவாய்ந்தாலும் எவன்பிறர் பொருளை வேண்டான்
தந்திர மிகுந்தோன் போலத் தகுவிலை மணிகைக் கொண்டாய்
மந்திரச் சுற்ற மாகும் மதிப்புளா யல்லை நீயே.

கள்வனு யிருந்தா னேனும் கரவொரு சிறிது மின்றி
உள்ளதை யுள்ள வாறே யுரைத்தனன் நீயும் கேட்டாய்
எள்ளலில் மேன்மை யென்றும் எக்குடிப் பிறந்திட் டாலும்
கள்ளமின் றுண்மை பேசும் கருத்தினர் தமக்கே" யென்றான்.

திருடனை நோக்கி மன்னன் "திருட்டினை விட்டா யாகில்
தருவன் யான் உனக்கு மிங்கே தக்கதோர் பதவி" யென்னப்
பெருமகிழ் வுடனே யந்தப் பிரியமாந் தொழிலை விட்டு
வருமுறை தெரிந்து மன்னன் வாயில்கா வலைமேற் கொண்டான்.

கொள்ளையே தொழிலாகக் கொண்ட கொடியனு யிருந்த கள்வன்
உள்ளமே திருந்தி வாழ்வில் உயர்ந்தனன் மேன்மை கொண்டான்
கள்ளமில் மனத்தர் என்றும் கடவுளின் அருளால் வாழ்வில்
உள்ளபன் னலமுங் காண்பர் உயர்வடைந் திருப்ப ரன்றே.

உயர்ந்ததோர் பதவி வாய்ந்தும் உண்மையாம் ஒழுக்க மில்லா
தயர்ந்ததால் அமைச்சனானோன் அரசனால் விலக்கப் பட்டான்
பயின்றதீ நெறியி லுண்மைப் பண்பொடு வாழ்ந்து பின்பு
பெயர்ந்ததால் உயர்வு பெற்றான் பெருமைகொள் கள்வ னன்றே.

எந்நிலை யிருந்தா ரேனும் எத்தொழில் புரிந்தா ரேனும்
அந்நிலை யமையும் வண்ணம் அகமுறத் தூய ராகிச்
செந்நிலை நின்று மெய்ம்மை திகழ்ந்துள வுள்ளத் தோடு
மெய்ந்நிலைப் புகழே பூண விரும்புதல் வேண்டு மன்றே.

பொய்ம்மையே பாவ மெல்லாம் புகுந்திட வழியைக் காட்டும்
பொய்ம்மையே களவுசெய்யப் புறப்படச் சொல்லித் தூண்டும்
பொய்ம்மையே கொலைசெய்தற்கும் புத்தியைக் கொடுக்கும் அன்ன
பொய்ம்மையே தவிர்த்த கள்வன் புண்ணிய சீல னானான்.

# 15. மகமது நபி (இரண்டாம் பாகம்)

மெடினு நகரத்திலும் ஒவ்வொரு கூட்டத்தாரும் ஒருவர்க் கொருவர் அடங்காத தலைமை உடையரா யிருந்தனர். பென் இகஸ்ராஜ் என்ற கூட்டத்தவரும் பென் இ ஔஸ் என்ற கூட்டத்தவரும் புதிய மதத் தலைவர்க்கு விரோதமின்றி இருந்தனர். இவ்விரு கூட்டத்தின் தலைவர்களும் மெடினு நகரத்தில் மிக்க வலிமை படைத்தவரா யிருந்தனர். பென் இ கஸ்ராஜ் கூட்டத்தலைவராகிய அப்தல்லா என்பவர் மெடினு நகரத்து அரசராகலாம் என்று எண்ணி யிருந்தார். மகமது நபி அங்கு வந்ததால் அவர் எண்ணம் நிறைவேறு தாயிற்று. யூதர் கூட்டத்தைத் தவிரப் பிறர் எல்லோரும் மகமது நபியிடம் அன்புடையவராகவே இருந்தனர்.

மெடினு நகரத்தில் முதன் முதலில் தம்மைச் சார்ந்த வர்க்குள் மதக் கொள்கையை முறைப்படுத்த வேண்டுவன செய்தார். ஒவ்வொரு நாளும் ஐந்து முறை தொழல் வேண்டும் என்று விதித்தார். மெக்கா நகரமே திவ்ய க்ஷேத்திரம் என்று தீர்மானிக்கப் பெற்றது. வருஷம் ஒரு முறை விரதம் அனுஷ்டிப்பதற்கு ரம்ஸான் மாதம் நிச்சயிக்கப் பெற்றது. 'உறங்குவதைக் காட்டிலும் தொழுகையே சிறந்தது' என்று உயர்ந்த நிலைகளிலிருந்து சொல்லும் வழக்கம் ஆரம்பிக்கப் பெற்றது. பள்ளிவாசல் கட்டி முடிந்ததும் மகமது நபி நேரில் உபந்யாஸம் செய்ய ஆரம்பித்தார். இப்படி இரண்டு வருஷ காலம் வாழ்ந்து வந்தார். கொஞ்சம் கொஞ்சமாகத் தம் இனத்தாரின் தொகையை வளர்த்துக்கொண்டே வந்தார். சிறுசிறு படைகளைச் சேர்த்து வியாபாரக் கூட்டத்தாரைத் தாக்கிப் பொருள் சேகரிக்கவும் தொடங்கினர். இக்காலத்தில் குரேஷியர் கூட்டத்தையும் பலமுறை தாக்கிப் போர் புரிந்தார். எதுவரினும் ஐந்து பகுதியாகப் பகுத்து ஒரு

பகுதியைத் தம் மேற்பார்வையில் நடைபெறும் பொதுச் செலவுக்கு வைத்துக்கொண்டு மிஞ்சி யிருப்பவற்றைப் படை வீரர்க்குக் கொடுத்தார். இதற்குமேல் அவரை மெடிஞ நகரத்தார் எவரும் எதிர்க்க முன் வரவில்லை.

கி. பி. 624-ஆம் ஆண்டில் மகமதியர்க்கும் குரேஷியர்க்கும் இடையில் ஒரு சிறுபோர் நிகழ்ந்தது. குரேஷியர் பெருங் கூட்டத்தினரா யிருந்தும் மகமதியரே வெற்றி பெற்றனர். இந்தப் போரிலிருந்து திரும்பியதும் மெடிஞ நகரத்துத் தலைமை அதிகாரத்தை மகமது நபி தாமே வகித்தார். இது முதல் அடங்காதிருந்த பலரையும் நான்கு உபாயங்களாலும் அடக்கினர். அடுத்த வருஷத்திலே குரேஷியர் மூவாயிரம் படைஞரோடு வந்து மகமது நபியின் படைஞரோடு போர் தொடுத்தனர். மகமதியர் கட்சியில் ஆயிரம் வீரர் இருந்தனர். இவருள் முந்நூறு வீரர் நல்ல சந்தர்ப்பத்தில் அப்தல்லாவால் தூண்டப்பட்டவராய் விலகிக்கொண்டனர். இப் பெரும் போரில் மகமது நபியைச சார்ந்தவர்கள் பல காரணங்களால் தோல்வியுற்றனர். இந்த சந்தர்ப்பத்தில் இனிய குணங்கள் நிரம்பிய இம்மகான் தமக்குக் கேடு சூழ்ந்த அப்தல்லாவை மறந்து மனத் தளர்ச்சியில்லாமல் மெடிஞ வந்து சேர்ந்தார். ஒரு மாதத்திற்குள் தம் நாவன்மையால் முன் போலவே பெருமை படைத்து வாழ்ந்தார்.

குரேஷியர் தலைவராகிய அபுஸோபியன் என்பவர் தாம் அடைந்த வெற்றியாற் செருக்குக் கொண்டு மகமதியரை அடியோடழிக்க முயற்சி செய்தனர். 627-ஆம் வருஷத்திற் பல கூட்டத்தாரையும் சேர்த்துப் பதிஞயிரம் வீரரோடு போர்க்கு வந்தனர். மெடிஞ நகரில் இருந்த மகமது நபி அரசனும் அகழியும் அமைத்திருந்தார். அதனல் குரேஷியர் முயற்சி பலிக்காமற் போயிற்று. பதினைந்து நாள் முற்றுகை யிட்டும் பயன்பெருமல், குரேஷியர் தலைவர் மெக்கா நோக்கித் திரும்பி

ணர். அதன் பிறகு மெடினு நகரத்தில் மகமது நபி எவரை யும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல தலைவரானர். அரபிய நாட் டைத் தமக்குள் அடக்கியாள வேண்டும் என்று கருதிய அவர் எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை.

628-ஆம் வருஷத்தில் மெக்கா நகரத்து வருஷ மஹோத்ஸவத்துக்குப் பெருங்கூட்டத்தோடு புறப்பட்டு நகர்க்குள் நுழைந்து மூன்று நாள் கோயிலைக் கைக்கொள் ளும்பொருட்டுச் சில உடன்படிக்கை செய்துகொண்டும் எண் ணிய எண்ணம் நிறைவேறவில்லை. பிற அரசர் உதவியை நாடினர். அதுவும் கிடைப்பதரிதாயிற்று. அடுத்த வருஷத் திலே மெக்கா நகரத்துப் பெருங் கோயிலுக்குள் மூன்று நாள் இருக்க அனுமதிக்கப் பெற்றார். அப்பொழுது அவர்க்கு அறுபது வயது ஆகியிருந்தது. அந்த மூன்று நாட்கள் ஆன தன் பிறகு தம் இனத்தாரோடு மெடினு வந்து சேர்ந்தார்.

மெக்கா நகரவாசிகள் தலைவர் ஆபு சோபின் என்பவர் உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டிருந்தபடி நடந்துகொள்ள வில்லை. அவரைச் சேர்ந்த சிலர் மகமது நபியைச் சார்ந்த ஒரு சிறு கூட்டத்தாரைத் தாக்கினர். இதையே ஒரு காரண மாகக் கொண்டு மகமது நபி தமது பெருத்த சைனியத்தோடு மெக்கா நகரைத் தாக்கினர். அப்பொழுது எதிர்த்து நிற்க வல்லவர் யாரும் முன்வரவில்லை. ஆபுஸோபின் தாமே நேரில் வந்து நபி நாயகத்தைப் பணிந்து மகமதியரானர். அதனல் மெக்கா நகரமும் அந்நகரத் தலைமையும் மகமது நபியின் வசமாயிற்று.

மறுநாட் காலையில் மகமது நபி எட்டு வருஷங்களின் முன்பு உயிர்காக்கும் பொருட்டு மறைந்தோட நேர்ந்த பெரு நகரில் தலைவராக வெற்றியோடு உள்நுழைந்தார். எதிர்த்தவர் பெரும்பாலோர் குறைபொறுத்து மகமதிய மதத்திற் சேர்த் துக் கொள்ளப்பட்டனர். பெருங் குற்றவாளியாகிய சிலர்

தண்டிக்கப்பட்டனர். மெக்கா நகரவாசிகள் அனைவரும் மகமதியராயினர். உடனே மகமது நபி மெக்கா நகரத்துப் பழம் பெருங் கோயிலுக்குச் சென்றார். அவர் உள் நுழையு முன் தேவதைகளின் படங்களெல்லாம் மறைந்தன. ஓஸா, லட் என்ற இரு பெருஞ் சிலைகளின் முன்னின்று அவற்றைத் தகர்த் தெறியும்படி ஆணையிட்டார். அன்று முதலாக அரபிய நாட்டில் அநேக ஆயிர வருஷங்களாக வணங்கப்பெற்று வந்த பழம் பெருந் தெய்வங்கள் எல்லாம் மறையலாயின.

உண்மையான ஒரு கடவுள் உருவமற்றவர் எங்குமிருப்பவர் என்ற உணர்ச்சி நாடெங்கும் பரவியது. அதுமுதல் அரபிய நாடெங்கும் தமக்குஅடங்காதிருந்த சிறு நாடுகளையும்கூட்டங்களையும் அடக்கி யொரு வழிபடுத்த முயன்றனர். மகமதிய மதத்தை ஏற்றுக்கொள்ளாத அரபியர் மெக்காவுக்குள்வரலாகாது என்று ஆணை பிறப்பித்தனர். இஸ்லாம்மதத்தின் முக்கிய நோக்கம் விக்கிரகாராதனை ஒழிப்பது என்று எங்கும் விளம்பரமாயிற்று. கி. பி. 630-ஆம் வருஷத்தில் மகமதியர் அனைவர்க்கும் தீர்க்கதரிசியாகவும் முதற் குருவாகவும் தோன்றிய மகமது நபி, அரபிய நாடு முழுவதையும் தம் ஆட்சிக் கடங்கச் செய்துவிட்டார். அவ்வருஷத்திலே மெக்கா நகரத்திலே வழக்கம்போற் கூடிய அரபியர்களுக்குத் தமது அருங்கருத்துக்களை நன்கு விளக்கினர். அரபியர் அனைவரும் முஸ்லீம்களானதோடு சகோதரராக வாழவேண்டும் என்று தெரிவித்தார். அறுபத்துமூன்றும் வயதில் ஸிரியா பாலைவனத்தைக் கைப் பற்றத் தம் படைவீரரை அனுப்பினர். பிறகு ஒரு நாள் மெடினா நகரத்தில் தாம் கட்டுவித்த பள்ளிவாசலில் மதோபதேசம் செய்து கொண்டிருக்கையில் தமக்கு அந்திய காலம் நெருங்கியதை யறிந்து மனமுருகிக் கடவுளைத் தொழுது தம் அன்பிற்குரிய அயேஷா என்ற மனைவியார் கையிற் சாய்ந்து இறந்தார்.

உலகத்தில் உள்ள ஜனத்தொகையில் ஆறில் ஒரு பகுதி இந்நாளில் மகமதியராயிருப்பதாய் அறிகிறோம். மத விசுவாசத்தில் மகமதியரை வெல்பவர் எவரும் இல்லை என்பது உலகம் அறிந்த உண்மை. சுருக்கமாகச் சொல்லப் புகுந்தால் மகமதிய மதம் ஒரே கடவுள் உண்டு என்று நம்பும் கொள்கையாம். அக்கடவுள் உருவ மற்றவர் என்பர். சகோதரவுணர்ச்சி நன்னெறி வாழ்வு உரிய காலங்களில் கடவுளைத் தொழுதல் முதலியன அம்மதத்தின் நோக்கங்களாம். மெய் பேசுவது மகமதிய மதத்தில் மிகவும் சிறப்பாகக் கருதப்படும் தருமமாம்.

மகமது நபி என்ற மகான் இல்லறத்திலே வாழ்ந்து தமது தூய வொழுக்கத்தாலும் உண்மையான அந்தரங்க பக்தியாலும் தெய்வத் திருவருளைப் பெற்றவர் என்பது அவர் சரித்திரத்தால் நாம் அறியும் விஷயங்களாம். பிள்ளைகளே, நம் தேசமாகிய இந்தியாவில் அநேக மகான்கள் முற்காலத்தில் அவதரித்தனர். பிற்காலத்திலும் தோன்றினர். ஹிந்துக்கள் முஸ்லீம்கள் கிறிஸ்தவர்கள் சீக்கியர்கள் பார்ஸிகள் என்ற பல வகுப்பினராய் நாம் இந்நாட்டில் வாழ்கின்றோம். கடவுள் ஒருவரே என்ற விஷயத்தில் நாம் எல்லோரும் ஒரே கருத்துடையவர்களே. நல்லொழுக்கம் நன்னடத்தை மனிதர் இனத்தார்க்கு வேண்டும் என்பதில் நமக்குள் அபிப்பிராய பேதம் இல்லை.

தேவாலயங்கள் எந்த வுருவத்தோடு அமைக்கப்பட்டாலும் அங்கிருக்கும் தெய்வம் ஒன்றே. மனிதர் எந்த ஆசாரத்தைக் கைக்கொண்டாலும் எந்த வேஷங்களை அணிந்தாலும் அவர்கள் உள்ளத்தில் நிறைந்துள்ள பொருள் ஒன்றே. நல்லவர் இன்ன குடியிலேதான் பிறப்பார் என்பது இல்லை. மஹான்கள் இன்ன மதத்திலேதான் அவதரிப்பார்என்பதும் இல்லை. சாமானியராகிய நம்மைக் காட்டிலும் சிறந்த குண

மும் நலமும் உடையோர் எவரேயாயினும் எக்காலத்தில் எந் நாட்டில் எம்மதத்திற் பிறந்தவராயினும் நம்மால் வணங்கி வாழ்த்தத் தக்கவரேயாவர். அந்தரங்கமான தெய்வ பக்தியும் நல்ல நெறியில் நடக்கும் இச்சையும் உள்ளவர்களுக்கு என் மதம் பெரியது உன் மதம் சிறியது என்ற எண்ணம் தோன்ருது. எல்லா வழிகளாலும் அறியப்படுகின்ற கடவுள் எந்த உருவமுடையவனுயினும் உருவமில்லாதவனுயினும் உலகமெங்கும் பரவியிருக்கும் பல மதத்தினர்களுக்கும் உண்மையான சகோதர பாவத்தையும் ஒற்றுமை யுணர்ச்சியையும் வளர்த்து அருள் புரிவானுக.

---

## 16. பிறரிடம் பேசும் வழி

மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையில் உள்ள முக்கிய வித்தியாசங்கள் மிகச் சில; மனிதர் பகுத்தறிவு என்ற சிறந்த செல்வம் படைத்தவர்; மிருகங்களுக்கு அவ்வறிவு இல்லே. மனிதர் தம் மனக்கருத்தை வெளியிடப் பல்லாயிரக் கணக்கான சொற்களே உண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர். மிருகங்கள் தம் இனத்துள் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ளும். ஆயினும் அவற்றின் பாஷை மனிதர் பேச்சுப் போலச் சீர்திருத்தம் பெறவில்லே. மனிதர்க்குள்ளும் ஒரு நாட்டவர் மற்ருெரு நாட்டவரோடு பேசுதற்கு அவர் பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டி யிருப்பதுபோல மிருகங்களுக் குள்ளே ஒரு இனம் மற்ருே ரினத்தோடு பேசவேண்டு மாயின் அவ்வவற்றுக்குரிய சிறப்பான விதிகளே அறிந்துகொள்ள வேண்டியிருக்கும். இவ்வாறு ஒருவர்க்கொருவர் பேசுவதில் மனிதரே நல்ல பழக்கம் பெற்று மிகுந்த சொற்கூட்டத்தை உடையவராயும் இருப்பதால் அவர்கள் ஒருவர்க்கொருவர் பேசும் போது அனுசரித்தற்குரிய விதிகள் பல உண்டு. அந்த விதி

களை நன்கு பயின்று சந்தர்ப்பத்திற் கேற்றபடி பிரயோகப் படுத்த அறியாதவர்கள் உலகத்திலே பலவித அவமரியாதை களை அடையக் காண்கிறோம். ஆகையால் நாம் பிறரிடம் பேசும்போது கவனிக்க வேண்டிய சில முக்கியமான விதிகள் இங்கே கூறுவோம்.

நம்மிடம் அடிக்கடி பேசுபவர்களிற் சிலர் பெரியவர்; பலர் நமக்குச் சமமானவர்; வேறு சிலர் நம்மினும் கீழான நிலையிலிருப்பவா. இப்படி மூன்று வகுப்பா யுள்ளவர்க ளிடம் வெவ்வேறு விதமாய்ப் பேசவேண்டும். பெரியோ ரிடம் பேசும்போது அடக்கம், பணிவு, மரியாதை முதலிய குணங்கள் வெளிப்படத் தோன்றும்படி பேசவேண்டும். ஒத்த நிலைமையில் உள்ளவரிடம் அன்பு சிநேக ரூபமாய் வெளிப்படப் பேசவேண்டும். கீழானவர்களிடம் கடுகடுப் பும் அலக்ஷ்யமும் இன்றி ஆதரவோடு இன்சொற்களாய்ப் பேசவேண்டும். நாம் எவரிடம் பேசினும் இனிய சொல்லே பேசிப் பழகுவோமாயின் நமக்குப் பகைவரா யிருப்பவரும் அன்பராக இடம் உண்டாகும்.

ஒருவரோ டொருவர் பேசுகையில் அன்னியர்க்குப் பேச இடம் கொடாமல் தாமே பேசுவது சிலருடைய வழக்கம். தம்மோடு பேசுவோர் சொல்ல வேண்டிய மறு மொழிகளை எதிர் பாராமலே பேசுகின்ற இவர்கள் பெரும்பாலும் நஷ்ட மும் அவமதிப்புமே அடைவார்கள். தாமே கண்ணுற் காணாத வொன்றைப் பிறர் சொல்லை நம்பிப் பலர் முன் கூறி அவமானம் அடைபவரும் சிலர் உளர். எந்த விஷயத்தைப் பற்றி யாரிடம் பேசினாலும் அனாவசியமாக வார்த்தைகளை வளர்க்கக் கூடாது. வீணாக வார்த்தைகளைக் கொட்டி அளப் பது ஒருவன் அதிகப் பிரசங்கி யென்னும் பட்டம் பெறக் காரணமாயிருக்கும். இந்த வழக்கம் கெட்ட பழக்கத்தால் விளையும் பயனேயாகும். இந்தப் பழக்கத்தைத் தடுக்கவே

பெரியோர்கள், 'மிகைபடச் சொல்லேல்' என்ற நீதியைக் கூறுவார்கள். என்ன அவசர விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் படபடப்பு பரபரப்பு முதலிய அவஸ்தைகள் இல்லாமல், "பதறாத காரியம் சிதறாது" என்ற பெரியோர் வாக்கை அனுசரித்து அடக்கமாக வார்த்தைகளை நிறுத்திப் பேச வேண்டும்.

நாம் ஒருவரிடம் பேச வேண்டிய அவசர மிருந்தாலும் அவரிடம் வேறொருவர் பேசிக்கொண்டிருந்தால் இடையே புகுந்து பேசுவது மிகவும் தவறாகும். முன்னே பேசுவோர் பேசி முடிக்கும் வரை பொறுத்திருப்பதே தகுதியாகும். நாம் எவ்விஷயத்தைப் பேசும்போதும் நன்றாய் ஆய்ந்தோய்ந்து பார்த்தே பேசவேண்டும். நம்முடைய பேச்சால் ஆகவேண்டிய காரியம் பெரிதா யிருக்குமானால் ஆராய்ந்து பேசுவதாற் பெரும்பாலும் நன்மை விளையும். அற்ப விஷயத்திலும் இந்தப் பழக்கம் இருப்பது பெருத்த நன்மையை விளைக்கும் என்பதில் ஐயமில்லை. பேசும்போது நம் கருத்து மற்றவர்க்கு நன்றாய் விளங்கத்தக்க வார்த்தைகளை அமைத்துப் பேசவேண்டும். பிறர்க்கு மனவருத்தம் உண்டாக்கத் தக்க விஷயங்களைப் பேச வேண்டிய அவசியம் நேரிட்டாலும் இனிய சொற்களால் சாவதானமாகப் பேசி அவர் அன்பைப் பெறலாம். எப்பொழுதும் எவரோடும் அதிகக் கூச்சலிட்டுப் பேசக்கூடாது.

முன் யோசனை யில்லாத காரணத்தால் 'நாம் பேச வேண்டிய விஷயம் என்ன? யாரிடம் பேசப்போகிறோம்? எந்த சந்தர்ப்பத்திற் பேசப் போகிறோம்? எவ்விதம் பேசுதல் நன்மையாகும்? நாம் நினைத்த விஷயத்தை நிறைவேற்ற என்ன சொற்களாற் பேச வேண்டும்?' என்பன முதலிய கேள்விகளுக்கு விடை யறியாமலே பேசத் தொடங்கி எடுத்த தொன்றும் முடித்த தொன்றுமாய்ப் பேசி இடர்ப்பட்டு

மயங்குவோர் பலர் உலகில் உளர். இரண்டொரு மனிதரிடம் தனிப்படப் பேச நேரிடும் காலங்களிலேயே இவ்விதம் மயங்கும் இவர்கள் பெரிய கூட்டங்களிலே பேச நேரிட்டால் என்ன பாடு படுவர். நியாய சபைகளிலே மிக்க சாமர்த்திய சாலியாகிய நியாயவாதி யொருவர் குறுக்குக் கேள்விகள் கேட்கும்போது முன்னுக்குப் பின் முரணாக உளறிவிட்டுத் தங்கள் உண்மையான வழக்குத் தோற்றுப் போகக் கண்டவர் எத்துணையர் உளர்?

வாய் திறக்கத் தெரிந்தவ னெல்லாம் நல்ல பேச்சுக்காரன் என்று பேர் வாங்க முடியாது. 'அறையிலாடி அம்பலத்திலாடு' என்ற பழமொழிக் கேற்றபடி நெருங்கிப் பழகும் சுற்றத்தாரிடம் முதலில் நன்கு பேசிப் பழகிப் பிறகு பிறரிடம் பேசும் வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும். மேலே சொல்லிய விதிகளை அனுசரித்துப் பேசிப் பழகுவோர் தனிப்படப் பேசும்போதும் கூட்டங்களிற் பேசும்போதும் நல்ல பேச்சாளிகள் என்று பெயரும் புகழும் பெறுவர். பேச்சாளியாய் இருப்பது தனக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்க ஒரு வழியாம். தன் காரியங்களை நன்கு நிறைவேற்றிக் கொள்வதோடு பேச்சு முறையறியாத பிறர்க்காகத் தக்கபடி பேசி வேண்டிய காரியங்களை முடித்து வைக்கக் கூடிய நிலைமையையும் பெறச் செய்வது, காலம் இடம் அளவு அறிந்து பேசும் சொல்லே என்பதை நாம் நன்றாய் அறியவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் இராஜாங்கப் பொறுப்பை யேற்றுக்கொள்ள முயன்றுவரும் இந்நாளில் ஒவ்வொரு சபைக்கும் நல்ல பேச்சாளிகள் வேண்டுவது அவசியமாய் இருக்குமன்றோ? எதிர்காலத்தில் மிக்க நன்மையை அடையும் நிலையில் உள்ள இந்தியராகிய நாம் பேச்சு என்ற சக்தியை நன்கு பயன்படுத்த அறிய வேண்டும்.

---

## 17. மூன்று விதிகள்

மாளவ தேசத்தில் முற்காலத்தில் ஒரு பிரபு இருந்தார். அவருக்கு மூன்று மக்கள் இருந்தனர். அம்மூவரும் ஒரே விதமான பயிற்சி செய்விக்கப் பெற்றும் மூன்று வேறு வித குணமுடையவராய் இருந்தனர். தனசேகரன் என்று பெயர்பூண்ட அந்தப் பிரபு தம் பெயர்க் கேற்பப் பெருஞ் செல்வமுள்ளவர். நிலமும் பொருளும் வியாபார வருவாயும் மிகுதியாய் அடைந்திருந்ததால் அவர் தம் மக்களிடம் அவற்றைப் போற்றி வளர்க்கும் சக்தி உண்டா என்று அறிய விரும்பினர். அவர் தம் உடைமைகளைப் பிரித்துக் கொடுக்கு முன்பு மூவர் இயல்பையும் ஆராய விரும்பி ஒவ்வொரு குமாரன் கையிலும் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து மூன்று வருஷ காலம் தம் கண்ணிற் படாத இடங்களில் வாழ்ந்து வரவேண்டுமென்றும் பிறகு தாம் நேரில் வந்து பார்த்து முடிவு கூறுவதாகவும் தெரிவித்தார். தகப்பனர் சொன்ன சொற்படி மக்கள் மூவரும் பிரிந்து சென்றனர். தனசேகரர் தகுந்த அதிகாரிகளை நியமித்துத் தமது விவசாயத்தையும் வியாபாரத்தையும் கவனிக்க ஏற்பாடு செய்து அவசியம் நேர்ந்தபோது தாம் மேற்பார்வையிட்டுக் கொண்டு தமது மாளிகையில் அநேக அரிய புத்தகங்களைத் தருவித்து வைத்துச் சாஸ்திர விசாரம் செய்து வந்தார்.

பூபதி என்ற பெயர் பூண்ட முதன் மகன் தன் பத்தாயிர ரூபாய்களை எடுத்துக் கொண்டு அயல் நாட்டிலே நல்ல நீர்ப்பாய்ச்சல் உள்ளதோர் இடத்தில் சில நன்செய் நிலங்களையும் புன்செய்க் காடுகளையும் தோட்டங்களையும் குத்தகை பேசித் தகுந்த கூலியாட்களை நியமித்து இரவு பகல் இடைவிடாமற் கூடவே இருந்து உழைத்து அந்த நிலங்கள் முன் கொடுத்த பலனைக் காட்டிலும் மூன்று பங்கு அதிகமான

பலன் தரும்படி செய்து வாழ்ந்தான். அவன் தினந்தோறும் நிலங்களைச் சுற்றிப் பார்க்கும்போது ஒவ்வொரு மண்ணின் தன்மையையும் நன்றாய் ஆராய்ந்து இன்னின்ன பயிர்க்கு இன்னின்ன உரம் போட்டால் நன்மையுண்டு என்பதை அறிந்து வந்தான். ஒழிந்த நேரங்களில் கலப்பை பரம்புச் சட்டம் முதலியன செய்யவும் பருத்தியால் கைத்தறியில் நூல் நூற்கவும் பழகி வந்தான். கொஞ்ச காலத்தில் தன் ஆட்களையும் மதுபானம் முதலிய தீய பழக்கங்கள் இல்லாமல் வாழச் செய்து தான் பழகிய தச்சு, நூல் நூற்றல் முதலிய தொழில்களை அவர்கட்கும் பயிற்றுவித்தான். தன் நிலங்களுக்கு அருகிலிருந்த கிராமத்தில் வாழ்ந்த ஒரு சேணியனை வருவித்து அவன் உதவியால் நெய்தற் றொழிலையும் ஓய்விருந்த நேரங்களிற் பழகிக் கொண்டான். இவ்வாறு இவன் ஒரு நிமிஷமும் வீண்பொழுது போக்காமல் விவசாயத்திலும் அதற்கு அங்கமான தொழில்களிலும் நல்ல பயிற்சி பெற்றுத் தனது முதற் பணத்தை விருத்தி செய்து குத்தகைக்குப் பிடித்த நிலங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமையடைந்தான். பூபதி என்ற தன் பெயர்க்குப் பொருந்த இவன் நிலத்துக்கும் பயிர்த் தொழிற்கும் தலைவனாகித் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் கவலையற்று வாழத்தக்க நிலைமையில் வேண்டும் முயற்சி செய்து வரும்போது இவனது சகோதரர் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைப் பார்ப்போம்.

தனபதி என்ற பெயருடைய இரண்டாம் குமாரன் தனக்குத் தகப்பனார் கொடுத்த பத்தாயிரம் ரூபாயை முதலாய் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்தான். பலரும் அவன் நாணயத்தை அறிந்து அவனிடம் பெருத்த வியாபாரங்கள் செய்யவும் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யவும் ஆரம்பித்தனர். வியாபாரம் நன்கு விருத்தியாயிற்று. வியாபார தந்திரத்தை நன்றாய்க் கற்றறிந்து அவசியப் பொருள்

கள் சிலவற்றை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வும் நிலக்கடலை பருத்தி முதலியவற்றை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் தகுந்த ஏற்பாடுகளோடு கூடிய ஒரு வியாபார ஸ்தலத்தை அமைத்தான். எழுத்தாளரும் பலர் வேண்டியிருந்தது. அவர் அனைவரும் செய்யும் வேலைகளை நன்கு மேற்பார்வை செய்தான். கூலி வேலை செய்வோர் பலர்க்கு அவர் வேலைக்குத் தக்க கூலி கொடுத்து பொய் புரட்டுத் திருட்டு முதலிய அற்பத் தொழில்கள் செய்யாமல் நன்கு வாழும்படி செய்தான். அவன் வேலைக்காரர்கள் தங்கள் தலைவன் தன்மைக்கேற்பத் தாங்களும் நல்ல உழைப் பாளிகளாய் இருக்கவேண்டுமென்று முயன்றார்கள். தொழிலா ளர்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் இராக்காலங்களிற் சிறிது நேரம் பொது அறிவுக்குரிய விஷயங்களைப் போதிக் கும்படி சில உபாத்தியாயர்களை நியமித்தான். இவனும் மூன்று வருஷங்களுக்குள்ளாக வியாபாரத்தாற் பெருத்த நன்மை யடைந்து நாணயஸ்தருட் சிறந்தவன் என்ற புகழும் தன வந்தருள் ஒருவன் என்ற பெயரும் பெற்றான்.

வித்யாநிதி என்ற பெயர் பூண்ட மூன்றாங் குமாரன் கல்வியில் மிகுந்த விருப்பமுடையவனாதலால் தகப்பனார் கொடுத்த பதினாயிர ரூபாயை எடுத்துக்கொண்டு நம் தேசம் முழுதும் பிரயாணம் செய்து அநேக வித்துவான்களைச் சந் தித்து அவர்களிடம் கற்கத் தக்கவற்றைக் கற்று, அநுபவத் தாலும் பிரயாணத்தாலும் தெளிவு பெற்று பத்துப் பாஷை களில் நல்ல பாண்டித்தியம் உடையவன் என்று பலராலும் பாராட்டப்படும் நிலைமை அடைந்தான்.

அதனால் அவனைப் பல நகரங்களிலும் பிரசங்கம் செய்ய அழைத்தனர். அங்கங்கே பலரும் செய்த சிறப்புக்களை ஏற் றுக்கொண்டு அயல் நாடுகளுக்கும் சென்று தான் அறிந்த விஷ யங்களைப் பலர்க்கும் உரைத்து அயல் நாட்டாராகிய பலரும்

தன்னை விரும்பியழைத்து உபசரிக்கத் தகுந்த நிலைமையை அடைந்தான். வித்யாநிதி ஒரு வருஷகாலம் நம் நாட்டிற் பிரயாணம் செய்து பிறகு இரண்டு வருஷம் அயல் நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து உலகமெல்லாம் கொண்டாடத் தக்க ஒரு பிரபல வித்துவானாய்த் திகழ்ந்தான். அவன் புகழ் அவன் பிறந்தவூர்க்கும் எட்டியது. தகப்பனார் குறித்த கால எல்லை முடிவதாய் அறிந்ததும் தன் நாட்டுக்குத் திரும்பினான். அயல் நாடுகளிற் பெற்ற சன்மானங்களும் அறிஞர் இயற்றிய புத்தகங்களும் பிற அவசியப் பொருள்களும் உடன் கொண்டு அவன் தன்னூர் நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் கையிற் பணமாக அதிகமில்லையாயினும் தகப்பனார் கொடுத்த பதினாயிர ரூபாய்களையும் அவன் செலவழித்துத் திரும்பினானாயினும் அவனது தமையன்மார் இருவரும் அவன் கீர்த்தியைப் பற்றிக் கேள்வியுற்று அவனை எதிர்கொண்டு வரவேற்றனர்.

இவ்வாறு நடக்கும் என்பதை எதிர்பார்த்திருந்த தனசேகரர் குறிப்பிட்ட காலத்தில் மூன்று மக்களையும் தம் மாளிகைக்கு வரவழைத்தார். அவர் தம் சிநேகிதர் பலரையும் சுற்றத்தாரையும் அழைத்து ஒரு பெரிய விருந்து நடத்தினார். விருந்தின் பிறகு பின்வருமாறு பேசினார். "நண்பர்களே! சுற்றத்தார்களே, இந்த மூன்று வருஷங்களாக என் மைந்தர் மூவரும் என்னை விட்டுப் பிரிந்து சென்று தம் தம் சக்திக்கேற்பப் பொருளைத் தேடினார்கள் என்பது நீங்கள் அறிந்த விஷயமே. நான் பிதிரார்ஜிதமாக அடைந்த திரவியத்தை விருத்தி செய்து இந்த நிலைமையில் இருக்கிறேன் என்பது நீங்கள் அறியாததன்று. என் மக்களும் தாமாகப் பொருள் தேடும் திறமை பெற்றாலன்றிப் பிதிரார்ஜிதத்தில் ஒன்றும் பெறக்கூடாது என்பது என் மனப்பூர்வமான கருத்தாகும். 'தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை'

என்பது ஒரு நல்ல நீதி வாக்கியம். 'தேடா தழிக்கிற் பாடாய் முடியும்' என்பதை இவர்கள் அனுபவத்தால் அறியவேண்டு மென்பதே என் முழு நோக்கமாயிருந்தது. கடவுள் அருளால் என் எண்ணமும் நிறைவேறியது. அன்பர்களே, உங்கள் முன்னிலையில் இப்பொழுது இவர்களுக்கு என் சொத்து முழுவதையும் பிரித்துக் கொடுப்பதாய்த் தீர்மானித்திருக்கிறேன்.

மூத்த குமாரனாகிய பூபதி விவசாயத்திலே மிகுந்த வூக்கமுள்ளவனாய்த் தெரிவதால், அவனுக்கு என் நிலங்கள் முழுவதையும் கொடுக்கிறேன். எனது இரண்டாம் குமாரன் தனபதி வியாபார தந்திரம் அறிந்தவனாய்த் தெரிய வருவதால் அவனிடம் என் கப்பல் வியாபாரத்தையும் அதையொட்டிய சகல திரவியங்களையும் தருகிறேன். மூன்றாங் குமாரன் வித்யாநிதி தன் பெயர்க் கேற்பக் கல்வியிற் சிறந்து விளங்குவதால் அவனுக்கு இந்த மாளிகையையும் என் கைவசம் இருப்பதும் நிதியில் இருப்பதுமாகிய பணம் முழுவதையும் தந்து அதோடு இந்த மாளிகையில் உள்ள பெரிய புத்தக சாலையையும் கொடுக்கிறேன். இப்படி நான் கொடுத்திருப்பதில் பணத்தின் கணக்கைப் பார்த்தால் சிறிது ஏற்றத் தாழ்வு இருக்கலாம். ஆயினும் அவரவர் தகுதிக் கேற்கவே நான் கொடுத்திருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இனி இம்மூவர்க்கும் மூன்று விதிகள் கூறப்போகிறேன். பூபதிக்கு நான் கூறுவது, "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்பது; தனபதிக்கு, "திரைகட லோடியும் திரவியந் தேடு" என்பது; வித்யாநிதிக்கு "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்பதாம்.

இந்த மூன்று விதிகளும் அவரவர் நிலைமைக்கும் தன்மைக்கும் ஏற்ப அமைந்தனவாம். மூவரும் சொத்தைப் பிரித்துக் கொண்டாலும் ஒற்றுமையாய் வாழக்கூடாது

என்பதில்லை. வித்யாநிதிக்கு நான் தந்திருக்கும் செல்வம் மூத்தவன் பங்கிற் பாதியுமில்லை. தனபதி பங்கிற் காற்பங்கே யாகும். கல்வியில் மனம் செலுத்துவோன் செல்வத்தைப் பெரிதாய் மதிக்கலாகாது என்பது என் கருத்தாதலால் இவ் வாறு செய்தேன்."

தனசேகரர் பேசியதைக் கேட்ட விருந்தினர் அனைவரும் "அதுவே தகும்! அதுவே முறை!" என்றனர். பிறகு தனசேகரர் நிம்மதியாய்க் காலங் கழித்து வந்தார். மக்களும் தம் தம் துறைகளிற் சிறந்தோங்கி நாடெங்கும் புகழ்பெறத் தக்க நிலைமை யடைந்தனர்.

---

## 18. தமிழ்ச் சங்கம்

தென்னிந்தியாவில் நாம் வாழும் பகுதி தமிழ் நாடு என்று சொல்லப்படும். தமிழ் நாட்டில் வழங்கும் மொழி தமிழ் மொழியாகும். தமிழ் மொழி பேசும் ஜனங்கள் இக் காலத்தில் உலகம் முழுவதிலும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக் கெல்லாம் பிறப்பிடமாகிய தாய் நாடு நம் தமிழ் நாடே. இந்நாட்டிலே பூர்வ காலத்திற் பாண்டியர் சோழர் சேரர் என்று பெயர் பெற்ற மூவகையான அரச வமிசத்தார் அரசாண்டு வந்தனர். அவ்வரசர் மூவரும் தமக்குட் பல போர்கள் புரிந்துகொண்டன ராயினும் தமிழ் மொழியை நன்கு போற்றி வளர்ப்பதில் ஒற்றுமையுடையராகவே இருந்தனர். தெலுங்கர் வகுப்பினராகிய விஜய நகர மன்னர் ஆட்சிக் கடங்கி நாயக்க அரசர் ஆண்டுவந்த காலத்திலும் நம் நாட்டிற் பெரிய தமிழ்க் கலாசாலைகள் அமைந்திருந்தன.

தமிழ் மொழி வளர்ச்சியின் பொருட்டுத் தமிழ் நாட்டிலே தோன்றியிருந்த தமிழ்ச் சங்கங்களைப் பற்றிப் பழமையான வரலாறுகள் சில உண்டு. அவ்வரலாறுகள் அனைத்

தும் உண்மையே என்று நம்புவோர் சிலரும் நம்பி யேற்றுக் கொள்ளாதவர் பலரும் இந்நாளில் இருக்கின்றனர். பல்லாயிர வருடங்களின் முன்பு பாண்டிய நாட்டிலே கூடிய பல தமிழ்ப் புலவர்களும் அக்காலத்துப் பாண்டிய மன்னனை ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தி நடத்த வேண்டினர். அவன் அவர்கள் வேண்டுகோட் கிணங்கி இயல் இசை நாடகம் என்ற மூன்று பகுதியாகிய தமிழ்ப் பயிற்சியிலும் சிறந்த பல புலவர்களை ஒன்று சேர்த்து முதற் சங்கம் அமைத்தான். பல புலவர்கள் அச்சங்கத்தில் தம் நூல்களை அரங்கேற்றினார்கள். மன்னர் சிலரும் பாடி அரங்கேற்றினர். இந்த வழக்கம் ஏற்பட்ட பிறகு இத்தமிழ்ச் சங்கப் புலவர்களின் ஆதரவு பெருத நூல்கள் நம் நாட்டிற்குள் தலைகாட்ட வழியில்லாது போயிற்று. இவ்வாறு உலக உபகாரமான காரியங்களைச் செய்து வந்த சங்கம் பல நூற்றாண்டுகள் நன்கு வளர்ந்து பிறகு கவனிப்போர் இல்லாமல் மறைந்தது. ஆனாற் புலவர்கள் தம் கடமையை மறவாது மேற்கொண்டு செய்து வந்தனர்.

திரும்பவும் சில நூற்றாண்டுகளின் பின்பு அக்காலத்து இருந்த தமிழரசன் உதவியைக் கொண்டு மற்றொரு சங்கம் தோன்றியது. இது இரண்டாம் சங்கம் என்றும் இடைச் சங்கம் என்றும் சொல்லப் பெற்றது. இச்சங்கத்திலும் அநேக அரசர்களும் புலவர்களும் அங்கத்தினராயிருந்து தாமே அநேக புத்தகங்களைச் செய்தும் பிறர் செய்துகொண்டு வந்தவைகளை அங்கீகரித்தும் தமிழ்ப் பயிற்சியை விருத்தி செய்தனர். இந்தச் சங்கமும் பல நூற்றாண்டுகள் இடைவிடாமல் நடந்து வந்தது. ஆனால் தென் சமுத்திரம் பெருக்கெடுத்து ஓடிவந்து தேசத்தைப் பாழ்படுத்தியதால் இச்சங்கமும் மறைந்தது. இச்சங்கத்துப் புலவரிற் பலரும் இந்த வெள்ளத்துக்குத் தப்பிப் பிழைத்து வடக்கு நோக்கி வந்த

னர். இடைச் சங்கத்தில் இயற்றப்பட்ட நூல்களில் இக் காலம் வரையில் வழங்குவது தொல்காப்பியம் என்ற இலக் கண நூலாகும். மற்ற, அருங்கருத்துக்கள் அமைந்த இலக் கிய இலக்கண நூல்கள் எல்லாம் முழு வுருவத்தோடு அகப் படாமல் மறைந்தன.

வடக்கு நோக்கி வந்தவரிற் சிலர் இக்காலத்து மதுரை என்று வழங்கும் பாண்டிய நாட்டுத் தலைநகரின் ஒரு பகுதி யில் தங்கினார்கள். பாண்டிய ராஜ்யம் முன் போலவே தலை யெடுத்ததும் புலவர்கள் அரசனை அடைந்து மூன்றும் சங்க மாகிய கடைச்சங்கத்தை நிறுவ வேண்டினர். அரசன் அவ் வாறே இயன்றவளவு ஆதரவளித்தான். அச்சங்கம் நாற்பத் தொன்பது புலவர்களைக் கொண்டிருந்தது. முன்னைய சங்கங் களில் நடந்ததுபோலவே இச்சங்கத்திலும் புலவர் செய்யுட் கள் அரங்கேற்றப்பெற்றன. இச்சங்கத்துச் செய்யுட்களாக இந்நாள் வரை வழங்குபவை, எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகை நூல்களே. இப்புத்தங்களைப் படிப்பதால் நம் தமிழ் நாட்டின் முற்கால நாகரிகத்தையும் சரித்திரத்தின் சிற்சில பகுதிகளையும் அறிய லாம்.

இவ்வாறு இரண்டாயிர வருஷங்களின் முன்பு பல நூற்றாண்டுகளாகத் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு நம்தேசத் திலே மேற்சொல்லிய மூன்று சங்கங்களும இருந்ததை அறிந்த சில அறிஞர்களும் பிரபுக்களும் அவைபோலவே நான்காஞ் சங்கம் ஒன்று அமைக்க வேண்டுமென்று முப் பத்திரண்டு வருஷங்களின் முன்பு முயன்று இயன்றவளவு நிறைவேற்றினார்கள். இந்த யோசனையைப் பயன்படச் செய் தவர் பாலவனத்தம் ஜமீன்தாராயிருந்த ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவர் என்ற தமிழ் வள்ளலாவர். இவர் இராமநாதபுரம் ராஜாவாயிருந்த பாஸ்கர சேதுபதி, புதுக்

கோட்டை மஹாராஜா முதலிய பிரபுக்களின் உதவியால் மதுரை நகரத்தில் கி. பி. 1901-ஆம் வரு மேமீ 24உ நான்காம் காம் சங்கம் ஸ்தாபித்தார். இச்சங்கத்தில் இக்காலத்துப் பெரிய தமிழ் வித்வான்கள் பலர் அங்கத்தினரா யிருக்கின்றனர். இவ்வங்கத்தினருள், மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர், இராமநாதபுரம் ஸமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார், செந்தமிழ்ப் பத்திராசிரியரும் தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியரும் ஆகிய திரு. நாராயணையங்கார், சென்னை அகராதிப் பதிப்பாளர் சபைத் தலைமைப் பண்டிதர் மு. இராகவையங்கார் முதலியவர்கள் இக்காலத்துப் புலவருள் மிக்க மதிப்புடையராவர். இச்சங்கத்தில் ப்ரான்ஸ் தேசத்துத் தமிழ்ப் புலவராகிய ஜூலியன் வின்ஸன் என்பவரும் அங்கத்தினரா யிருக்கிறார். இச்சங்கத்தில் விசேஷ சம்பந்தம் பெறுமலே தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன செய்கின்ற பலர் இந்நாளில் நம் நாடெங்கும் பரவி யிருக்கின்றனர்.

இச்சங்கம் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஒரு தமிழ்க் கலாசாலையையும் செந்தமிழ்ப் பத்திரிகையையும் நடத்திவருகின்றது. பல பழமையான புத்தகங்களைச் சுத்தப் பதிப்பாக அச்சிட்டு வருகின்றது. சங்கக் கலாசாலையிற் பயின்றும் பரீக்ஷைகளில் தேர்ச்சி பெற்றும் அநேகர் இந்த இராஜதானி முழுவதும் உள்ள பல கலாசாலைகளிற் பண்டிதர்களாயிருக்கிறார்கள். இவர்களில் சென்னைத் தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராயிருந்த அ. கோபாலய்யர் மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை ஆசிரியரா யிருக்கும் சு. ஹரிஹரையர், திரிசிரபுரம் பிஷப் ஹீபர் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் அ. கந்தசாமி பிள்ளை முதலிய சிலர் இந்நாளில் மிக்க மதிப்புடையவரா யிருக்கின்றனர்.

# 19. நன்றி மறந்தவன்

மனிதராய்ப் பிறந்தவர் எவரும் பிறர் உதவியில்லாமல் தனித்து வாழ முடியாது. அற்பகாரிய முதற் பெரிய காரியம் வரை எல்லாம் பலருடைய ஒத்துழைப்பால் ஆக வேண்டியவையாகவே இருக்கின்றன. பலர் கூடி வாழும் உலகத்தில் ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொள்ளுதல் இயல்பே. அவ்வாறு செய்யப்பெற்ற உதவியை மறவாது தன்னால் இயன்ற கைம்மாறு செய்ய முயல்வது அறிவுடைய மனிதன் செய்கையாம். தனக்கு அவசியம் நேர்ந்தபோது ஒருவன் செய்த உதவியை மனமகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டவன் பிறகு அதனை முற்றிலும் மறந்து தனக்கு உதவி செய்தவனுக்கே தீமை செய்யத் துணிவது எவ்வளவு கொடிய பாவம்! எந்த விதமான தர்மங்களைக் கெடுத்துப் பாவம் செய்தவர்களுக்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் நன்றி மறந்தவனுக்கு இங்கும் இனி வரும் பிறப்பிலும் ஈடேறு தற்கு வழியே இல்லையென்பது நம் தேசத்துப் பெரியோர் களின் கருத்தாகும்.

இளம் பருவத்திற் பெற்றோர்களும் பிறகு நாட்டவரும் நமக்கு நன்மை புரிகின்றனர். பெற்றோர் செய்த நன்மை களுக்குக் கணக்குண்டா? அவைகளுக்குக் கைம்மாறு செய்ய இப்பிறப்பு முழுவதும் அவர்கள் பொருட்டே உழைப்பதா யிருந்தாலும் போதாது. இந்த நிலைமையை அறிந்திருந்தும் அவர்கள் செய்திருக்கும் உபகாரத்தை மறந்து அவர் களுக்கு வலிவிலே தீமை செய்பவர் உலகில் இருக்கிறார்களே. அவர்கள் மனச்சாட்சியே அவர்களைப் புண்படுத்தும் என் பது பிற்காலத்தில் அவர்கள் படும் வருத்தத்தால் அறியலாவ தாம். பெற்றோர் செய்த நன்றியை மறந்த ஒருவன் அடைந்த கதியை இங்கே ஒரு சிறு கதையின் மூலம் விளக்குவோம்.

புஷ்பபுரி என்ற நகரத்திற் குணசீலர் என்ற ஒரு பிரபு வாழ்ந்து வந்தார். அவர், எந்த வேளையில் எவர் வந்து எது கேட்டாலும் தம்மிடம் உள்ள பொருளாயின் இல்லை யென்று கூருமற் கொடுத்துதவும் குணமுடையவரா யிருந்தார். குண நலம் நிறைந்த அவர் மனைவி சாந்தை என்ற தன் பெயர்க்கிணங்க அமைதியும் அடக்கமும் உடையவளாயிருந் தாள். அப்பெண்மணி இல்லறப் பொறுப்பை யேற்றுக் கொண்டபின் இரண்டு வருஷங்களிலே ஒரு ஆண் மகவை ஈன்ருள். அச்சிறுவன் ஐந்து வயது நிரம்பப்பெறு முன்பே சாந்தை சிவபதம் அடைந்தாள். தாயிழந்த மகன் முகம் நோக்கி வருந்திய குணசீலர் பிறகு இரண்டு வருஷ காலம் குடும்பப் பொறுப்பை மேற்கொள்ளாமல் மனம் வெறுத் திருந்தார். சிறுவன் சுற்றத்தார் உதவி பெற்று வளர்ந்தான். தாய் என்ற சொல்லுக்குரிய பெண்மணியைக் காணப்பெருத தால் அவன் மனச் சோர்வடைந்தான். அதுகண்ட குண சீலர் நல்ல குலத்திலே பிறந்த குணநிதி என்ற வோர் பெண் மணியை மணம் புரிந்துகொண்டார். சில வருஷங்களில் அவளும் இரண்டு ஆண்மக்களைப் பெற்ருள். அவள் தன் மக்களிடம் எந்தவிதமான அன்பைக் காட்டி நடந்துகொண்ட னளோ அதிற் சிறிதும் குறைவின்றியே தன் தலைவரது மூத்த குமாரனிடமும் நடந்துகொண்டாள். மூத்தாள் குமாரஞ கிய சரச்சந்திரனும் இளையாள் மக்களாகிய சுசீலன், தரும குணன் என்ற இருவரும் அன்யோன்ய அன்போடு பழகு வதைக் கண்ட குணசீலர் மனவமைதியோடு வாழ்ந்தார். இப்படிப் பதினைந்து வருஷங்கள் கழிந்தன.

தம்மை அடைந்தவர்க்கெல்லாம் அளவுக்குமிஞ்சி உப காரம் செய்துவந்த குணசீலர் இறைவன் செயலால் வறிய நிலைமையை அடைந்தார். கடன்காரர் உபத்திரவத்தாற் பூர் விக சொத்துக்களைக் கொஞ்சங் கொஞ்சமாக இழந்தார்.

தாம் நெடு நாளாகச் செய்துவந்த ஒரு வியாபாரத்திலே திடீ ரென்று எதிர்பாராத நஷ்டம் நேரிட்டதால் கையிலிருந்த பொருளையெல்லாம் இழந்தார். தாம் இருந்த மாளிகையும் கடனுள் மூழ்கியது கண்டார். குடும்பத்தைக் காப்பாற்று வது எங்ஙனம் என்று எண்ணிக் கலங்கலானார். இந்நிலை மையை அறிந்த சரச்சந்திரன் குடும்பப் பொறுப்புத் தன் தலையில் விழுந்துவிடுமே என்று அஞ்சி மெல்ல நழுவினான். குடும்பத்தைவிட்டு விலகித் தனித்து வாழ்ந்து சிறியதோர் வியாபாரம்செய்து பொருள் ஈட்டிச் சௌகரியமாய் அவ்வூரி லேயே வாழ்ந்து வந்தனன். தனது தந்தையும் சிறிய தாயும் சகோதரர் இருவரும் உண்ண வுணவும் உடுக்க வுடையும் இருக்க இடமும் இன்றிப் படும்பாடுகளை அவன் அறிந்தும் அறியாதவன்போல் இருந்தான். அதிர்ஷ்ட வசத்தால் அவன் விரைவிலே பெருஞ் செல்வன் ஆயினன்.

இப்படி அவன் பிரிந்த பிறகு ஒரு நாள் இரவிலே தந் தையும் சிறிய தாயும் தம்பியரும் பிச்சை யெடுத்துக் கொண்டு வீதி வழியே வரக்கண்டான். இவர்கள் தன் வீட்டுக்கருகில் நெருங்குவது தனக்கு அவமானமாகும் என்று எண்ணி னான். முன் ஒரு காலத்திலே தன் தந்தைக்குச் சிறிது பணம் கொடுத்து அதைத் திரும்பவும் பெற வழியின்மையால் வருந் தித் தன்னிடம் வந்து போய்க்கொண்டிருந்த ஒருவனைப் பார்த்து "இந்தக் காட்சியை நான் காணாதிருக்க நீ ஒருவழி செய்யலாம்" என்றான். அவன் "நான் என்ன செய்வேன்? போன பணத்துக்குப் புதுப் பணத்தைத் துணையாக அனுப்ப எனக்கு இஷ்டமில்லை" என்றான்.

சரச்சந்திரன் "நீ அதைப்பற்றிக் கவலைப்பட வேண் டாம். இவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தெருத்தெரு வாய்ப் பிச்சையெடுத்து எனக்கு அவமானத்தை வருவிப்ப தைக் காட்டிலும் எங்காவது ஒரு இடத்தில் அடங்கிக்கிடப்

பது நல்லதல்லவா? ஆகையால் நீ உடனே அரசாங்க அதிகாரிகளிடம் தெரிவித்து உனக்கு வரவேண்டிய கடனுக்காக இவர்களைக் கடனாளிகள் சிறைச்சாலையில் அடைத்து வைக்க வேண்டுவன செய்க. பணச் செலவுக்கு நான் உதவிசெய்கிறேன்'' என்றான். அவன் அவ்வண்ணமே செய்ய இசைந்து வெளிச் சென்றான். மறுநாளே குணசீலரும் அவர் மனைவி மக்களும் கடனாளிகள் சிறையில் அடைபட்டனர். மகன் நல்ல நிலைமையில் இருப்பதால் அவன் விடுவிக்க வருவான் என்று நம்பி எதிர்பார்த்து வீணாகவே குணசீலர் மனம் புண்ணானார். அவர் மனைவி சிறைச்சாலையில் இறந்தாள். பிறகு சில நாட்கள் அவர் தம் மக்களோடு அங்கேயே இருந்தார். அரசாங்கத்தார் அவரது பழைய வரலாறுகளை விசாரித்தறிந்து அவரை விடுவித்து வெளி நாட்டுக்கனுப்பினர். சிறுவர் இருவரும் தாம் முன்னே பழகியறியாத அந்நாட்டிலே தாம் அறிந்த சிறு தொழில்களைச் செய்து தந்தையை ஆதரித்தனர். இக்காலத்தில் சரச்சந்திரன் செல்வவந்தனாய் நாட்டார் பாராட்ட வாழ்ந்தான். பெரியதோர் பிரபுவின் மகளை மணந்துகொண்டு நான்கைந்து மக்களைப்பெற்று மகிழ்வுற்று வாழ்ந்தான்.

பின்னர்ச் சில வருஷங்களில் குணசீலர் கண்ணும் காதும் இழந்து மிகவும் வறுமையால் வாடி மெலிந்து இறந்தார். சரச்சந்திரன் இச்செய்தியை அறிந்ததும் சவச்சடங்கு நடந்த இடத்துக்கு நேரிற் செல்லாமல் சிறுவர் இருவரும் மிக்க சிரமப்பட்டு எல்லாம் செய்து முடித்ததன் மேற் பிறர் பார்த்து மெச்சும்படி உத்தரகிரியைகளும் சிராத்தங்களும் செய்தான். தகப்பனார் ஞாபகார்த்தமாக நகர நடுவில் பலர்க்கும் உதவுமாறு ஒரு சிறு கிணறும் தோட்டமும் அமைத்தான். அவன் செல்வத்திற் சிறந்த சீமானாய் இருந்ததால் எவரும் அவன் செயல்களைப் பற்றி ஒன்றும் கூறத் துணியவில்லை.

இப்படிப் பிறர் புகழ வாழ்ந்த சரச்சந்திரனுக்கு ஐம்பது வயது ஆகும்போது வயிற்றில் ஒரு கொடிய நோய் உண்டா யிற்று. அதற்கு வைத்தியம் செய்ய மருந்து சாப்பிட்டதும் குஷ்ட நோயின் குறிகள் தோன்றின. கண் ஒளி மழுங்கி யது. காதும் கேட்கவில்லை. உரிய காலங்களில் உணவு உட்



சரச்சந்திரனை, மனைவி முதலாயினோர் அடித்து வெளியே வெருட்டினர்

கொள்ள இயலாமல் மிகவும் கஷ்டப்பட்டான். மனைவியும் மக்களும் தன் மனத்தில் தோன்றியபடி யெல்லாம் இகழ்ந்து பழித்து இடித்துரைக்கத் தொடங்கினர். வாய்க்கு உருசி யான பக்குவமான பதார்த்தம் வேண்டும் என்று அவன் தெரிவிக்கும்போது எவரும் அவன் சொல்லைக் காதிற் கேட் பதேயில்லை. பிறகு சில நாட்களில் அவன் கால் கை யெல் லாம் அழுகித் தொழுநோயால் வருந்தினன். இந்நிலையில்

அவன் அன்புக்குரியர் எல்லாரும் அவன் அருகில் நெருங்கி வரவும் கூசினர்.

சரச் சந்திரன் தனது இளம் பருவத்திலே தன் தந்தைக்கு நேரிட்ட வறுமைப் பிணியை மாற்றக் கருதாமல் மேன்மேலும் அதன் கொடுமையை வளர்க்கத் துணிந்த தன் செய்கையை எண்ணி யெண்ணி வருந்தினன். உரிய காலத்தில் இரங்க மனமின்றிச் செல்வச் செருக்கால் அழிந்த தனது பாவச் சுமையை இறக்க வழியறியாது மயங்கினன். அவன் மக்களும் மனைவியும் அவனை வீட்டைவிட் டகற்றவும் துணிந்தனர். மின்னலும் இடியும் மிக மழை பொழிந்து கொண்டிருந்த ஒரு நாளிரவிலே அவனை அவன் மக்கள் கண்ணுற் காணவும் சகிக்காமல் தடியாற் புடைத்து வெளியில் ஓட்டினர். அவன் வழிதுறை அறியாது தள்ளாடி நடந்து சென்று ஒரு மடத்தை நெருங்கிக்கொண் டிருந்தான். வழியிலே மழையின் கடுமையாற் சறுக்கி விழுந்து மழைநீர் வெள்ளம்போல ஓடிக்கொண்டிருந்த ஒரு வாய்க்காலில் விழுந்தான். அவன் எழுந்து நிற்க விடாமல் வெள்ளப் பெருக்கு அவனை வேகமாய் அடித்துச் சென்று ஒரு பெரும்பள்ளத்தில் அழுத்தியது. அங்கே தப்ப வழியில்லாமல் மூச்சுத் திணறி இருந்தான்.

சில நாளாக அவன் அடைந்திருக்கும் நிலைமையை அறிந்த சகோதரர் இருவரும் அன்று அவனைக் காண வெண்ணி அவன் வீட்டுக்கு வந்து அங்கு காணாமல் வெளியிலே தேடி மழைநீர்ப் பள்ளத்திலே அவன் பிணத்தைக் கண்டு அருவருப்பின்றி எடுத்து அவன் மக்களைக் கொண்டு உத்தரக்கிரியை நிறைவேற்றினர். அவன் மக்களிடம் தங்கள் வரலாற்றையெல்லாம் கூறினர். அதுகேட்ட மக்கள் தங்கள் குற்றத்தை உணர்ந்து பிறகு நல்வழியில் நடந்தனர். தந்தை செய்த நன்றியை மறந்தவன் அடைந்த கதி இதுவாகும்.

## 20. ஸ்தல சுய ஆட்சி

ஒவ்வொருவரும் தாம் தாம் சௌக்கியமாய் வாழ வேண்டும் என்று கருதித் தம் குடும்பத்திற் பலவித கட்டுப்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். குடும்பத்தில் உள்ள எல்லார்க்கும் அக்குடும்பத்திற் கமைந்த பொது வருவாயில் உரிமை யுண்டானாலும் ஒரு தலைவன் ஆணைக் கடங்கி மற்றவர் அனைவரும் நடப்பதால் அக்குடும்பத்துக்கு நன்மையும் சிறப்பும் உண்டாகின்றன. இதுபோலவே ஒரு கிராமத்துக்குப் பொதுவான நல்ல காரியங்களைச் செய்ய முன் வரும் சிலர் தம்முள் ஒரு தலைவனை நியமித்துக் கொண்டு தாம் அமைத்த விதிகளுக் கடங்கி நடக்க வேண்டியிருக்கிறது. இவ்வண்ணம் சிறிய நகரங்களிலும் பெரிய நகரங்களிலும் வாழ்ந்துவரும் சகல ஜனங்களுக்கும் பொதுவான நன்மைக் குரிய காரியங்களை நிர்வகித்து நடத்தக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் பலரும் தமக்குள்ளே ஒரு தலைவனை அழைத்துக்கொண்டு எல்லாரும் ஒருங்கிருந்து நன்கு ஆராய்ந்து தலைவன் மூலம் எல்லாம் செய்விப்பர். இவ்விதம் பொது நன்மைக்குரிய பல காரியங்களையும் செய்ய முன் வருவோர் நல்ல குடியிற் பிறந்தவர்களாயும் கல்வியும் அறிவும் உலக அனுபவமும் நல்லொழுக்கமும் சிறந்தவர்களாயும் வேண்டியவர் வேண்டாதவர் என்ற வித்தியாசம் பாராட்டாமல் எல்லாரையும் ஒப்ப நோக்கி நன்மைபுரியக் கூடியவராயும் இருத்தல் வேண்டும்.

பல நூற்றுக் கணக்கான பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டுப் பல்லாயிரக் கணக்கான மனிதர்களுக்கு உபகாரமான செயல்களைச் செய்யும் நிலைமையில் இருக்கும் இவர்கள் பாக்கியம் மிகவும் பாராட்டத்தக்கது. இவர்கள் நகர சபைகளிலே அங்கத்தினர்களா யிருக்கையில் தங்கள்

நகரத்தில் உண்மையான நாகரிகம் ஓங்கி வளரும்படி பல வகையான முயற்சிகளும் செய்வார்கள். அம்முயற்சிகள் பலிக்க மிகுந்த பணச் செலவு ஆகும். அதற்காக நகர வாசிகள் பலரும் தங்கள் தங்கள் சக்திக்கியன்றபடி விதித்த வரிகளைக் கொடுக்க வேண்டும். அவ்வரிகள் பலவகையாய் அமையும். எவ்வகையாய் அமைந்தாலும் அதனைக் கொடுப்பதால் விளையும் பயன் சகல ஜனங்களும் நன்மை பெறுவதே யாதலால் எவரும், விதித்த வரியைக் கொடுக்கக் கடமைப் பட்டவரே யாவர். இந்த வருவாயைக் கொண்டு நகர முழுவதும் நல்ல வீதிகள் அழகிய சாலைகள் புழுதியும் இலைச் சருகுகளும் இல்லாத வண்ணம் அடிக்கடி கூட்டிச் சுத்தம் செய்யப் பெறும் பொதுத் தோட்டங்கள் இரவில் வழி நன்கு வெளிச்சமாயிருக்க வுதவும் விளக்குக் கம்பங்கள் வைத்தியசாலைகள் சிறுவர்க்குக் கல்விச்சாலைகள் பொது ஜனங்கள் பழகச் சௌகரியமாயிருக்கும் பொது நிலயங்கள் முதலிய பலவற்றை அமைத்தல் வேண்டும். இவ்வாறு ஒரு நகரத்துக்குரிய சௌகரியங்களைக் கவனித்தற்காக ஏற்பட்டிருக்கும் சபைகள் நகர பரிபாலன சபைகள் எனப்படும். இங்கிலீஷ் பாஷையில் இவை முனிஸிபல் கௌன்ஸில் என்று பெயர் பெறும். பெரிய நகரங்களுக் கமைந்த இச்சபைகள் முனிஸிபல் கார்ப்போரேஷன் என்று சொல்லப்படும். இவற்றைப் போலவே தாலூகா ஜில்லா என்ற பகுதிகளுக்குரிய பொது ஜன சௌகரியத்தை மேற்பார்க்கும் சங்கங்களும் உண்டு.

ஜில்லாவின் சங்கங்கள் டிஸ்டிரிக்ட் போர்டு என்றும் தாலூகா சங்கங்கள் தாலுக் போர்டு என்றும் இங்கிலீஷில் பெயர்பெறும். டிஸ்ட்ரிக்ட் போர்ட்களிலும் தாலுக் போர்ட்களிலும் நடைபெறும் பொதுஜன சௌகரிய ஊழியங்களை நிர்வகிப்பதற்காக அநேக பிரமுகர் தெரிந்தெடுக்கப்படுவர். பலர்க்கும் நன்மைபுரியும் நோக்கமுடைய நல்லோர்கள் இச்

சங்கங்களில் அங்கத்தினர்களாதல் நலமாம். முனிஸிபாலிடியார் மேற்பார்வையில்லாத இடங்களில் அவர்கள் செய்தற்குரிய சகல பொது நன்மைகளேயும் செய்வதே இச்சங்கத்தார் வேலேயாம்.

ஜில்லா போர்டார் ஜில்லா முழுதும் பல பெரிய வூர்களுக்கும் சிற்றூர்களுக்கும் போகும் சாலேகளே அடிக்கடி செப்பனிட்டு நல்ல நிலேமையில் வைக்கவேண்டும். பொது ஜனங்கள் பிரயாணம் போகும்போது இடையிடையே தங்கி இளேப்பாறிச் செல்லச் சௌகரியமாய் இருக்கும்படி சத்திரங்கள் சாவடிகள் கிணறுகள் சிறு குளங்கள் முதலியவற்றை அமைத்து நன்கு பாதுகாத்து வரவேண்டும். பூர்வகாலத்து அரசர்கள் பிரபுக்கள் முதலிய தர்மசீலர்கள் பொதுப் பொருளாகச் சாஸனம்செய்து வைத்துப்போன அன்ன சத்திரம் முதலியவற்றின் வரவு செலவைக் கவனித்துத் தர்மம் தழைக்கும்படி செய்யவேண்டும். தாலூகா போர்டார் தாலூகா சம்பந்தமாய்ச் செய்யும் சகல வேலேகளேயும் மேற்பார்க்க வேண்டும். தாலூகாவின் உள்ளடக்கமாகிய யூனியன் போர்டுகளும் கிராம பஞ்சாயத் சபைகளும் இவர்கள் மேற்பார்வைக்குரியவைகளே. கிராமங்கள்தோறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தலும் இரண்டு மூன்று கிராமங்களுக்கு உதவும்படி அவற்றின் நடுவிடத்தில் வைத்தியசாலேகள் ஸ்தாபித்துப் பொது ஜனங்களின் சுக வாழ்வுக்குரிய மார்க்கங்களேக் கற்பித்தலும் இவர்கள் மேற்கொள்ளும் பெருந் தருமங்களாம்.

இவ்வளவு உயர்ந்த நோக்கமுடைய சங்கங்கள் பல இருந்தும் நம் நாட்டில் அநேக கிராமங்களில் சுகாதாரம்என்றுல் என்ன என்பதை அறியாத ஜனங்கள் ஆயிரக்கணக்காய் இருக்கிறுர்கள். கல்வி யென்பதென்ன? அதனுல் அடையும் பயனென்ன? என்ற வினுக்களுக்கு விடைகளே அறிந்த

வர்களைக் காட்டிலும் அறியாதவர்களே அதிகமா யிருக்கிறார் கள். இந்தியா என்றால் என்னவென்பது இன்னும் அநேக ஜனங்களுக்குத் தெரியாது. இவ்வளவுக்கும் காரணம் அறி யாமையே. அறியாமை என்ற பெரும் பகையை ஒழிப்பதே அறிவுடையோர் கடமையாகும். பொதுஜன நலத்துக்குரிய மேற்கூறிய எல்லாச் சபைகளும் நாமே நம்முடைய பிரதிநிதி களைக் கொண்டு நம் நாட்டின் நன்மையின் பொருட்டும் பொதுஜன சுகவாசத்தின் பொருட்டும் நிர்வகிக்கக்கூடிய ஸ்தல சுய ஆட்சி சபைகளாம். இவைகளை ஸ்தல சுய ஆட் சிச் சங்கங்கள் என்று கூறுவது வழக்கம். ஜில்லா போர்ட் தலைவரும் நம்மவரே. முனிஸிபல் தலைவரும் நம்மவரே. ஸ்தல சுய ஆட்சிப் பொறுப்பை வகிக்கும் மந்திரியும் நம் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பெற்ற உரிமை தாங்கிய நம் இனத்தவரே! 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்க' என்ற பழமொழிக்கேற்பச் சுய ஆட்சித் தொடக்கமாக இச்சங்கங் களில் நம் பொறுப்பை நாம் நன்கு நிர்வகித்துப் பழகிப் பிறகு நம் ராஜ்யத்தையே நிர்வகித்துஆளக்கூடிய திறமையைப் பெறலாம்.

## 21. ராணு பிருதிவி

இந்திய தேசத்தில் அநேக ஆயிர ஆண்டுகளாக ஆண்மை வீரம் அஞ்சாமை முதலிய குணங்கள் நிரம்பிய வீரர்க ளால் நிலையான புகழ்படைத்த நாட்டுப் பகுதி ராஜஸ்தானம் எனப்படுவதாம். ராஜஸ்தானத்தில் மீவார், மார்வார் என்ற இரண்டு நாடுகளும் மிகவும் பழமையான சரித்திரமும் பெரு மையும் பொருந்தியவையாம். மீவார் தேசத்திலே புகழ்பெற்ற பிரதாப சீலர்களிற் பிரதிவி ராய் என்பவன் மிக்க சிறப்புற்ற வன். அவன் வரலாற்றிலே ஒரு பகுதியை இங்கே கூறு வோம்.

மீவார் தேசத்திலே அரசு தாங்கியிருந்த மன்னர்களுள் ராணு ரவிமல்லன் என்பவர் மிக்க கீர்த்தி பெற்றவர். அவர்க்கு இரண்டு பெண் மக்களும் மூன்று ஆண்மக்களும் இருந்தனர். ஆண்மக்கள் மூவரும் முறையே சங்கிராம சிம்மன், பிரதிவி ராய், ஜயமல்லன் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுள் பிருதிவியே ஆண்மையும் வீரமும் அஞ்சாமையும் நிரம்பப் பெற்று மற்றவர் பொருமைப்படத்தக்க குணநலம் அமைந் திருந்தான்.

சங்கிராம சிங்கன் என்பவன் போர்க்களத்திலே சிங்கம் போன்றவன் என்று பொருள்படும் தன் பெயர்க்கேற்ப ஆண்மை படைத்தவனேயாயினும் பாபர் மன்னனோடு எதிர்த்து நின்று பெரும்போர் தொடுத்த வீரனேயாயினும் பிருதிவி என்ற பெயரைக் கேட்டவளவில் அஞ்சும் இயல்பு உடையவனாய் இருந்தான். ஒரு சந்தர்ப்பத்திலே குறிசொல் லும் கிழவி யொருத்தியின் வார்த்தையைக் கேட்டுப் பிருதி வியும் சங்கிராமனும் போர் புரிய நேர்ந்தது. அருகிலிருந்த பிறர் தடுத்தும் அப்போர் நில்லாமல் நிகழ்ந்ததாற் சங்கன் உடம்பெல்லாம் புண்பட்டுக் காட்டினுள் ஓடி மறைந்தனன்.

மூத்த குமாரனாகிய சங்கன் இவ்வாறு மறைந்ததை அறிந்த ரவிமல்ல ராணு பிருதிவியின் மேற் பெருஞ் சினங் கொண்டு 'அவன் மீவார் ராஜ்யத்தில் நுழைதலாகாது' என்று ஆணை பிறப்பித்தார். இதனை அறிந்த பிருதிவி தன் தோழர் சிலருடன் தன் வாளே துணையாகக்கொண்டு மீனவர் என்ற வேட வகுப்பினருள் ஒருவன் அரசு புரிந்துகொண்டிருந்த கோத்வாரம் என்ற நாட்டை யடைந்து அதைத் தந்திரத்தாற் கைப்பற்றினான். அங்கிருந்த வண்ணமே தன் பெருமையைப் பிறர் அறிய வாழ்ந்தான்.

சங்கன் மறைந்ததாலும் பிருதிவி நாடு கடத்தப்பட்டதா லும் தனக்கே ராஜ்யாதிகாரம் வரும் என்று நம்பிய ஜயமல்

லன் தீயோர் சேர்க்கையால் அழிந்து மதுபானத்தில் மூழ்கினன். அவன் தனது தீய நண்பன் ஒருவன் தூண்டுதலால், தம் சொந்த அரசினை யிழந்து மனம் வருந்தி மறைந்து வாழ்ந்த சூரதராவ் என்ற வீரர் மனம் புண்படும்படி தீயசெயல் ஒன்றைச் செய்து அதனால் உயிரிழந்தான். இதனை யறிந்த ரவி மல்ல ராணு, மக்கள் மூவரும் இவ்வாறு அரசுரிமைக்குப் பயன்படாது போனமைபற்றி மிகவும் வருந்தினர். பிருதிவியைத் திரும்பவும் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்தார். இச்சமயத்தில் ரவி மல்லரது இளைய சகோதரனாகிய சுராஜ் மல்லன் என்பவன் வேறு சிலரை உதவியாய்ச் சேர்த்துக் கொண்டு சித்தூரை முற்றுகையிட்டான். ரவி மல்ல ராணு மிகவும் வயது முதிர்ந்து புத்திர வியோகத்தால் மனம் தளர்ந்திருந்த மன்னரேயாயினும் தமது குலப் பெருமை குறையா வண்ணம் போர்க்களத்தில் வீரருக்கு ஊக்கம் காட்டிப் போர் புரிந்தார். அவர் உடம்பெல்லாம் வாளும் வேலும் அம்பும் பாய்ந்து புண்பட்டு மயங்கும் நிலையில் இருந்தார். பகைவர், வெற்றி தமக்கேயாம் என்று எண்ணி இறுமாந்த சமயத்தில் அங்கே பிருதிவி ராய் தைரியசாலிகளான பல வீரர்களோடு திடீரென்று தோன்றித் தந்தைக்கு உதவி செய்தான். பிருதிவியின் போர்த் திறமையாற் பகைவர் எல்லாரும் மிகுந்த புண்பட்ட உடம்புகளோடு புறங்கொடுத்தோடினர். இக்காட்சியைக் கண்ட ரவிமல்லர் தம் அரும் பெறல் மைந்தனை மார்புறத் தழுவி மனமுற வாயாரப் பாராட்டினர்.

பிருதிவி இவ்வெற்றியின் பிறகு தந்தையின் ஆணைக்கிணங்க சூரதராவ் என்ற அரசரது நாட்டை அவர்க்கு மீட்டுக் கொடுக்கவேண்டிய முயற்சிகள் எல்லாம் செய்தான். அந்த அரசரின் மகளாகிய தாரா என்ற பெண்மணி வில், வாள், வேல் முதலிய படைக்கலங்களைக் கொண்டு போர்புரி

TB 0.31(6) N33

யும் திறமை படைத்தவளாகையால் மாறுவேடம் பூண்டு பிருதிவியினுடன் பகைவன் நாட்டில் நுழைந்தாள். அங்கு தக்கதோர் சந்தர்ப்பத்தில் வஞ்சகத்தால் முன்னே தம் நாட்டைக் கைப்பற்றிக்கொண்ட பகைவனைத் தாரா தன் கையில் இருந்த வில்லிலிருந்து எய்த ஒரே அம்பாற் கொன்றாள். பிருதிவியின் வீரரும் அச்சமயத்தில் உதவியாய் வந்து சேர்ந்து கொண்டனர். அதனால் தைரியம் பெற்ற தாராவும் பிருதிவியும், பகைவரை யெல்லாம் ஊக்கத்தோடு போர் செய்து அழித்து நாட்டைக் கைப்பற்றினர். இவ்வரிய முயற்சியில் ஒருவர்க்கொருவர் துணையாய் நின்ற தாராவும் பிருதிவியும் பிறகு பெற்றோர் ஆணை பெற்றுக் கணவன் மனைவியர் ஆயினர். தாரா தனது நன்றியறிவைப் பிருதிவிக்கு வேறு விதம் தெரிவிக்க விரும்பவில்லை.

86143

சூரதராவ் தமது நாட்டைத் தம் மகள் முயற்சியால் அடைந்தார். தமது மருமகனை மனமார வாழ்த்தி அரசு புரியத் தொடங்கினார். பிருதிவி, மீவார் ராஜ்யத்தைத் தானே அடைய விரும்பாமல் முன்னே காட்டில் மறைந்த சங்கிராம சிங்கன் அதனை ஆள்க என்று விட்டுவிட்டுத் தான் தனது போர்த்திறமையாற் கைப்பற்றிய கோத்வாரம் என்ற நாட்டுக்குப் போய் நன்கு அரசுபுரிந்து வாழ்ந்தனன். வீரம் மிக்க ஒருவன் துணை வலியும் படைவலியும் இல்லாதிருப்பினும் தான் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வான் என்பதும் தந்தையின் ஆணையைக் கடவாது நடத்தல் தனயன் கடமையாம் என்பதும் பெண்மக்களாயிருப்பினும் கல்வி அறிவு, வீரம், திறமை முன்யோசனை முதலிய குணங்களாற் சிறந்தோர் உலகத்தாற் பாராட்டப் பெறும் பெரும்புகழ்க் குரியவராவர் என்பதும் தீமை செய்தவர் எவரேயாயினும் தண்டனைக் குரியவராவர் என்பதும் உயர்ந்த குலத்திற் பிறந்தவரேயாயினும் தீயோர் சேர்க்கையாற் கெடுவாராயின் உல

கத்தாராற் பழிக்கப்பட்டு அழிவர் என்பதும் துக்கமும் சுகமும் மாறிமாறியே வரும் என்பதும் இச்சரித்திரத்தால் அறியும் நீதிகளாம்.

---

## 22. இராமலிங்க சுவாமிகள்

சிதம்பரம் என்ற சிவ தலத்துக்கு வடமேற்கில் ஒரு காத தூரத்தில் மருதூர் என்றதோர் சிற்றூர் உளது. அவ்வூரிற் சென்ற நூற்றாண்டிலே இராமைய பிள்ளை என்பார் ஒருவர் வாழ்ந்தார். அவர் ஒருவர் பின் ஒருவராக ஐந்து பெண்டிரை மணந்து அவரனைவரும் இறந்ததால் ஆறும் மனைவியாகச் சின்னம்மை என்ற ஓர் பெண்மணியை மணந்தார். அக்காலத்திலே இராமைய பிள்ளை மருதூரிலும் அதற்கருகிலிருந்த சிறு கிராமங்களிலும் வாழ்ந்த சிறுவர்களுக்குத் தமிழ்க் கல்வி கற்பித்து வந்தார்.

இறைவன் திருவருளாற் சின்னம்மையார்க்கு இருவர் ஆண் மக்களும் இருவர் பெண் மக்களும் பிறந்தனர். பிறகு சிலவருஷங்கள் சென்றதன் பின் ஒரு சிவ யோகியர்க்கு அன்னமிட்டு உபசரித்து அவரிடம் திருநீறு பெற்ற தன் பயனாக இராமலிங்கர் என்ற குமாரர் பிறந்தார். அம் மைந்தர் பிறந்த ஆறும் மாதத்தில் இராமைய பிள்ளை சிவபதம் அடைந்தார். மூத்த குமாரராகிய சபாபதிப் பிள்ளை குடும்பப் பொறுப்பெல்லாம் மேற்கொள்ள நேர்ந்தது. அவர் தம்



இராமலிங்க சுவாமிகள்

தாயாரோடும் சகோதர சகோதரிகளோடும் சென்னை நகரம் வந்து அடைந்தார்.

அந்நாளிலே சென்னையிற் சிறந்த தமிழ் வித்துவானக விளங்கியவர் காஞ்சீபுரம் சபாபதி முதலியார் என்பவராவர். தந்தையை இழந்த மைந்தர் அப்புலவரை நெருங்கிக் கல்வி பயின்றனர். சில வருஷங்கள் சென்றபின் பிறகு மூத்தவரா கிய சபாபதிப் பிள்ளை புராணப் பிரசங்கம் செய்து குடும்ப பரிபாலனம் செய்துவரும் நிலைமையை அடைந்தார். சகோ தரிகள் தகுந்த குடும்பங்களில் மணம் புரிவிக்கப் பெற்று அமைதியோடு வாழ்ந்தனர். இராமலிங்கர்க்கு ஐந்து பிராயம் ஆனதும் சபாபதிப் பிள்ளை அவர்க்கு வித்யாரம்பம் செய் வித்துத் தமது ஆசிரியராகிய காஞ்சீபுரம் சபாபதி முதலியா ரிடம் கல்வி பயில அனுப்பினர். அங்குச் சென்று நான் கைந்து நாள் பாடம் படிப்பதற்கு முன்னே இராமலிங்கர், சென்னையிலுள்ள கந்தசாமி கோயிலை அடைந்து அருள் வாக்காக வந்த பாடல்களைப் பாடி வணங்கி வருவாராயினர். அருமையான பாடல்களைத் தெய்வத் திருவருளாற் பாடி வரும் இராமலிங்கரது பெருமையை அறிந்துகொண்ட சபா பதி முதலியார் அவர்க்குப் பாடம் பயிற்ற அஞ்சிச் சாக்குப் போக்குக்கள் சொல்லிக் காலந்தள்ளி வந்தார்.

உண்மையை உணர்ந்து கொள்ளாத மூத்த சகோதரர் தம் இளவலாகிய இராமலிங்கர் கல்விப் பயிற்சியிற் கவலை யில்லாமல் வீண் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறார் என்று எண்ணினர். அதை யறிந்த இராமலிங்கர் சென்னை யில் அப்பொழுது வாழ்ந்து வந்த வீட்டில் ஒரு அறையில் தம் முன்னிலையிலே கண்ணாடி ஒன்றை வைத்து மனத்தை ஒருமைப் படுத்தித் தியானம் செய்து முருகக் கடவுளைத் தரிசித்து மகிழ்ந்தார். வெகு விரைவிலே இறைவனருளால் எல்லா வகைக் கலைகளும் பிறரிடம் பயிலாமல் தாமே அறிந்து

கொண்டார். இப்படி ஒன்பதாம் பிராயம் முதல் இராம லிங்கர் தெய்வ பக்தியில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தார்.

மூத்தவராகிய சபாபதிப் பிள்ளை வழக்கம்போல ஒரு நாள் இரவிலே பிரசங்கம் செய்யப் போகக்கூடாமல் இருந்தார். தமக்கு உடம்பு சௌகரியமா யில்லாததைத் தெரிவிக்கும்படி பிரசங்கம் நடைபெறும் இடத்துக்குத் தம்பியாகிய இராம லிங்கரை அனுப்பினர். அவர் அங்கே போய் வழக்கம்போலப் பிரசங்கம் கேட்க வேண்டும் என்று ஆவலோடு கூடியிருந்த ஜனங்களைப் பார்த்துத் தம் தமையனார் வரக்கூடாமையைக் கூறினர். அங்கிருந்த சில பெரியோர்கள், "இன்று நீரே வாசித்துச் சொல்லும்" என்றனர். அதுகேட்ட இராமலிங்கர் பெரியோர்பேச்சை மறுத்து எதிர்மொழி கூற அஞ்சிப் புராண படனம் செய்யும் ஆசனத்தை அடைந்தார். முன்னாள் இரவிலே தம் தமையனார் நிறுத்திச் சென்ற இடத்திலிருந்து பிரசங்கம் செய்யத் தொடங்கி ஒரு செய்யுளை வாசித்துத் தெய்வத் திருவருளால் அன்று சொல்ல அமைந்த திருஞான சம்பந்தர் புராணத்தில் மிகவும் ஈடுபட்டு இரவு பன்னிரண்டுமணி வரையிற் பேசினர். ஒரு செய்யுள்கூட நிறைவேறாமல் அதற்கு மேல் நிறுத்த நேரிட்டது. கேட்கும்படி கூடியிருந்தார் எல்லாரும் தேகத்துக்கு இயல்பாய் உள்ள சிரமத்தைச் சிறிதும் அறியாமல் அவர் பேச்சின் மதுர ரசத்தில் மயங்கி மகிழ்ந்திருந்தனர். பிரசங்கம் நின்ற பிறகே இரவு நேரம் என்னாயிற்று என்பதைப்பற்றி ஒவ்வொருவரும் யோசிக்கத் தொடங்கினர். இந்நிலைமையை அனுபவித்தறிந்த சபையோர்கள் அவரே அப்புராணத்தைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அப்படியே அவர் பிரசங்கம் செய்து வருகையில் ஒரு நாள் மறைந்திருந்து கேட்ட சபாபதிப் பிள்ளை, 'இதுவரையும் தம்பி என்று எண்ணியிருந்தேன். இனி முருகக் கடவுளே என்று அறிந்து கொண்டேன்!' என்று

தம்மனைத் தலைவியிடம் கூறினர். அன்று முதலாக இராமலிங்கர்க்கு வீட்டிலே விசேஷ மரியாதைகள் நடந்தன. அவர் அதனைப் பொறுக்கமாட்டாமல் குடும்ப வாழ்விலிருந்து விலகித் தனித்து வாழத் தொடங்கினர்.

அக்காலத்தில் தினந்தோறும் திருவொற்றியூர்க்குச் சென்று தியாகேசப் பெருமானை வணங்கிப் பக்திப் பெரு வெள்ளத்தில் ஆனந்தித்து வாழ்ந்தார். இவ்வாறு குடும்பப் பொறுப்பினின்று விலகி வாழ்ந்து வரும் நாளிலே தம்மிடம் நெருங்கிய அன்பர்க்கெல்லாம் தமிழமுதம் பொழிந்து வசனமும் செய்யுளுமாகப் பல நூல்களை இயற்றினர். மனுச்சோழன் சரித்திரத்தில் உள்ள நீதிகள் நன்கு விளங்குமாறு இளைஞர்க்குப் பயன்படும்படி மனுமுறை கண்ட வாசகம் என்ற வசன நூலை இக்காலத்தில் அருளிச் செய்தனர். இப்படிச் சிலகாலஞ் செல்லவே அவருடைய சுற்றத்தார் அவர்க்கு அவரது தமக்கையார் மகளை மணஞ்செய்து வைத்தனர். இராமலிங்கர் இதுவும் தெய்வச் செயல் என்று எண்ணி மணம் புரிந்துகொள்ள இணங்கினராயினும் வங்காள தேசத்து மஹானாகிய இராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் போலத் தம்மை மணந்த பெண்மணியோடு ஒரு கணப்பொழுதேனும் இல்லற வாழ்விற் சிந்தை செலுத்தி வாழவில்லை. ஒருகால் இருவரும் தனித்திருக்க நேரிட்டபொழுது தம்மையும் உலகத்தையும் மறந்து திருவாசகத்தை மனமுருகிப் பாராயணம் செய்து கொண்டிருந்தார். அப் பெண்மணி இருந்த திசையையே பார்க்கவில்லை. இந்த வகையாலேனும் இராமலிங்கரை உலகவாழ்வில் ஈடுபடுத்தலாம் என்று கருதிய சுற்றத்தார் அனைவரும் தம் எண்ணம் பாழானது கண்டுவருந்தினர்.

உண்மையான அகத்துறவு படைத்த மனத்தையுடைய இராமலிங்கர் இதன்பிறகு சிலகாலங் கழித்துச் சிதம்பரம்

அடைந்தார். சிதம்பர நடராஜர்மீது அநேக பாடல்களை மனவுருக்கத்தோடு பாடி அங்கே சில நாள் வாழ்ந்தனர். பல சிவதலங்களையும் தரிசிக்கச் சென்று நிலையாக வாழ ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தைத் தேடினர். பல நாள் முயற்சியின் மேல் சிதம்பரத்திற் கருகிலுள்ள வடலூர் என்ற கிராமத்தைத் தம் கருத்துக்குப் பொருத்தமானதென அறிந்தனர். பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் போகின்ற பக்தர்கள் இடை வழியிலே சிறிது தங்கி இளைப்பாறத்தக்க சௌகரியங்கள் அமைக்கத்தக்க இடமாக இராமலிங்கர்க்கு அவ்வூர் தோன்றியது. எல்லார்க்கும் பொதுவிற் பயன்படும் ஒரு சிறந்த தருமத்தை இயற்றவேண்டும் என்று எண்ணி, அவ்வூரில் ஒரு அறச்சாலையை அமைத்தார். அவ்வறச் சாலையிலேயே தங்கியிருந்து அவ்வழியில் வரும் அன்பர்க்கெல்லாம் அன்னமும் நீரும் உதவித் தெய்வீகமாகச் சில அற்புதங்களைச் செய்து வாழ்ந்தார்.

பின்பு உத்தர ஞான சிதம்பரம் என்ற பெயரால் அங்கு ஒரு புண்ய க்ஷேத்திரம் அமைத்தனர். அத்தலத்திலே நடராஜ மூர்த்தியைத் தரிசனம் செய்ய ஒரு சபை அமைத்தனர். அச்சபையில் எழு திரைகளினுள்ளே அகண்ட தீபம் ஒன்றை ஏற்றி வைத்தார். அந்த ஜோதியையே இன்றைக்கும் அத்தலத்திற்குப் போவோர் தரிசிக்கின்றனர். இராமலிங்கர் அங்கே ஆயிரக்கணக்கான அன்பர்கள் இரவும் பகலும் ஓயாது வந்து போய்க்கொண்டிருந்ததால் அற்புதச் செயல்கள் பல நிகழ்த்தி நாள்தோறும் தம்மிடம் வந்தோர்க்குத் தெய்வத் திருவருளைப் பற்றிப் பிரசங்கித்து வந்தனர். பல நாட்டு மக்களும் அவரது கல்விச் செல்வத்தையும் அருட் செல்வத்தையும் பற்றிக் கேள்வியுற்று அங்கே கூடலாயினர். இவ்வளவு பெருமை அடைந்த பிறகும் இப்பெரியார் முன்போலவே ஆடம்பரமின்றி வாழ்ந்து வந்தனர்.

அந்த சபையை அடுத்த சித்திவளாகம் என்ற மாளிகை யில் இராமலிங்க சுவாமிகள் வழக்கம்போற் பிரசங்கம் செய்துகொண்டிருக்கையில் ஒரு நாள் தனித்திருக்க விரும் புவதாகக் கூறி அன்பரை வெளியில் நிறுத்திச் சில தினங் களில் வெளியில் வருவேன் என்று ஒரு அறையினுட் சென் ருர். அவ்வறையின் கதவைத் தாழிட்டுப் பூட்டி அன்பர் பலர் காவல் இருந்தனர். பல நாளாகியும் அவர் வெளி வர வில்லை. காவலாயிருந்த அன்பர்களும் பிற அதிகாரிகளும் அதிசயித்துக் கதவைத் திறந்து பார்க்கையில் அவர் உருவம் காணப்படவில்லை. அவர் தியானத்திற்கு அங்கமாக உப யோகித்த பொருள்கள் இருந்தன. தெய்வத் திருவருளால் ஜீவன் முக்தரும் சித்தருமாக விளங்கிய இப்பெரியோர் பின் ெருரு காலத்தில் திரும்பி வருவர் என்ற நம்பிக்கை கொண்டு பலர் இன்னும் அங்கு முன்னிருந்த வண்ணமே பூசை முத லியன செய்து வருகின்றனர். இம்மஹான் சரித்திரத்தில் நாம் கவனிக்கத்தக்கது ஒன்று உண்டு. இவர் பாடல்கள் மிகவும் உருக்கம் உள்ளவை. சமரச வுணர்ச்சியுடையவை. தெய்வச் செயலால் இயலாத அற்புதம் இல்லை.

---


## 23. ஆகாய கமனம்

நம் நாட்டுப் பழங் கதைகளிலும் புராண இதிகாசங்களிலும் ஆகாய விமானம் போன்ற பல அற்புதப் பொருள்க ளைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். இராவணனிடம் புஷ்பகம் என்றவோர் விமானம் இருந்ததென்றும் அது எவ்வளவு ஜனங்கள் ஏறினும் இடங்கொடுத்ததென்றும் இராம பிரான் வெற்றியின் பிறகு அவ்விமானத்தில் அமர்ந்தே அயோத்திக்கு வந்தார் என்றும் இராமாயணத்தால் அறி கிறோம். பிற்காலத்திலே இயன்ற நூல்களிலும் இத்தகைய விமானங்களைப் பற்றிய அற்புதச் செய்திகள் வருகின்றன. இவையெல்லாம் பெரும்பாலும் பொய்க்கதை யென்றே நம்மில் அநேகர் எண்ணியிருந்தோம். ஆனல் இந்நாளிலே நம் நாடெங்கும் அடிக்கடி காணப்படுகின்ற ஆகாய விமானங்

களைப் பார்த்த பிறகு அந்தக் கதைகளிலும் உண்மை யிருக்க லாமோ என்று ஊகிக்க இடமுண்டாகிறது. இக்காலத்து மனிதர் முயற்சியாற் பலர்க்கும் பயன்படும் இவ்வகை விமானங்கள் எங்ஙனம் செய்யப்படுகின்றன என்பதை நாம் அறிய வேண்டுவது அவசியமாகும்.


ஐரோப்பா கண்டத்திலும் அமெரிக்கா முதலிய நாகரீக மிக்க நாடுகளிலும் வாழும் சாஸ்திர விற்பன்னராகிய அறிஞர்கள் உலக உபகாரமான ஒரு புது உண்மையை உணர வேண்டி உயிரையும் கொடுக்கத் துணியும் முயற்சியுடையார் ஆவார்கள். அந்த நல்லோர் முயற்சியால், பிரகிருத சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், தத்வ சாஸ்திரம், வைத்ய சாஸ்திரம் முதலியன இந்நாளில் எவ்வளவோ சீர்த்திருத்தம் பெற்றிருக்கின்றன. இவர்களை நாம் பொது வகையில் மேனாட்டு அறிஞர்கள் என்று அழைக்கிறோம்.

மனிதன் நிலத்திலும் நீரிலும் பலவகை வாகனங்களின் உதவியாற் பிரயாணம் செய்து விசேஷ லாபம் அடைந்து வருவதை அறிந்த இந்நல்லோர்கள் சென்ற நான்கைந்து நூற்றாண்டுகளாக ஆகாயத்திலும் பிரயாணம் செய்ய வழியுண்டோ என ஆராய்தலாயினர். இவ்வாறு ஆராயும் கூட்டத்தில் அநேகர் மிக்க கீர்த்தி படைத்த பௌதிக சாஸ்திரிகளும் ரஸாயன சாஸ்திரிகளும் ஆவர். கி. பி. 1214-ஆம் ஆண்டில் அக்கினி யாவி என்ற திரவாக்கினியின் உதவியால் ரோஜர் பேகன் என்பார் ஒரு சிறு கூண்டு செய்து ஆகாயத்தில் விட்டார். அது சிறிது தூரம் மேலே சென்றது. அந்



பலூன் என்னும் புகைக்கூடு


நாளில் அவர் முயற்சியை எவரும் பாராட்டவில்லை. பின்னர்ச் சில வருஷங்கள் கழிந்து ஹென்றி கவென்டிஷ் என்ற சாஸ்திரி உஷ்ண மிகுதியுள்ளதும் தீப்பற்றும் இயல்புள்ளதும் ஆகிய ஜலவாயுவைக் கண்டுணர்ந்து கூறினர். ஒரு வருஷத்திற்குப் பிறகு ஒரு மாணவன் அவ்வாயுவைக் காகிதக்கூண்டு ஒன்றில் அடைத்து மேலே பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தான். இவர்கள் முயற்சி இவ்வளவில் நின்றது.



ஜெர்மானியர் கண்டுபிடித்த ஸெப்ளின் என்ற ஆகாயக் கப்பல்


பலவகை வாயுக்களின் தன்மையை விளக்கும் சிறு நூல் ஒன்று மேற்சொல்லிய கவென்டிஷ் சாஸ்திரியாரால் வெளியிடப்பட்டது. அதைப் படித்துப் பார்த்த பிரான்ஸ் தேசத்துச் சகோதரர் இருவர் புகையின் மூலம் கடுதாசி முதலிய இலேசான பொருள்களாற் செய்யப் பெற்ற கூண்டுகளைப் பறக்கவிட்டுப் பரிசோதனைகள் செய்தனர். பிறகு எல்லோரும் ஜலவாயுவைக் கூண்டில் அடைத்துப் பறக்கவிடல் நலம் என்று எண்ணினர். பட்டுத் துணியைக் கொண்டு கோள வுருவமாகச் செய்து ரப்பர்ப் பசையை மேலே தடவி ஆகாயத்திற் பறக்கத்தக்க கூண்டுகள் செய்து ஜலவாயுவை உபயோகித்தனர். மனிதர் தாமும் ஏறி உட்கார்ந்து மேலே

சென்று வரத்தக்க கூண்டுகளைப் பிறகு செய்யத் தொடங்கினர். இதற்கு பலூன் என்று பெயர் இதில் செல்லுவோர் இறங்க வேண்டுமானால் பராச்சியூட் என்னும் கொடைபோன்ற இறங்கு கருவியைக்கொண்டே இறங்குவார்கள். இந்தக் கூண்டுகள் காற்று எந்தப் பக்கம் விசையாய் நோக்கி அடிக்குமோ அப்படிப் போய்த் தங்கள் சக்தி குறைந்த விடத்திலே இறங்கத் தக்கவையாய் அமைந்திருந்தன. நிலத்திலும் நீரிலும் இஷ்டம்போல் வேண்டிய திசைகளை நோக்கி மனிதன் செலுத்தும் இயந்திரங்களைப் போல இவை அமையவில்லை. இந்நிலையைக் கண்ட அறிஞர் பலரும் ஜனக் கூட்டத்தாலும் வண்டிப் பிரயாண மிகுதியாலும் அடிக்கடி நிலத்திலே ஏற்படும் உயிர்ச் சேதத்தைக் குறைக்கவும் விரைவாக ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகவும் ஆகாய விமானப் பிரயாணமே தக்கதென்று எண்ணி மனிதர் பலர் அச்சமின்றிப் பிரயாணம் செய்யத்தக்க விமானங்கள் அமைக்க முயற்சி செய்தனர். இம்முயற்சியில் முதன் முதலாக வெற்றி பெற்றவர் மான்ஷியர் ஸ்ான்டாஸ் டுமோன்ட் என்பவராவர். பெட்ரோலின் உதவியைக் கொண்டு யந்திரசாலையில் நிலத்திலே ஓடுகிற மோடார் வண்டிகளைப் போல ஆகாய விமானங்களும் ஓடவேண்டுமென்று அவர் முயன்று பயன் பெற்றார். பிறகு புதுப்புது வகைகள் தோன்றின. அமெரிக்கரும் ஜெர்மனியரும் பிரெஞ்சுக்காரரும் இங்கிலீஷ்காரரும் தம் தம் அறிவின் நுட்பத்திற்கும் ஆராய்ச்சிக்கும் தக்கபடி புதுவிமானங்கள்



பராச்சியூட் என்னும் அவரோகணி

அமைக்கலாயினர். ஜெர்மனியரால் அமைக்கப் பெற்றதற்கு ஸேப்ளின் என்றுபெயர். முதலிலே சாய்வாகவும் பிறகு நிமிர்ந்தும் இறக்கை யடித்துப் பறந்து செல்லும் கழுகு பருந்து முதலிய பறவைகளின் இயக்கத்தைப் பார்த்து அநேகமாய் உருவத்தில் அப்பறவைகளைப் போலவே தோன்றும்படி ஆகாய விமானங்கள் அமைத்துப் பறந்து வெற்றி பெற்றனர். இம்முயற்சியிற் பூரண வெற்றி அடைந்தவர் ரைட் சகோதரரே என்று கூறப்படும். இச்சகோதரர் 1903-ஆம் வருஷம் முதல் முதல் தம் புது முயற்சியை உலகெங்கும் பரப்பினர்.



எரோப்ளேன் என்னும் ஆகாய விமானம்

பூமியின் கவர்ச்சி விசையை மீறி ஆகாயத்தில் பறக்க வேண்டியிருக்கும் இவ்விமானங்கள் இலேசான அலுமினியம் போன்ற உலோகங்களால் அமைந்திருத்தல் பொருத்தமே. இவ்விமானங்களில் கடலிலும் ஆகாயத்திலும் செல்லக்கூடியவை ஒருவகை. ஆகாயத்தில் மாத்திரம்

பறக்கக்கூடியவை மற்ருெரு வகையாம். இரட்டைச் சிற குள்ள விமானங்கள் பெரும்பான்மையாம். ஒற்றைச் சிறகு உள்ளவைகளும் உண்டு. ஆகாய விமானம் பறவை போன்ற உருவம் உடையதாகையால் தலை, உடல், இறக்கைகள், வால் என்ற நான்கு பகுதிகளை உடையதாய் இருக்கும். உடலின் முன்புறத்தில் யந்திர விசையினுற் சுற்றிச் சுழல்கின்ற இரண்டு கைகள் உண்டு. விமானத்தை ஒட்டுவோன் எல்லா யந்திரக் கருவிகளும் தன் கைக்கெட்டும் நிலையில் உடலுக்குள் முன் பகுதியில் உட்கார்ந்திருப்பான். பிரயாணிகள் உட்காரும் இடம் மேலும் கீழும் பக்கங்களிலும் நல்ல கட்டுக் காவல் உடையதாய் நடுவிடத்தில் அமைந்திருக்கும். அந்த இடத்தி லும்கூட அவர்கள் காதைப் பஞ்சால் அடைத்துக்கொண்டு உடல் நடுக்கமும் பதற்றமும் உண்டாகா வண்ணம் கட்டிக் கொண்டு அமர்ந்திருப்பர். நெடு நாட் பழக்கம் உடையவர் களுக்கு இவ்வளவு முன் ஜாக்கிரதை வேண்டியிராது. ஆகா யத்திற் பறப்பதற்கு முன்பு சிறிது தூரம் நிலத்தில் ஓடியே சாய்வாக ஏற வேண்டியிருப்பதால் முன் புறத்தில் இரண்டு சக்கரங்கள் அமைந்திருக்கும். ஒட்டும் நிலையில் இருப்பவன் முன் வருவனவற்றைக் கவனிக்கத் தக்கவாறு முகத்தை நன்கு மூடிக் கண்ணுக்கு மிக்க சக்தியுள்ள கண்ணுடிகள் அணிந்துகொண்டிருப்பான். முதல் முதல் விமானம் கிளம் பும்போது உள்ளே இருப்போர்க்கு மிக்க சப்தமும் அசை வும் ஆட்டமும் உண்டாவதால் கிறுகிறுப்புத் தோன்றும். மேலே போகப் போக எல்லாம் அமைந்து ஒழுங்காய்ப் போவதாகத் தோன்றும். விமானத்திலே இந்நாளில் அட்லான் டிக் ஸமுத்திரத்தையும் பஸிபிக் சமுத்திரத்தையும் துணை யின்றி இடையில் தங்காமல் மேல் நாட்டு விமானிகள் பலர் கடந்து புகழ் பெறுகின்றனர். லிண்ட்பர்க் என்ற அமெரிக்க ரும் அமிஜான்ஸன் என்ற இங்கிலீஷ் பெண்ணும் ஆகாய

விமானப் பிரயாணத்தில் சமீப காலத்திலே மிக்க கீர்த்தி படைத்தோராவர்.

ஆகாய விமானம் மணிக்கு இருநூறு மைல் வேகமாகச் செல்வதும் உண்டு. எவ்வளவு உயரம் வேண்டுமாயினும் மேலே கிளம்பலாம். ஆயினும் சாதாரணமாகப் பதினைந்தாயிரம் அடி உயரத்துக்கு மேற் பறப்பதில்லை. முன்னாளிலே மனிதர் காண்பதற்கரியவையா யிருந்த நாடுகளையும் கடல்களையும் காடுகளையும் மலைகளையும் இந்நாளில் ஆகாய விமானத்தின் உதவியாற் பரிசோதிக்கின்றனர். சகாரா பாலைவனத்தையும் ஆர்டிக், அண்டார்டிக் சமுத்திரங்களையும் அவற்றுக் கடுத்துள்ள நாடுகளையும் ஹிமய மலையையும் நெருங்கிப் பார்த்தறிய இந்நாளில் ஆகாய விமானம் உதவி செய்கிறது. நம் நாட்டுப் பிரபல டாக்டராகிய ரங்காச்சாரியார் ஆகாய விமானத்தின் உதவியால் விரைவிலே பிரயாணம் செய்து பல வூர்களுக்கும் சென்று நோயாளிகளைக் குணப்படுத்துகிறார் கடவுள் அருளால் மனிதன் செய்யும் முயற்சிகள் எல்லாம் நன்மை தருகின்றன. தீமை சில இருப்பினும் நாளடைவில் மறையும்.

---

## 24. தக்கன தகாதன

தாய் :—மகனே வருக! மதலாய் வருக!
நன்னெறி யறிந்து நடக்கப் பழகுக
தீநெறி செல்வோர் சேர்க்கை யொழிக்க
மெய்யினைக் கொள்ளுக பொய்யினைத் தள்ளுக
மனத்தி லொன்று வாயி லொன்றாகப்
பேசும் வஞ்சகர் பிரியம் அகற்றுக.
உழைப்பில் விருப்பம் உடையவ ரோடு
சேர்ந்து பயன்பெறும் சிறப்பினை யடைக

சோம்பித் திரியும் தொழிலிலா வீணரைக்
கனவிலும் நண்பெனக் கருதா தொழிக
மைந்தனே கேளாய்! தந்தையும் தாயும்
அரசனும் தமையனும் அறிவருள் குருவும்
அறநெறி புகன்று முறைமுறை யுன்னை
நல்ல வழியில் நடத்துவோ ராதலால்
அவரிடம் பக்தியும் அன்பும் உடையனாய்ப்
பணிவொடு வணக்கமாய்ப் பழகுதல் வேண்டும்.

மகன் :—பெற்று வளர்த்துப் பிரியமாய்ப் போற்றும்
தந்தையும் தாயும் சிந்தை யகலாத்
தெய்வ மென்னத் தெளிவேன் யானே
'எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்'
'மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்'
என்னுநன் மொழியெலாம் இனிதினின் அறிவேன்
அன்னை தந்தை யண்ணன் ஆசிரியர்
வணங்கத் தக்க குணம் பொருந்தியவர்
என்னநன் குணர்வேன் அன்னையே யேனோ
அரசனைப் போற்றுதல் அறமென வுரைத்தீர்!
அரசனின் மிக்கவர் அவனியில் இலரா?

தாய் :—மைந்தகேள் நின்றன் சிந்தையி லுதித்த
ஐய மகல அறநெறி புகல்வேன்
அரச னென்போன் ஆரென எண்ணினாய்
பெற்றோ ரினுமிக வுற்றோ னவனே.
தோன்றாத் துணையாம் தொழிலிலாத் தெய்வம்
உண்டென மன்பதை யுணர வுணர்த்தத்
தோன்றுந் துணையாய்த் தோன்றுவோன் அவனே.
நன்னெறி நின்றால் நன்மை விளைப்பன்
தீநெறி சென்றால் திருத்தம் செய்வன்.
எளியரை வலியவர் எவ்வகை யானும்

வாட்டா வண்ணம் வகுத்து நிறுத்தவன்
உறவின ரரசனி னுயர்ந்தோர் யாரே?
மைந்தனே யுலகினில் வாழுமக்க ளெலாம்
மறநெறி யடையா தறநெறி நிலைக்கப்
புரியும் பெரியோன் அரசனென் றுணர்க.
கள்ளுங் கொலையுங் களவுஞ் சூதும்
தள்ளத் தக்கன தள்ளார் தம்மைத்
தண்டனை வழியால் தகுநெறி காணச்
செய்யுஞ் செயலால் தேயமனைத்தும்
புகழும் பெயரும் பொருந்தி விளங்க
அருமை மக்களை அன்னை புரத்தல் போல்
நாட்டினில் வாழும் கூட்டமா மக்களை
அன்பினிற் காப்போன் அரசனென் றறிக.
ஆண்டினில் மூத்தோர் அறிவினில் மூத்தோர்
என்னுமின்னவரை யியல்பாய் வணங்கல்போல்
எண்ணற் கரிய இனிய பன்னலமும்
தன்னல வுணர்வு தன்னமு மின்றிச்
செய்யு மக்கட் கையமில் பயன்தரும்
அரசனை எவர்க்கு மதிகனு மென்னவே
எண்ணி வணங்குக வியற்றும் வினையெலாம்
அரசன் விதித்த அறநெறிக் கிணங்க
அமையு மாறுற்றுணர்ந் தமைவுடன் வாழ்க.
அன்பின் செல்வமே அருமருந்தன்ன
மைந்தனே! யான்சொல் மந்திரம் என்ன
இவை கடைப்பிடிக்க விவற்றினு மேலாய்ச்
சிறுவரா யிருப்போர் நெறியெனக் கடைப்பிடித்
தொழுகத்தக்க வுயர் நெறியில்லை.
மகன் :-அறிந்தேன் அன்னையே அறிந்தேன் அறிந்தேன்
அன்னை தந்தை அண்ணன் அரசன்

எழுத்தறிவித்தோ னென்னு மிவ்வைவரைத்
தெய்வ மென்னத் தெளிய வேண்டும்
இவராலன்றோ என்னையும் பிறரையும்
இவ்வுலகனைத்தையும் இயக்கு மொருவன்
உளனென வுணர்வன் உயர்நெறி செல்வன்
அன்பின் செல்வத் தமைவினை யடியேன்
நன்குணர்ந்திட வருள் நற்றாய் நீவிர்
சொல்லிய நெறியே நல்லிய னெறியெனச்
செல்லத் துணிந்தேன் சிறப்பினை யடையவே

தாய்:—மைந்தனே கேளாய் மறைப்பொருளாகிய
தெய்வந் தெளிதலும் தெளிந்தவர் தம்மை
வணங்கலும் அன்னவர் வாய்மொழி தன்னைக்
கைக்கொண் டொழுகலும் கடமையா மென்னக்
கொண்டவர் உயர்வும் விண்டவர் இழிவும்
அடைவது காண்பாய் ஆதலால் என்றும்
நன்மை மனத்தால் நாவால் உடலாற்
செய்பவனாகிச் சிறப்புடன் வாழ்கவே.


---

## 25. கொசுக்களும் விஷஜ்வரமும்

**நாம்** தினந்தோறும் காண்கின்ற கொசு, ஈ, பேன், மூட்டைப்பூச்சி முதலிய சிற்றுயிர்களால் நமக்கு எவ்வளவோ உபத்திரவங்கள் உண்டாகின்றன. இவற்றுள் கொசுக்களும் ஈக்களும் மனிதரினத்துக்கு மிகவும் கொடிய விரோதிகள் என்பதை நாம் அவசியம் உணரவேண்டும். நம் நாடெங்கும் வருஷந்தோறும் பல நகரங்களிலும் கிராமங்களிலும் நடைபெறுகின்ற சுகாதார வாரக் கொண்டாட்டங்களில் கொசுக்கள் ஈக்கள் முதலிய சிற்றுயிர்களால் நமக்கு உண்டாகும் தீங்குகள் படங்கள் மூலமாக நன்கு விளக்கிக் காட்டப்படு

கின்றன. இந்தப் பாடத்தில் கொசுக்களால் நமக்கு விளையும் தீங்கு என்ன என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

வீடுகளின் அருகிலே கட்டுக்கிடையாய் இருக்கும் தண்ணீர் உள்ள இடங்களிலும் சிறு குட்டைகளிலும் நாற்றப் பொருள்கள் குவிந்து கிடக்கும் தொட்டிகளிலும் இவை




1. முட்டைகள். 2. புழு. 3. புழுவின் மற்றொரு தோற்றம். 4. கொசு.

போன்ற வேறு இடங்களிலும் கொசுக்கள் உண்டாகின்றன. கொசுக்கள் உற்பத்தி ஆவதற்கு அரையங்குல ஆழமுள்ள தண்ணீர் தேங்கிய நீர் நிலையே போதுமானது. அவை தண்ணீரிலேயே முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கின்றன. முட்டையிலிருந்து வெளிப்படும்போது சிறு புழுப்போல் நெளியும்

தன்மை உடையனவாயிருக்கின்றன. தண்ணீரிலேயே பிறந்து வாழ்ந்தபோதிலும் மூச்சு விடுவதற்காக அடிக்கடி அவை வெளியிலே வரும். கொசுக்களில் அனோபிலேன் என்றும் குலிஸைன் என்றும் இரண்டு ஜாதிகள் உண்டு. கூர்ந்து கவனித்தால் அவை வெவ்வேறு விதமாயிருப்பது நன்கு புலப்படும். அனோபிலேன் ஜாதிக் கொசுக்கள் நீர் மட்டத்துக்கு அடியிலே தட்டையாய்க் கிடந்து துள்ளித் துள்ளிப் பின் பக்கமாக அசையும். குலிஸைன் ஜாதிக் கொசுக்கள் நேரில் தலைகீழாய்த் தொங்கும். அவை நெளிந்து புரண்டு முன்னோக்கி அசைந்து செல்லும். இவ்விருவகைக் கொசுக்களும் ஒருவார காலத்துக்குள் தண்ணீரில் துள்ளித்திரியும் சிறிய பூச்சியுருவம் அடையும். பிறகு மூன்று தினங்களில் நாம் சாதாரணமாய்க் காணும் கொசுக்களாக மாறிப் பறந்து செல்லும். பறப்பதற்கு முன்பே தாம் உண்ட உணவின் பலத்தால் ஒரு வரிசை முட்டையிட்டுவிடும். மனிதர் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தே முட்டையிடவேண்டியிருப்பதால் பறக்கும் பருவம் வாய்ந்த கொசுக்கள் மனிதர் வாழும் இடத்தை நோக்கிச் செல்லும். அனோபிலேன் ஜாதிக் கொசுக்களே விஷஜ்ஜுரத்தை வளர்க்கக் கூடியவையாம். குலிஸைன் ஜாதிக் கொசுக்கள் நாளடைவில் யானைக்கால் முதலிய வியாதிகளைப் பரப்பும் என்பர்.

விஷஜ்வரம் கொசுக்களால் எப்படிப்பரவுகின்றது என்று இனி ஆராய்வோம். விஷஜ்வரம் முறைக்காய்ச்சல், குளிர்க் காய்ச்சல், மலேரியா என்ற நான்கு பெயர்களையுடைய இவ் வியாதி மிகவும்கொடியதே. உலகமுழுவதும் இவ்வியாதி பரவி யிருக்கிறது. இதனால் வருஷந்தோறும் பல்லாயிர மனிதர்கள் மரணம் அடைகின்றனர். பின்னும் பலர் உயிரோடு பிழைத்தாலும் தேகத்தின் சக்திக் குறைவைப் பெறுகின்றனர். இந்த வியாதி பரவுதற்கும் அழுக்குக் குப்பையும்

அசுத்தக் காற்றும் நீரும் காரணங்களாம். கொசுக்கள் இவ் வியாதியை ஒருவரிட மிருந்து மற்றொருவர்க்கு எடுத்துச் செல்லும் கருவிகள் ஆகின்றன. இந்த வியாதி பற்றிய நோயாளியின் உடம்பில் உள்ள நோயணுக்களைக் கொசுக்கள் தம் உமிழ் நீரின் உதவியால் நோயற்றவர் உடம்பிலே கடித்துப் பரப்புகின்றன.

சாதாரணமாக மனிதர் இரத்தத்தில் சிவப்பணுக்கள் வெள்ளை அணுக்கள் என்று இரண்டுவித ஜீவஅணுக்கள் உண்டு. சிவப்பணு இருப்பதால் தான் இரத்தம் சிவப்பாகத் தெரிகிறது. விஷஜ்வரத்துக்கு மூலகாரணமாக வுள்ள நோயணுக்கள் இரத்தத்துட் புகுந்ததும் இந்தச் சிவப்பணுக்கள் நாசமடைகின்றன. அதனால் இந்த வியாதியாற் பீடிக்கப் பட்ட நோயாளிகளின் உடம்பு வெளுத்து மெலிந்து போகின்றது. நோயணுக்களில் மூன்று வகை உண்டு. அவை முறையே இருபத்து நான்கு நாற்பத்தெட்டு எழுபத்திரண்டு மணிக்கு ஒரு முறை விருத்தியாகும். மனிதரத்தத்தில் இந்நோயணுக்கள் முட்டையிலிருந்து வெளிப்பட்டு வயிற்றுக்குள்ளும் பிற இடங்களிலும் பரவத் தொடங்கியதும் நோய்காணுகின்றது. அந்நோய் உட்புகுந்த நோயணுக்களின் தன்மைக்குத் தக்கபடி தினந்தோறுமாவது ஒரு நாள் இடைவிட்டாவது மூன்று நாள் இடைவிட்டாவது ஜ்வரம் வரும். அணுதரிசினி என்ற பூதக்கண்ணாடியின் உதவியைக் கொண்டு இரத்தத்தைப் பரிசோதனை செய்வதால் எவ்வகையான நோயணுக்கள் பற்றியிருக்கின்றன என்று அறிந்து கொள்ளலாம்.

நோயாளிகளின் இரத்தத்தில் எங்கும் பரவியுள்ள இந்நோயணுக்களைப் பெண்கொசுக்கள் ரத்தத்தோடு உறிஞ்சி நோயற்றவரைக் கடிக்கும் போது அவர் உடம்பிலே பாய்ச்சுகின்றன. இவ்வாறு நோயற்றவர் இரத்தத்திற் கலந்த நோயணுக்கள் நன்கு வளர்ந்து இரத்தம் முழுவதும் கலந்து

முட்டை வெடித்து நோயைப் பரப்பக் குறைந்தது இரண்டு வாரம் ஆகும். லக்ஷக்கணக்கான அணுக்கள் உடம்பில் உண்டான பிறகே நோய்காணுகின்றது. ஒரு மனிதனிட மிருந்து மற்றொரு மனிதனுக்கு நோய்வரக் கொசுக்களே காரணமாயிருப்பதால் முறைக்காய்ச்சல் உண்டாவதற்கு உதவியாய் மனிதன் கொசு மனிதன் என்று மாறிமாறிச் சேர்ந்த ஒரு சங்கிலி ஏற்படுகிறது. இந்தச் சங்கிலியில் இடையில் உள்ள தொடர்பாகிய கொசுவை அழித்து விட்டால் அல்லது கொசு உண்டாவதற்கே வழியில்லாமற் செய்து விட்டால் அது அறுந்து போகும். நோயும் வளர வழியிராது.

சக்தியுள்ளவர்கள் கொசுவலை கட்டிக் கொள்ளலாம். கொசுக்கள் உண்டாகக் காரணமாக வுள்ள அழுக்கும் குப்பையும் நீர்த்தேக்கமும் இல்லாமற் செய்யவேண்டும். குவினைன் என்ற மருந்தை முன்னும் பின்னும் சிறிது சிறிதாக உடம்பிற் சேர்த்தால் இந்நோயணுக்கள் வளரா. சௌக்கியமாய் வாழ விரும்பாதவர் எவரேனும் இருப்பரோ?

# செய்யுட் பாடம்

## 26. பஞ்சதந்திரக் கதை

### I. காகம் நாகத்தைக் கொன்ற கதை

கோடுறு சினையிற் காகங் கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங் கதுபெறு முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட நலிந்துள மெலிந்து வாடி. (1)

தன்னுயிர்ப் பாங்கனை சம்புக னருகு போயிங்
கென்னசெய் குவனு னென்ன விதைக்கொல வரிதோ நீபோய்
மன்னவன் றேவி யாடு மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்தி லென்ன. (2)

காகமப் படியே செய்யக் காவல னேவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை யீர்ந்தன ரீரும் போதில்
நாகமங் கிருந்து சீற நறுக்கின ரிருதுண் டாக
ஆகையா லுபாயத் தாகா திலையென வரையும் பின்னும். (3)

### II. சிங்கத்தை முயல் கொன்ற கதை

சிறுமுயல் சிங்கந் தன்னைக் கொன்றதொன் றுண்டே தென்னிற்
செறியுமோர் காட்டி லேயோர் சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியு நாளில் விலங்கெலா மொருங்கு கூடி. (4)

ஆணிளஞ் சிங்க மேயுன் னடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம் விதத்தினிற் றினமொன் றாக
ஊணுனக் களிப்போ மென்ன வுண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்று யருந்தியங் கிருக்கு நாளில். (5)

தனிமுய லொன்றுக் கோர்நா டன்முறை வருத லோடும்
இனியது விடாது நம்மை யெனினுமோ ரெடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து வென்றுநா முய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்து முய்யு நமக்குநற் புகழுண் டென்றே. (6)

கருதியச் சிங்கத் தின்றன் கடும்பசி வேளை தப்பி
வருதலு முயலை நோக்கி மன்னனம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும் பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் னுரைநீ யென்று மனந்தனிற் சினந்து கூற. (7)

ஐயநின் பசித்த வேளைக் கடியனேன் வந்தே னுங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு வெருவியங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்க மாங்கோர் பருமுழை புகுந்த பின்னர்
துய்யவுன் பக்கல் வந்தேன் சுவாமியென் றிறைஞ்சி நிற்க. (8)

சிங்கநா மல்லால் வேறோர் சிங்கநீ கண்டா யாகில் [யோர்
அங்கத்தைக் காட்டு வாவென் றழைத்தலு மழைத்துப் போ
பங்கமும் புனலுஞ் சேர்ந்த பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை யெட்டிப் பார்த்த ததனிழ லுருவந் தோன்ற. (9)

தன்னுரு நிழலைத் தானே சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித் துளங்கியே யுயிரி ழந்த
தென்னலா லுபாயத் தாலே யாவையும் வெல்ல லாமென்
றின்னமோர் நண்டு கொக்கை யீர்ந்ததோர் கதையுஞ் சொல்லும்.

## III. நண்டு கொக்கைக் கொன்ற கதை

### வேறு

மீனென்றையு மேதின்றுடல் மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பானண்டுத னைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பானண்டிதை நீயிங்குறை பண்பேதுரை யென்ன. (11)

என்றென்றுரை செய்வேனினி யானெங்ஙன முய்வேன்
கொன்னுந்திய வலைகாரர்கள் கூடிக்குள மேரி
மன்னுந்தட மெல்லாமிக வளைந்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன் முதற் சேரப்பிடித் தாரே. (12)

இந்தக்குள நாளைக்கென வெண்ணிக்கொடு போனார்
அந்தப்படி வந்தேபிடித் தவர்காவிலெ டுத்தே
சந்தக்கடை தொறுமீன்கடை தானேயென விற்பார்
எந்தப்படி யிவர்தப்புவ தெனவெண்ணி யிருந்தேன். (13)

அந்தப்பழி காரர்வரு முனமேயொரு பாயஞ்
சிந்தித்தன னெப்படி செய்தாலவை யுய்யும்
எந்தப்படி யானும்மழைத் திங்கேவரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குள மெய்தும்படி செய்வேன். (14)

என்றேபக ராசன்சொல வியனண்டதை நம்பிச்
சென்றேபல மீனொன்றை செயவேயவை கூடி [டேகிக்
நன்றேயென வரவொவ்வொரு நடைக்கொன்றுகொண்
கொன்றேசில தின்றேசில கொடும்பாறையி லுலர்த்தி. (15)

அலவன்றசை தனையுண்டிட வதையுங்கொடு செலவந்
நிலமெங்கணு மீனென்புக ணிறைகொண்டது கண்டே
நலதிங்கிது பலமீனையு நனிதின்றது நமையுங்
கொலவந்தது நாமும்மிது கொலுமுன்கொலு வோமே. (16)

நம்மால்வரு பிழையேயிது நாமும்மந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேற்கொலு மதிலேயொரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினி செய்வேமென வேண்ணி
அம்மாபகன் கழுத்தைக்கவை யடியானெருக் கியதே (17)

நெருக்குண்டற வீழ்ந்தே கொக்கு நீங்கிற்றுயி ரலவன்
இருக்குந்தல மேகித்தன தினத்தோடிருந் ததுவே
செருக்கும்பகை பெரிதாகிலுஞ் சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைந்தாலதின் முடியாதது முளதோ (18)

## 27. மூதுரை

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 1.

நல்லார் ஒருவர்க்குச் செய்த வுபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர். 2.

அட்டாலும் பால் சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. 4.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 5.

மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா—கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும். 6.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். 7.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 8.

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறவார் உறவு. 9.

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம். 10.

## 28. நல்வழி

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறி முறையில்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி. 11.

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 12.

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை—நல்லார்

அறிந்திருப்பார் ஆதலினல் ஆங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. 13.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 14.

ஒரு நாளுணவை யொழி யென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னே வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னேடு வாழ்தல் அரிது. 15.

ஆவாரை யாரே யழிப்பர் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம்புவி யதன் மேல். 16.

சேவித்துஞ் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 17.

ஆன முதலி லதிகம் செலவானன்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய் ஏழ்பிறப்புந் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனம் நாடு. 18.

ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 19.

ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடும்

தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 20.

## 29. நீதி வெண்பா

ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போர்
ஈயுமவர் வருந்தா தேற்றலறம்—தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றியரிப்பதுபோல்
அச்சமுற வாங்கல் அகம். 21.

மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே [றே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளுமொன்
கனமொன்று மேலவர்தங்கண். 22.

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கை நயத்தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. 23.

கல்லார் பலர் கூடிக் காதலித்து வாழினுநூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு. 24.

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றி பலகுட்டி பயந்ததனா லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது. 25.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 26.

## 30. சதகச் செய்யுள்

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டு தாம் தேடுபொருள் அவர் தேடுபொருளவர்
கோதில் புகழ தம் புகழெனத் [கொள்
தேடுற்ற அவர்நிந்தை தந்நிந்தை தந்தவம்
தீதிலவர் தவமா மெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
சீறரவ மணிவாய் தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருடல் நிறைந்திடும்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோதரரெனக்
கூறுவதுவே தருமமாம்
ஆடிச்சிவந்த செந்தாமரைப் பாதனே
அனக வெமதருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளர்
அறப்பளீசுர தேவனே —அறப்பளீசுர சதகம்

19
031(1)
1133

சிங்கார வனமதில் உதிப்பினுங் காகமது
தீஞ்சொல் புகல் குயிலாகுமோ
திரை யெறியும் வாவியிற் பூத்தாலுமே கொட்டி
செங்கஞ்ச மலராகுமோ
அங்கா னத்திற் பிறந்தாலு முயலானது
ஆனையின் கன்றாகுமோ
36143
ஆண்மையாகிய நல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர் பெரியோ ராவரோ
சங்காடு பாற்கடலில் பிறந்தாலும் நத்தைதான்
சாளக் கிராமம் ஆமோ
தடமேவு கடனீரிலே யுப்பு விளையினும்
சார சர்க்கரை யாகுமோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்த மெய்ஞ்ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
மலைமேவு குமரேசனே. —குமரேச சதகம்

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS—1933.

# புதிய பிரசுரங்கள்

## துரைத்தனத்தார் அங்கீகரித்தவை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மீனாக்ஷி தமிழ் வாசகம்—முதல் புத்தகம் | 0 | 2 | 0 |
| 2. | ,, ,, இரண்டாம் புத்தகம் | 0 | 3 | 0 |
| 3. | ,, ,, மூன்றாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 4. | ,, ,, நான்காம் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5. | ,, ,, ஐந்தாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6. | தமிழ் நாட்டு வாசகம்—முதல் புத்தகம் | 0 | 2 | 0 |
| 7. | ,, ,, இரண்டாம் புத்தகம் | 0 | 3 | 0 |
| 8. | ,, ,, மூன்றாம் புத்தகம் | அச்சில் | | |
| 9. | ,, ,, நான்காம் புத்தகம் | அச்சில் | | |
| 10. | ,, ,, ஐந்தாம் புத்தகம் | அச்சில் | | |
| 11. | ,, ,, ஆறாம் வகுப்பு | 0 | 7 | 0 |
| 12. | ,, ,, ஏழாம் வகுப்பு | 0 | 8 | 0 |
| 13. | ,, ,, எட்டாம் வகுப்பு | 0 | 9 | 0 |
| 14. | Premier English Readers–Primer | 0 | 2 | 0 |
| 15. | ,, ,, ,, Book I | 0 | 4 | 0 |
| 16. | ,, ,, ,, Book II | 0 | 5 | 0 |
| 17. | ,, ,, ,, Reader I | In the Press | | |
| 18. | ,, ,, ,, Reader II | In the Press | | |
| 19. | ,, ,, ,, Reader III | In the Press | | |
| 20. | A History of India—for the use of higher forms by K. S. Srikantan | 1 | 14 | 0 |
| 21. | A History of England | In the Press | | |
| 22. | A Text-Book of Elementary Economics | In the Press | | |

**V. S. Swaminathan, Publisher, Madura.**